

# කාර්ය සාධන වාර්තාව
# செயலாற்றுகை அறிக்கை
# PERFORMANCE REPORT
# 2012

## කෘෂිකර්ම අමාත්‍යාංශය
## கமத்தொழில் அமைச்சு
## Ministry of Agriculture


"ගොවිජන මන්දිරය"
80/5 රජමල්වත්ත පාර
බත්තරමුල්ල

"கொவிஜனமந்திரய",
80/5, ரஜமல்வத்தை வீதி
பத்தரமுல்லை

"Govojana Mandiraya"
80/5, Rajamalwatta Lane
Battaramulla

## நோக்கு

“உணவுப் பாதுகாப்பையும் தேசிய சுபீட்சத்தையும் நோக்காகக் கொண்ட வினைத்திறன் மிக்கதும், விளைவுப் பெருக்கமுடையதும், பலமானதுமான விவசாயத்துறை”

## செயற்பணி

“இயற்கை வளங்களை நிலைபேறான விதத்தில் முகாமை செய்வதினூடாக சமூக ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட புதுவடிவமுடையதும் வர்த்தக நோக்கத்துடன் கூடியதுமான, பூகோல ரீதியில் போட்டிமிகு உற்பத்திகளை மேற்கொள்ளும்

## உள்ளடக்கம்


| | | | | |
|---|---|---|---|---|
| 01. | **முன்னுரை** | | | 4 |
| 02. | **பொதுவான நிருவாகம்** | | | 6-15 |
| | | i. | பணியாட் தொகுதி விபரம் | |
| | | ii. | மனிதவள அபிவிருத்தி | |
| | | iii. | சொத்துக்களை எடுத்துக் கொள்ளல் | |
| | | iv. | பழுதுபார்ப்பு, நிர்மாணிப்புகள், பராமரிப்புப் பணிகள் | |
| 03. | **அமைச்சின் பிரதான அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள்** | | | 16-45 |
| | | 1. | "நாம் நடுவோம் - நாட்டைக் கட்டியெழுப்புவோம்" விசேட நிகழ்ச்சித் திட்டம் | |
| | | 2. | மண்வளப் பாதுகாப்புச் சட்டத்தை அமுல் செய்தல் | |
| | | 3. | நுண் நீர்ப்பாசன அபிவிருத்தியும், மழை நீரைப் பேணிப் பாதுகாத்தலும் | |
| | | 4. | உலர் வலய ஜீவனோபாய பங்குபற்றல் மற்றும் ஒத்துழைப்பு வழங்கல் நிகழ்ச்சித் திட்டம் (IFAD) | |
| | | 5. | உணவு உற்பத்திக்கான ஜப்பான் கொடை - 2KR | |
| | | 6. | பயிர் முன்னறிவிப்பு நிகழ்ச்சித் திட்டம் | |
| | | 7. | சேதனப் பசளை உற்பத்தியையும் பாவனையையும் ஊக்குவிக்கும் நிகழ்ச்சித் திட்டம் | |
| | | 8. | ஜப்பான் எதிர்மறை நிதியின் (2KR) கீழ் அரசாங்க விதை உற்பத்திப் பண்ணைகளை அபிவிருத்தி செய்தல் (முருங்கன், பரந்தன்) | |
| | | 9. | தேசிய விவசாய ஆராய்சிக் கொள்கை(NARP) | |
| | | 10. | பெரிய வெங்காய விதை உற்பத்தி நிகழ்ச்சித் திட்டம் | |
| | | 11. | தேசத்திற்கு மகுடம் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் | |
| | | 12. | மன்னார் மாவட்டத்தில் இடம்பெயர்ந்த மக்களின் உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு ஒத்துழைப்பு வழங்கல் | |
| | | 13. | அரிசி ஏற்றுமதி நிகழ்ச்சித் திட்டம் - 2012 | |
| 04. | **விசேட அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள்/கருத்திட்டங்கள்** | | | 46-51 |
| 05. | **கமக்காரர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்** | | | 52-54 |
| 06. | **அமைச்சின் கீழ் நிறுவனங்களினால் அமுல் செய்யப்பட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள்/கருத்திட்டங்கள்** | | | 55-88 |
| | | (i) | விவசாயத் திணைக்களம் | |
| | | (ii) | இலங்கை ஹதபிம அதிகார சபை | |
| | | (iii) | ஹெக்டர் கொப்பேகடுவை விவசாய ஆராய்ச்சி, பயிற்சி நிறுவகம் | |
| | | (iv) | தேசிய உணவு ஊக்குவிப்புச் சபை | |
| | | (v) | இலங்கை தேசிய விவசாய ஆராய்ச்சி, கொள்கைப் பேரவை | |
| | | (vi) | அறுவடைக்குப் பிந்திய தொழில்நுட்ப நிறுவனம் | |
| | | (vii) | தேசிய உரச் செயலகம் | |
| | | (viii) | வரையறுக்கப்பட்ட இலங்கை உரக் கம்பனி | |
| | | (ix) | வரையறுக்கப்பட்ட கொழும்பு கொமர்ஷல் உரக் கம்பனி | |
| 07. | **நிதி அறிக்கை** | | | 89-94 |
| | | 7.1 | அமைச்சின் நிதி முன்னேற்றம் | |
| | | 7.2 | அமைச்சின் உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகள் | |

# முன்னுரை

கடந்த வருடத்திற்கான அமைச்சின் செயலாற்றுகை அறிக்கை வெளியிடப்படுகின்ற இவ் வேளையில், இவ் வெளியீட்டிற்கு எனது குறிப்பை வழங்குவதில் பெருமிதம் அடைகின்றேன். கடந்த வருடம் அமைச்சிற்கும் அதே போன்று முழு நாட்டிற்கும் சவால் நிறைந்த வருடமாக இருந்த தென்றே கருதுகின்றேன். நீண்டகால அபிவிருத்தியை நோக்காகக் கொண்டு பாரிய அளவில் வளங்கள் முதலீடு செய்யப்படுகின்ற யுகத்தில் நாடு என்ற ரீதியில் அடைய வேண்டிய இலக்குகளோ பல. எனவே, இதில் விவசாயத்துறையின் பங்களிப்பு மிக மிக முக்கியமானது.

தேசிய பொருளாதாரத்தின் பிரதான பிரிவாகக் காணப்படுகின்ற விவசாயத்துறையின் பிரதான நிறுவனங்களாக விளங்குவது கமத்தொழில் அமைச்சும் அதனுடன் இணைந்த நிறுவனக் கட்டமைப்பும் ஆகும். அமைச்சின் அபிவிருத்தி இலக்குகளை நோக்கிப் பயணிக்கும் போது விவசாயத் திணைக்களம், இலங்கை ஹதபிம அதிகார சபை, ஹெக்டர் கொப்பேகடுவை விவசாய ஆராய்ச்சி, பயிற்சி நிறுவகம், அறுவடைக்குப் பிந்திய தொழில்நுட்ப நிறுவனம், இலங்கை விவசாய ஆராய்ச்சி, கொள்கைப் பேரவை, தேசிய உணவு ஊக்குவிப்புச் சபை, தேசிய உரச் செயலகம், வரையறுக்கப்பட்ட இலங்கை உரக் கம்பனி, வரையறுக்கப்பட்ட கொழும்பு கொமர்ஷல் உரக் கம்பனி முதலான நிறுவனங்கள் அளப்பரிய பங்காற்றுகின்றன.

2012 ஆம் வருடத்தில் எமது அமைச்சினால் 13 பிரதான அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் அமுல் செய்யப்பட்டன. இதற்காக கடந்த வருடம் கமத்தொழில் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் சார்பில் ரூ. 1,878.541 மில்லியன் நிதி அமைச்சிற்கு ஒதுக்கப்பட்டதுடன், இதில் ரூ. 1,533.398 மில்லியன் நிதி முன்னேற்றத்தை அடைய முடிந்த து.

கமத்தொழில் அபிவிருத்தியின் மீதும் திட்டமிடப்பட்ட விவசாயத்தின் மீதும் முக்கிய கவனம் செலுத்தி, அமைச்சும் அமைச்சுடன் இணைந்த நிறுவனங்களும் செயற்படுவதன் மூலம், மிகச் சிறந்த பெறுபேறுகளை அடைய முடியுமென்பதுடன், விவசாயத்துறையின் தேசிய பங்களிப்பை தொடர்ந்தும் உயர் மட்டத்தில் தக்கவைத்து தேசிய உற்பத்தியில் உச்ச பங்களிப்பை வழங்க முடியுமென நம்புகின்றேன்.

2012 ஆம் வருடத்தில் அமைச்சின் பணிகளை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கு விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சர் மாண்புமிகு மஹிந்த யாப்பா அவர்களும், அமைச்சரின் பணியாட் தொகுதியினரும் வழங்கிய ஒத்துழைப்பை நன்றியுணர்வுடன் நினைவுகூற விரும்புகின்றேன்.

அமைச்சின் இச் செயலாற்றுகை அறிக்கையை தயாரிப்பதற்குத் தேவையான தகவல்களை வழங்கி ஒத்துழைத்த சகல பிரிவுகளுக்கும், திணைக்களத் தலைவர்களுக்கும், இப் பணிகளை செவ்வனே நிறைவேற்றிய திட்டமிடல், நடவடிக்கை, மதிப்பீட்டுப் பிரிவிற்கும் எனது நன்றிகள் உரித்தாகட்டும்.

***விஜேரத்ன சகலசூரிய***
**செயலாளர்**
**கமத்தொழில் அமைச்சு**

கமத்தொழில் அமைச்சிற்குப் பொறுப்பாகச் செயற்பட்ட அமைச்சர்கள்/செயலாளர்கள்/திணைக்களத் தலைவர்கள்

(2012.01.01 தொடக்கம் 2013.03.31 வரை)

- <u>கமத்தொழில் அமைச்சர்</u>

  மாண்புமிகு மஹிந்த யாப்பா அபேவர்தன அவர்கள்

- <u>அமைச்சின் செயலாளர்</u>

  திரு. விஜேரத்ன சகலசூரிய

- <u>கமத்தொழில் அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களுக்குப் பொறுப்பாகச் செயற்பட்ட திணைக்களத் தலைவர்கள்</u>

1. திரு. கே.ஜீ. ஸ்ரீயாபால - விவசாயப் பணிப்பாளர் நாயகம் - விவசாயத் திணைக்களம்
2. திரு. ஈ.எம். அபயரத்ன - பணிப்பாளர் - ஹெக்டர் கொப்பேகடுவை விவசாய ஆராய்ச்சி பயிற்சி நிறுவகம்
3. கலாநிதி (திரு.) ஜயந்த டயஸ் சமரசிங்ஹ - தலைவர் - இலங்கை விவசாய ஆராய்ச்சி கொள்கைப் பேரவை
4. திரு. நந்தசேன ஹேரத் - தலைவர் - இலங்கை ஹதபிம அதிகார சபை
5. திரு. ஜகத் பாலித ஜயவர்தன - தலைவர் - அறுவடைக்குப் பிந்திய தொழில்நுட்ப நிறுவனம்
6. திருமதி குமுதினி குணசேக்கர - தலைவர் - தேசிய உணவு ஊக்குவிப்புச் சபை
7. திரு. ரஞ்சன் தர்மவர்தன - பணிப்பாளர் - தேசிய உரச் செயலகம்
8. திரு. புத்திக்க மடிஹஹேவா - தலைவர் - வரையறுக்கப்பட்ட இலங்கை உரக் கம்பனி
9. திரு. என்.எஸ்.எம். சம்சுதீன் - தலைவர் - வரையறுக்கப்பட்ட கொழும்பு கொமர்ஷல் உரக் கம்பனி

## 02. பொதுவான நிருவாகம்

### i. பணியாட் தொகுதி விபரம்

**2012.12.31 ஆம் திகதிக்கு அமைச்சின் பதவிநிலை உத்தியோகத்தர்கள்**

| | உத்தியோகத்தரின் பெயர் | பதவி |
|---|---|---|
| 1. | திரு. டப். சகலசூரிய | செயலாளர் |
| 2. | திரு. ஏ.எல்.ஏ. அசோக்க சிறிவர்தன | மேலதிக செயலாளர் (நிருவாகம்) |
| 3. | திரு. ஜீ.ஏ.எம்.எஸ். எமிட்டியகொட | மேலதிக செயலாளர் (கமத்தொழில் அபிவிருத்தி) |
| 4. | கலாநிதி (திரு.) டீ.பி.ரீ. விஜேரத்ன | மேலதிக செயலாளர் (விவசாயத் தொழில்நுட்பம்) |
| 5. | திரு. எஸ்.எல்.ஜீ. பந்துசிறி | பிரதம கணக்காளர் |
| 6. | திரு. எச்.ஜீ.ஜீ.ஜே. தர்மசேன | பணிப்பாளர் (அபிவிருத்தி) |
| 7. | திரு. ஜீ.டீ.ஜே.எல். சுனில் கோவின்ன | பணிப்பாளர் (கமத்தொழில் சேவைகள்) |
| 8. | திருமதி எல்.யூ.என். சுமனசேக்கர | பணிப்பாளர் (விவசாயத் தொழில்நுட்பம்) |
| 9. | திரு. டப்.டீ. தர்மசிறி | பணிப்பாளர் (இயற்கை வளங்கள்) |
| 10. | திரு. எல்.கே. ஹத்துறுசிங்ஹ | பணிப்பாளர் (கருத்திட்டம்) |
| 11. | கலாநிதி (திரு.) ஜே.டீ.எச். விஜேவர்தன | பணிப்பாளர் (சேதனப் பசளை) |
| 12. | திரு. என்.ஜீ. ரத்நாயக்க | பணிப்பாளர் (திட்டமிடலும் கண்காணிப்பும்) |
| 13. | திரு. டப்.கே.எல்.ஈ. வலல்லாவிட்ட | பிரதம உள்ளகக் கணக்காய்வாளர் |
| 14. | திருமதி எஸ்.ஏ. ஸ்ரீயாணி | கணக்காளர் (கொள்முதல்) |
| 15. | திரு. எஸ்.டீ. நந்தன | கணக்காளர் (கொடுப்பனவு) |
| 16. | திரு. பீ.என்.என். ஜயநெத்தி | பிரதிப் பணிப்பாளர் (கருத்திட்டம்) |
| 17. | திரு. எம்.ஜீ.ஏ.பீ. குமார | பிரதிப் பணிப்பாளர் (சேதனப் பசளை) |
| 18. | திருமதி டீ.என். ஹெட்டிஆரச்சி | சிரேஷ்ட உதவிச் செயலாளர் (தாபனம்)/(பதில்) |
| 19. | திருமதி பி.எச்.சீ. ஷிரோமாலீ | உதவிப் பணிப்பாளர் (அபிவிருத்தி) |
| 20. | திருமதி ஆர்.ரீ. புலத்சிங்ஹல | உதவிச் செயலாளர் (நிருவாகம் I) |
| 21. | திருமதி எம்.ஏ.எஸ்.கே. குணவர்தன | உதவிப் பணிப்பாளர் (அபிவிருத்தி) |
| 22. | திருமதி கே.எஸ்.பீ. பியதிஸ்ஸ | உதவிச் செயலாளர் (தாபனம்) |
| 23. | திரு. ஈ.எம்.எஸ். ஏக்கநாயக்க | உதவிப் பணிப்பாளர் (திட்டமிடல்) |

| | | |
|---|---|---|
| 24. | திரு. தம்மிக்க எதிரிசூரிய | உதவிப் பணிப்பாளர் (இயற்கை வளங்கள்) |
| 25. | திருமதி எம்.கே. ராஜபக்ஷ | உதவிச் செயலாளர் (நிருவாகம் II) |
| 26. | திரு. பி. ஆரியபால | மொழிபெயர்ப்பாளர் |
| 27. | திருமதி எஸ்.வய். அபேவர்தன | செயலாளரின் இணைப்புச் செயலாளர் |
| 28. | திரு. பீ.ஏ.எம். கருணாரத்ன | புள்ளிவிபரவியலாளர் |
| 29. | திரு. எல்.எல்.பீ. கித்சிறி பெரேரா | உதவிச் செயலாளர் (தொழில் உறவு) |
| 30. | திருமதி பீ.ஏ.எஸ். சந்திரிகா | நிருவாக உத்தியோகத்தர் (பதில்) |
| 31. | திரு. டப்.ஜே. பெரேரா | நிருவாக உத்தியோகத்தர் (பதில்) |

**2012.01.01 தொடக்கம் 2012.12.31 வரை இடமாற்றம் பெற்றுச் சென்ற பதவிநிலை உத்தியோகத்தர்கள், பிற உத்தியோகத்தர்கள், கனிஷ்ட உத்தியோகத்தர்கள்**

| | உத்தியோகத்தரின் பெயர் | பதவி | திகதி |
|---|---|---|---|
| 1. | திரு. டீ.எம்.ஆர்.பி. திசாநாயக்க<br>இல.நி.சே. விசேட தரம் | நிறைவேற்றுப் பணிப்பாளர்<br>இலங்கை ஹதபிம அதிகார சபை | 2012.06.18 |
| 2. | திருமதி துஷார டி பதிரகே<br>இல.நி.சே. I | சிரேஷ்ட உதவிச் செயலாளர் (நிருவாகம்) | 2012.08.01 |
| 3. | திரு. பீ.எல். நந்தசிறி<br>இல.நி.சே. விசேட தரம் | மேலதிக செயலாளர் (நிருவாகம்) | 2012.08.15 |
| 4. | திருமதி எல்.பீ. லியனகே<br>இல.நி.சே. I | சிரேஷ்ட உதவிச் செயலாளர் (தாபனம்) | 2012.09.26 |
| 5. | திரு. ஐ.யூ.கே. செனவிரத்ன<br>இல.தி.சே. III | உதவிப் பணிப்பாளர் (திட்டமிடல்) | 2012.12.20 |
| 6. | திரு. பீ.டப்.எல். வீரசிங்ஹ<br>அ.மு.உ.சே. III | அரச முகாமைத்துவ உதவியாளர் | 2012.05.04 |
| 7. | திருமதி எஸ்.எச். ஹெட்டிஆரச்சி<br>அ.மு.உ.சே. III | அரச முகாமைத்துவ உதவியாளர் | 2012.08.07 |
| 8. | திரு. கே.ஜீ.எஸ்.சீ. ஆரியதாச<br>அ.மு.உ.சே. II | அரச முகாமைத்துவ உதவியாளர் | 2012.10.17 |
| 9. | திருமதி என்.டீ.வீ. தம்மிகா | விவசாய அபிவிருத்தி உதவியாளர் | 2012.02.02 |
| 10. | திரு. ஆர்.எல்.எச். ராஜபக்ஷ | அபிவிருத்தி உதவியாளர் | 2012.03.14 |
| 11. | திருமதி எச்.ஜீ.என். சுமனதிலக்க | அபிவிருத்தி உதவியாளர் | 2012.04.02 |
| 12. | திருமதி கே.எஸ்.எஸ். ஜயசேன | விவசாய உற்பத்திக் கருத்திட்ட உதவியாளர் | 2012.04.23 |
| 13. | திருமதி எம்.சீ. பாலசூரிய | அபிவிருத்தி உதவியாளர் | 2012.05.02 |
| 14. | திருமதி டீ.கே.எஸ்.என். குணவர்தன | அபிவிருத்தி உதவியாளர் | 2012.05.02 |
| 15. | திரு. ரீ. விதானபதிரண | அபிவிருத்தி உதவியாளர் | 2012.05.10 |
| 16. | திரு. எம்.எம்.என். பண்டார | விவசாய அபிவிருத்தி உதவியாளர் | 2012.05.16 |

| | | | |
|---|---|---|---|
| 17. | திரு. டீ.ஏ.டீ. ஜீவந்த சில்வா | விவசாய அபிவிருத்தி உதவியாளர் | 2012.05.16 |
| 18. | திரு. பி.எஸ்.கே. த சில்வா<br>அலுவலகப் பணியாளர் சேவை II | அலுவலகப் பணியாளர் | 2012.01.27 |
| 19. | திரு. ஏ.டப்.எஸ்.எச்.பி. அட்டுகொட<br>சாரதி சேவை IIஆ | சாரதி | 2012.01.09 |
| 20. | திரு. எஸ்.ஓ.எம்.எல். ஜயலத்<br>சாரதி சேவை IIஆ | சாரதி | 2012.03.14 |
| 21. | திரு. கே.பீ.ஏ.யூ. சில்வா<br>சாரதி சேவை IIஆ | சாரதி | 2012.04.30 |

**2012.01.01 தொடக்கம் 2012.12.31 வரை இடமாற்றம் பெற்று வந்த பதவிநிலை உத்தியோகத்தர்கள், பிற உத்தியோகத்தர்கள், கனிஷ்ட உத்தியோகத்தர்கள்**

| | உத்தியோகத்தரின் பெயர் | பதவி | திகதி |
|---|---|---|---|
| 1. | திரு. டப். சகலசூரிய<br>இல.நி.சே. விசேட தரம் | செயலாளர் | 2012.01.02 |
| 2. | திரு. எம்.ஜீ.ஏ.பீ. குமார<br>இல.க.சே. II/I | உதவிப் பணிப்பாளர் (சேதனப் பசளை) | 2012.01.05 |
| 3. | திரு. ஜீ.டீ.ஜே.எல். சுனில் கோவின்ன<br>இல.க.சே. I | பணிப்பாளர் (கமத்தொழில் சேவை) | 2012.03.13 |
| 4. | திரு. எம்.பி.ஆர். புஷ்பகுமார<br>இல.நி.சே. I | நிறைவேற்றுப் பணிப்பாளர்<br>இலங்கை ஹதபிம அதிகார சபை | 2012.07.02 |
| 5. | திரு. ஏ.எல்.ஏ. அசோக்க சிறிவர்தன<br>இல.நி.சே. விசேட தரம் | மேலதிச செயலாளர் (நிருவாகம்) | 2012.08.21 |
| 6. | திருமதி எம்.கே. ராஜபக்ஷ<br>இல.நி.சே. III | உதவிச் செயலாளர் (நிருவாகம்) | 2012.09.24 |
| 7. | செல்வி ஏ.ஜீ.என்.பீ. கருணாரத்ன<br>அ.மு.உ. சேவை II | அரச முகாமைத்துவ உதவியாளர் | 2012.01.17 |
| 8. | திரு. பீ.ஜீ. சுசந்த ஜயலத்<br>அலுவலகப் பணியாளர் சேவை III | அலுவலகப் பணியாளர் | 2012.02.01 |

**2012.01.01 தொடக்கம் 2012.12.31 வரை ஓய்வுபெற்றுச் சென்ற பதவிநிலை உத்தியோகத்தர்கள், பிற உத்தியோகத்தர்கள், கனிஷ்ட உத்தியோகத்தர்கள்**

- **2012.01.01 தொடக்கம் 2012.12.31 வரையிலான காலப்பகுதியில் பதவிநிலை உத்தியோகத்தர்கள் எவரும் ஓய்வு பெற்றுச் செல்லவில்லை**

| | உத்தியோகத்தரின் பெயர் | பதவி | திகதி |
|---|---|---|---|
| 1. | திரு. எம்.எம்.எஸ்.பி. மல்லவ<br>அ.மு.உ. சேவை I | அரச முகாமைத்துவ உதவியாளர் | 2012.04.01 |
| 2. | திரு. பீ.ஏ.டீ. ஹேமரத்ன<br>அ.மு.உ. சேவை I | அரச முகாமைத்துவ உதவியாளர் | 2012.10.25 |
| 3. | திரு. யூ.எச். கருணாசிறி | போக்குவரத்து உதவியாளர் | 2012.04.26 |
| 4. | திரு. எம்.ஆர்.எல். ஹேமசந்திர<br>சாரதி சேவை II | சாரதி | 2012.05.04 |
| 5. | திரு. ஈ.பீ. சமரசிங்ஹ<br>சாரதி சேவை II | சாரதி | 2012.05.06 |
| 6. | திரு. டப்.எம். லயனல் அமரதுங்க<br>சாரதி சேவை IIஆ | சாரதி | 2012.10.05 |
| 7. | திரு. டப். சோமசிறி<br>சாரதி சேவை I | சாரதி | 2012.12.09 |
| 8. | திரு. ஜீ.எச். பியதாச<br>அலுவலகப் பணியாளர் சேவை I | அலுவலகப் பணியாளர் | 2012.02.05 |
| 9. | திரு. எல். ஷெல்ரன் சில்வா<br>அலுவலகப் பணியாளர் சேவை I | அலுவலகப் பணியாளர் | 2012.09.09 |

**2012.01.01 தொடக்கம் 2012.12.31 வரையிலான காலப்பகுதியில் பதவியுயர்வு பெற்று இடமாற்றம் பெற்றுச் சென்ற உத்தியோகத்தர்கள்**

| | உத்தியோகத்தரின் பெயர் | பதவி | திகதி |
|---|---|---|---|
| 1. | திருமதி எச்.பீ.எஸ். ஹேவாவசம்<br>அ.மு.உ. சேவை I | அரச முகாமைத்துவ உதவியாளர் | 2012.07.13 |

**2012.01.01 தொடக்கம் 2012.12.31 வரையிலான காலப்பகுதியில் பிற சேவைகளுக்கு விடுவிக்கப்பட்ட உத்தியோகத்தர்கள்**

| | உத்தியோகத்தரின் பெயர் | பதவி | திகதி |
|---|---|---|---|
| 1. | திருமதி எம்.பீ.எஸ். அமரதுங்க<br>அ.மு.உ. சேவை I<br>(ஆசிரியர் சேவைக்கு) | அரச முகாமைத்துவ உதவியாளர் | 2012.04.23 |

ii. **மனித வள அபிவிருத்திப் பிரிவு**

**பயிற்சி நிகழ்ச்சிகள்**

| விபரம் | செலவு விடய இல. | | செலவு செய்யப்பட்ட தொகை (ரூ.) |
|---|---|---|---|
| உள்நாட்டுப் பயிற்சி | 118-1-2-2401 | அமைச்சு | 787,102.00 |
| | 118-2-3-2401 | கமத்தொழில் அபிவிருத்திப் பிரிவு | 43,750.00 |
| வெளிநாட்டுப் பயிற்சி | 118-1-1-1102 | அமைச்சர் அலுவலகம் | 4,285,010.73 |
| | 118-1-2-1102 | அமைச்சு | 868,916.80 |
| | 118-2-3-1102 | கமத்தொழில் அபிவிருத்திப் பிரிவு | 2,898,036.31 |

**உள்நாட்டுப் பயிற்சி நிகழ்ச்சிகள்**

| | பயிற்சி நிகழ்ச்சி | பங்குபற்றிய உத்தியோகத்தர் |
|---|---|---|
| 1. | சாரதிகளுக்கான பயிற்சிச் செயலமர்வு | அனைத்து சாரதிகளும் |
| 2. | நூலக மற்றும் தகவல் சேவைகள் டிப்ளோமா பாடநெறி | திரு. கே.ஜீ.எஸ். குணதிலக்க |
| 3. | ஓய்வூதியத்தை தயாரிப்பது தொடர்பிலான செயலமர்வு | பதவிநிலை உத்தியோகத்தர்களும், அரச முகாமைத்துவ உதவியாளர் சேவையையும், அபிவிருத்தி உதவியாளர் சேவையையும் சேர்ந்த உத்தியோகத்தர்களும் |
| 4. | வாகனங்களிலிருந்து வெளியேற்றப்படுகின்ற வளியை மாசுபடுத்தும் கழிவுப் பொருட்களைக் கட்டுப்படுத்தும் வகையில் போக்குவரத்து உத்தியோகத்தர்களுக்கும் இத்துறையில் ஈடுபட்டுள்ளவர்களுக்குமான பயிற்சி நிகழ்ச்சி | யூ.எல்.பி. திசாநாயக்க<br>முகாமைத்துவ உதவியாளர் |
| 5. | இளைஞர் தலைமைத்துவப் பயிற்சி நிகழ்ச்சி | திருமதி காஞ்சனா குணவர்தன<br>உதவிச் செயலாளர் (நிருவாகம்) |
| 6. | நிருவாகச் சட்டமும் மனித வள அபிவிருத்தியும் தொடர்பிலான பயிற்சி நிகழ்ச்சி | திருமதி ஆர்.ரீ. புலத்சிங்கள<br>உதவிச் செயலாளர் (நிருவாகம் I)<br><br>திருமதி டீ.என். ஹெட்டிஆரச்சி<br>சிரேஷ்ட உதவிச் செயலாளர் (தாபனம்) |
| 7. | செயலாளர்களுக்கும் மேலதிக செயலாளர்களுக்குமான திறன்முறை முகாமைத்துவம் தொடர்பான கருத்தரங்கு | திரு. பீ.எல். நந்தசிறி<br>மேலதிக செயலாளர் (நிருவாகம்) |
| 8. | உயர் சேவை விளைவுப் பெருக்கத்திற்கான முகாமைத்துவம் | முகாமைத்துவ உதவியாளர்கள் 02 |
| 9. | சுப்பர் 5எஸ் | முகாமைத்துவ உதவியாளர்கள் 03 |
| 10. | அரச நிறுவனங்களில் சட்ட நடவடிக்கைகள் | திருமதி பீ.எஸ்.டப். ஹேவகே |

| | | |
|---|---|---|
| | முகாமைத்துவம் தொடர்பான செயலமர்வு | சட்ட உதவியாளர்<br><br>திருமதி எச்.சீ.டி. த சொய்சா<br>சட்ட உதவியாளர் |
| 11. | தகவல் தொழில்நுட்பம் தொடர்பான பட்டப் பின் படிப்புப் பாடநெறி | திரு. எச்.எம்.ஜ. தேசப்பிரிய<br>தகவல் தொழில்நுட்ப உதவியாளர் |
| 12. | நூலகம் மற்றும் தகவல் விஞ்ஞானம் தொடர்பான தேசிய சம்மேளனம் | திரு. கே.ஜீ.எஸ். குணதிலக்க |
| 13. | உள்ளகக் கணக்காய்வு தொடர்பான செயலமர்வு | திரு. டப்.கே.எல். வலல்லாவிட்ட |
| 14. | அலுவலக முகாமைத்துவமும் அலுவலக நடைமுறையும் தொடர்பான செயலமர்வு | பட்டதாரிப் பயிலுனர்கள் |
| 15. | சாரதிகளுக்கான செயன்முறைப் பயிற்சிகளைப் பெற்றுக் கொடுப்பது தொடர்பான செயலமர்வு | தெரிவு செய்யப்பட்ட 05 சாரதிகள் |
| 16. | செயலாண்மை திறன் விருத்தி - இரண்டு நாள் செயலமர்வு | திருமதி ஏ.எஸ். எதிரிசிங்ஹ |
| 17. | அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான ஒருநாள் செயலமர்வு | பட்டதாரிப் பயிலுனர்கள் 05 பேர் |
| 18. | தர நிர்ணய வட்டம் | திருமதி மதுசரணீ ராஜபக்ஷ<br>உதவிச் செயலாளர் (நிருவாகம் II) |
| 19. | புதிய தலைமுறையின் பயன்பாட்டில் நூலக விதிமுறைகளில் மாற்றம் | திரு. கே.ஜீ.எஸ். குணதிலக்க |
| 20. | உள்ளகக் கணக்காய்வாளர்களுக்கான செயலமர்வு | திரு. டப்.கே.எல். வலல்லாவிட்ட |
| 21. | அரசதுறையில் கணக்கீட்டுத் தரநிர்ணயங்கள் தொடர்பான பயிற்சி நிகழ்ச்சி | திருமதி எஸ் ஸ்ரீயாணீ<br>கணக்காளர் (கொள்முதல்)<br><br>திரு. டப்.கே.எல். வலல்லாவிட்ட<br>பிரதம உள்ளகக் கணக்காய்வாளர் |
| 22. | சம்பளங்களைத் தயாரிப்பது தொடர்பான செயலமர்வு | இதில் ஆர்வம் காட்டிய அமைச்சின் அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் |
| 23. | தொழில்சார் பணிகளுக்கான ஆங்கிலப் பாடநெறி | அரச முகாமைத்துவ உதவியாளர் சேவையைச் சேர்ந்த 04 உத்தியோகத்தர்கள் |
| 24. | அரச நிதி முகாமைத்துவம் தொடர்பான பட்டப்பின் படிப்புப் பாடநெறி | திரு. எஸ்.எல்.ஜீ. பந்துசிறி<br>பிரதம கணக்காளர் |
| 25. | பூகோல தொழிற் சந்தையும் இளைஞர் வேலை வாய்ப்பும் | திரு. அஜித் புஷ்பகுமார<br>பணிப்பாளர் (சேதனப் பசளை) |
| 26. | நிலையான வைப்பு முகாமைத்துவம் தொடர்பான பயிற்சி நிகழ்ச்சி | திருமதி எஸ்.ஏ. ஸ்ரீயாணீ<br>கணக்காளர்<br><br>திரு. டி.எல்.ஜீ. திலக்கரத்ன<br>உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தர் |
| 27. | வருடாந்த மாற்றங்களும் பொறுப்பு நீக்கல் நடைமுறையும் - இரண்டு நாள் செயலமர்வு | பி.எஸ்.டி.எஸ். வீரசிங்ஹ<br>அரச முகாமைத்துவ உதவியாளர் |

| | | |
|---|---|---|
| 28. | அமைச்சின் அனைத்து பதவிநிலை உத்தியோகத்தர்களுக்குமான பயிற்சி நிகழ்ச்சி | பதவிநிலை உத்தியோகத்தர்கள் அனைவரும் |

## வெளிநாட்டுப் பயிற்சி நிகழ்ச்சிகள்

| | பெயர் | பதவி | பயிற்சி நிகழ்ச்சி | காலப்பகுதி | நாடு |
|---|---|---|---|---|---|
| 1. | திரு. டப். சகலசூரிய | செயலாளர் | ஆசியாவின் உணவு விவசாய ஒத்துழைப்பு தொடர்பான 2 ஆவது பொதுக் கூட்டம் | 201.05.03 - 2012.05.05 | கொரியா |
| | | | உலர் வலய வாழ்வாதார மேம்படுத்தல் கருத்திட்டத்தின் கீழ் காணி உடைமையை கண்காணிப்பதற்கான ஆய்வுச் சுற்றுலா | 2012.07.08 - 2012.07.13 | பிலிப்பைன்ஸ் |
| 2. | திருமதி எல்.யூ.என். சுமனசேக்கர | பணிப்பாளர் (விவசாயத் தொழில்நுட்பம்) | வினைத்திறன்மிக்க மனிதவள அபிவிருத்தியூடாக பன்முகப்படுத்தப்பட்ட நிருவாக வழங்கல் தொடர்பிலான CIRDAP - NIRD ஒத்துழைப்பு சர்வதேச பயிற்சி நிகழ்ச்சி | 2012.01.19 - 2012.01.28 | இந்தியா |
| | | | 2012 உலக நீர் தினம் | 2012.08.25 - 2012.08.30 | சுவீடன் |
| 3. | திருமதி ஆர்.எஸ். மலவதந்திரி | விவசாய அபிவிருத்தி உதவியாளர் | நிலைபேறான அபிவிருத்தியும் சூழல் முகாமைத்துவமும் தொடர்பான உயர் சான்றிதழ் பாடநெறி | 2012.01.18 - 2012.03.15 | இந்தியா |
| | | | நிலைபேறான விவசாயம் தொடர்பான பட்டப்பின் படிப்புப் பாடநெறி | 2012.07.20 - 2014.05.31 | தாய்லாந்து |
| 4. | திரு. கே. ஜயசிங்ஹ | விவசாய அபிவிருத்தி உதவியாளர் | மரக்கறி உற்பத்தி தொடர்பான பயிற்சி நிகழ்ச்சி | 2012.02.15 - 2012.04.30 | எகிப்து |
| 5. | திரு. என். பிரியலால் | விவசாய அபிவிருத்தி உதவியாளர் | மாற்று வலுச் சக்தி தொடர்பான பயிற்சி நிகழ்ச்சி | 2012.01.30 - 2012.02.24 | இந்தியா |
| | | | எகிப்து குடியரசினால் வழங்கப்படுகின்ற விவசாயத்துறை புலமைப் பரிசில் - மண்வள, நீர்வள முகாமைத்துவம் | 2012.10.01 - 2012.12.15 | எகிப்து |
| 6. | திருமதி ஆர்.ரீ. புலத்சிங்கள | உதவிச் செயலாளர் | விவசாய விரிவாக்கல் முகாமைத்துவத்தில் புதிய பருமானங்கள் தொடர்பான சர்வதேச பயிற்சி நிகழ்ச்சி | 2012.02.18 - 2012.02.29 | இந்தியா |
| 7. | திரு. பீ.என்.என். ஜயநெத்தி | பிரதிப் பணிப்பாளர் (கருத்திட்டம்) | இலங்கை- வங்காளதேச இணைந்த ஆணைக்குழுவின் 4 வது கூட்டத்தொடருக்கு இலங்கைப் பிரதிநிதியை அனுப்புதல் | 2012.03.07 - 2012.03.08 | வங்காளதேசம் |
| | | | இலங்கைக்கும் வியட்நாமுக்கும் இடையிலான இணைந்த ஆணைக்குழுவின் 3 ஆவது கூட்டத்தொடர் | 2012.07.16 - 2012.07.17 | வியட்நாம் |
| 8. | திரு. டப்.எச். தீக்ஷன | விவசாய அபிவிருத்தி உதவியாளர் | விவசாய கழிவுப்பொருள் மீள்சுற்றுப் பாவனை தொடர்பில் உள்நாட்டு அறிவையும் | 2012.03.07 - 2012.03.28 | தாய்லாந்து |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | தொழில்நுட்பங்களையும் ஈடுபடுத்துவது தொடர்பில் பயிற்சி நிகழ்ச்சி | | |
| 9. | திருமதி சாந்தி ஜயசூரிய | விவசாய நடவடிக்கை உத்தியோகத்தர் | கிராமவாசிகளின் மற்றும் உணவுப் பாதுகாப்பு தொடர்பில் கூடிய கவனம் செலுத்தி ஆண் பெண் சமூக சமத்துவம் தொடர்பில் மக்களுக்கு தெளிவூட்டல் | 2012.02.27 - 2012.03.10 | பிரேசில் |
| 10. | திரு. மில்ரன் லம்பியஸ் | விவசாய அபிவிருத்தி உதவியாளர் | கிராமிய குடிநீர் மற்றும் சுகாதாரக் கருத்திட்ட முகாமைத்துவம் தொடர்பில் **CIRDAP - NIRD** ஒத்துழைப்பு சர்வதேச பயிற்சி நிகழ்ச்சி | 2012.03.19 - 2012.03.28 | லாவோஸ் |
| | | | விவசாயக் கிராமிய அபிவிருத்தி தொடர்பான பட்டப்பின் படிப்பு நிகழ்ச்சித் திட்டம் | 2011.11. தொடக்கம் | கொரியா |
| 11. | திருமதி சியாமலீ பியதிஸ்ஸ | உதவிச் செயலாளர் | சார்க் வலய காலநிலை மாற்றங்கள் தொடர்பான விசேட பயிற்சி நிகழ்ச்சி | 2012.03.29 | கொரியா |
| 12. | திருமதி ஜீ.எல்.எஸ்.என். லியனகே | விவசாய நடவடிக்கை உத்தியோகத்தர் | தென் ஆசியாவில் நிலைபேறான காணி முகாமைத்துவமும் காலநிலை மாற்றங்களுக்கு ஏற்ப நில அரிப்பை மதிப்பீடு செய்தலும் மேற்பார்வை செய்தலும் | 2012.03.14 - 2012.03.16 | சீனா |
| 13. | திரு. பீ.எல். நந்தசிறி | மேலதிக செயலாளர் (நிருவாகம்) | விவசாயத்துறையில் தொழில்நுட்பத்தை அறிமுகம் செய்தலும் விஸ்தரிப்புச் சேவையும் தொழில்நுட்பமும் தொடர்பான தெளிவூட்டல் | 2012.06.25 - 2012.06.30 | தாய்லாந்து |
| 14. | கலாநிதி (திரு.) டீ.பி.ரீ. விஜேரத்ன | மேலதிக செயலாளர் (விவசாயத் தொழில்நுட்பம்) | ஆசிய பசுபிக் வலய 31 ஆவது **FAO** மாநாடு | 2012.03.12 - 2012.03.16 | வியட்நாம் |
| | | | **NPO** தலைவர்களின் 53 ஆவது செயலமர்வு | 2012.10.23 - 2012.10.25 | இந்தோனேசியா |
| | | | ஆசியாவின் உணவு விவசாய ஒத்துழைப்பு தொடர்பான 2 ஆவது பொதுக் கூட்டம் | 201.05.03 - 2012.05.05 | கொரியா |
| | | | விவசாயத்துறையில் காலநிலை மாற்றங்களை வெற்றி காண்பதற்கான திறன்முறைகள் தொடர்பில் **AFACI** மேல்மட்ட உத்தியோகத்தர்களின் சந்திப்பு | 2012.11.04 - 2012.11.07 | தாய்லாந்து |
| 15. | திரு. கே. ஜயசிங்ஹ | நிகழ்ச்சித் திட்ட உதவியாளர் | விவசாயக் கருத்திட்ட முகாமைத்துவம் | 2012.01.01 - 2012.02.28 | இந்தியா |
| 16. | திரு. எச்.ஜீ.ஜீ.ஜே. தர்மசேன | பணிப்பாளர் (அபிவிருத்தி) | தூரகிழக்கு ஆசிய நாடுகளில் அறுவடைக்குப் பிந்திய தரத்தைப் பேணுதலும் உணவுப் பாதுகாப்பும் தொடர்பிலான செயலமர்வு | 2012.04.30 - 2012.05.04 | தாய்லாந்து |
| | | | பொருளாதார எண்ணக்கருக்கள் தொடர்பிலான செயலமர்வு | 2012.08.26 - 2012.08.30 | தாய்லாந்து |
| 17. | திரு. எல்.கே. ஹத்துறுசிங்ஹ | பணிப்பாளர் (கருத்திட்டம்) | 18 ஆவது சர்வதேச விவசாயக் கண்காட்சி | 2012.05.15 - 2012.05.17 | இஸ்ரவேல் |
| | | | உலக உணவுப் பாதுகாப்பு | 2012.10.15 - | இத்தாலி |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | தொடர்பிலான 35 ஆவது கூட்டத்தொடர் | 2012.10.20 | |
| 18. | திரு. ஜீ.ஏ.எம்.எஸ். எமிட்டியகொட | மேலதிக செயலாளர் (விவசாய அபிவிருத்தி) | உலக உணவு, விவசாய 144 ஆவது கூட்டத்தொடர் | 2012.06.11 - 2012.06.15 | இத்தாலி |
| 19. | திரு. என்.ஜீ. ரத்நாயக்க | பணிப்பாளர் (திட்டமிடல்) | விவசாயத்துறையில் தொழில்நுட்பத்தை அறிமுகம் செய்தலும் விஸ்தரிப்புச் சேவையும் தொழில்நுட்பமும் தொடர்பான தெளிவூட்டல் | 2012.06.25 - 2012.06.30 | தாய்லாந்து |
| 20. | திரு. எஸ்.எல்.ஜீ. பந்துசிறி | பிரதம கணக்காளர் | விவசாயத்துறையில் தொழில்நுட்பத்தை அறிமுகம் செய்தலும் விஸ்தரிப்புச் சேவையும் தொழில்நுட்பமும் தொடர்பான தெளிவூட்டல் | 2012.06.25 - 2012.06.30 | தாய்லாந்து |
| 21. | வைத்தியர் (திரு.) சீ.சீ.வய். அபேவர்தன | சத்துணவு ஒருங்கிணைப்பாளர் | சுகாதார மற்றும் நரம்பியல் தொடர்பான தொற்றாத நோய்கள் தொடர்பான வலய நாடுகளின் செயலமர்வு | 2012.04.24 - 2012.04.26 | மியன்மார் |
| 22. | திரு. ஆர்.ஏ.டீ.டீ.என். ரணசிங்ஹ | விவசாய அபிவிருத்தி உதவியாளர் | விவசாயப் பொருட்களின் பெறுமதி சேர்ப்பு மற்றும் புதிய சந்தைக்கான பிரவேசம் தொடர்பிலான பயிற்சி | 2012.07.09 - 2012.07.14 | பிலிப்பைன்ஸ் |
| 23. | திருமதி டப்.ஆர்.என். பிரணாந்து | நிகழ்ச்சித் திட்ட உதவியாளர் | ஒருங்கிணைந்த கிராமிய அபிவிருத்தி தொடர்பிலான பயிற்சி நிகழ்ச்சி | 2012.08.10 - 2012.09.25 | எகிப்து |

## iii. சொத்துக்களை எடுத்துக் கொள்ளல்

- அமைச்சின் போக்குவரத்து நடவடிக்கைகளுக்கென புதிதாக வான் ஒன்றும் மோட்டார் கார் ஒன்றும் கொள்வனவு செய்யப்பட்டது

| வாகன இல. | பெறுமதி (ரூ. மில்) | கொள்வனவு செய்யப்பட்ட திகதி |
|---|---|---|
| WP – NB – 2832 | 9.1 | 2012.03.27 |
| WP – KS – 4826 | 8.5 | 2012.04.27 |

## iv. பழுதுபார்ப்பு, நிர்மாணிப்புகள், பராமரிப்புப் பணிகள்

- அமைச்சுக் கட்டிடத்தின் கூரைக்குப் பொருத்தப்பட்டிருந்த மழைநீர் வழிந்தோடுவதற்கான திறந்த குழாய்கள் (Gutter) அனைத்திலும் போலவே மழை நீர் தேங்கிக் கிடந்ததின் காரணமாக டெங்கு நுளம்புகள் பரவும் போக்குக் காணப்பட்டது. எனவே, அமைச்சுக் கட்டிடத்தில் பொருத்தப்பட்டிருந்த மழைநீர் வழிந்தோடுவதற்கான திறந்த குழாய்களை (Gutter) கலற்றி அகற்றி டெங்கு நுளம்புகள் பரவுவதைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதற்கான செலவு ரூ. 214,780.00 ஆம்.
- மாண்புமிகு அமைச்சர் அலுவலகம், மேலதிக செயலாளர் (நிருவாகம்) அலுவலகம், கணக்காய்வு, பராமரிப்பு, அபிவிருத்தி ஆகிய பிரிவுகளின் யன்னல்களுக்கு திரைச்சீலைகள் (Vertical Blind) போடப்பட்டு இவ் அலுவலகங்கள் பிரியமானதும்

அழகானதுமான இடங்களாக மாற்றப்பட்டன. இவற்றிற்கான செலவு ரூ. 650,550.00 ஆகும்.

- அமைச்சின் கூட்ட மண்டபத்தின் தளபாடங்கள் பொலிஷ் பண்ணப்பட்டு திரைச்சீலைகள் (**Vertical Blind)** போடப்பட்டு நவீனமயப்படுத்தப்பட்டது. இதற்கான செலவு ரூ. 178,600.00 ஆகும்.
- கேட்போர் கூடத்தின் திரைச்சீலைகள் அகற்றப்பட்டு புதிதாக திரைச் சீலைகள் போடப்பட்டு, சாயம் பூசப்பட்டு நவீனமயப்படுத்தப்பட்டது. இதற்கான செலவு ரூ. 278,753.00 ஆகும்.
- மாண்புமிகு அமைச்சரின் அலுவலகத்தின் பழுதுபார்ப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டது. இதற்கான செலவு ரூ. 271,789.00 ஆகும்.
- அமைச்சுக் கட்டிடத்திலுள்ள திரைச்சீலைகள் **F.T.** 7,8,9 மலசல கூடங்களும், பொது மலசல கூடங்களும் முற்று முழுதாகப் பழுதுபார்க்கப்பட்டது. இதற்கான செலவு ரூ. ரூ. 13,00,047.00 ஆகும்.
- அத்துமீறியோர் அகற்றப்பட்ட காணித் துண்டின் எல்லை வேலியை புதிதாக அமைத்தல். இதற்கான செலவு ரூ. 283,849.00 ஆகும்.

## 03. அமைச்சின் பிரதான அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள்

2012 நிதியாண்டில் திறைசேரி நிதி ஒதுக்கீடுகளின் கீழ் 13 பிரதான அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் அமுல் செய்யப்பட்டதுடன், இவ் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீடுகள் வருடத்தில் மீண்டும் திருத்தப்பட்டன. 2012.12.31 ஆம் திகதிக்கு 82% வீத நிதி முன்னேற்றத்தை அடைய முடிந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

**அமைச்சு நிதி ஒதுக்கீடுகளின் கீழ் 2012 ஆம் வருடத்தில் அமுல் செய்யப்பட்ட பிரதான அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள்**

| தொடர் இல. | நிகழ்ச்சித் திட்டம் | நிதி ஒதுக்கீடு (ரூ. மில்லியன்) | திருத்தப்பட்ட நிதி ஒதுக்கீடு (ரூ. மில்லியன்) | செலவு (ரூ. மில்லியன்) | முன்னேற்றம் (%) |
|---|---|---|---|---|---|
| 01. | "நாம் நடுவோம் - நாட்டைக் கட்டியெழுப்புவோம்" விசேட நிகழ்ச்சித் திட்டம் | 460.0 | 460.0 | 313.11 | 68.1% |
| 02. | மண்வளப் பாதுகாப்புச் சட்டத்தை அமுல் செய்தல் | 20.0 | 12.414 | 9.427 | 76% |
| 03. | நுண் நீர்ப்பாசன அபிவிருத்தியும், மழை நீரைப் பேணிப் பாதுகாத்தலும் | 20.0 | 7.586 | 6.160 | 81% |
| 04. | உலர் வலய ஜீவனோபாய பங்குபற்றல் மற்றும் ஒத்துழைப்பு வழங்கல் நிகழ்ச்சித் திட்டம் (IFAD) | 613.0 | 573.0 | 530.391 | 92.6% |
| 05. | உணவு உற்பத்திக்கான ஜப்பான் கொடை – 2KR | 585.0 | 493.709 | 430.466 | 87.2% |
| 06. | பயிர் முன்னறிவிப்பு நிகழ்ச்சித் திட்டம் | 4.0 | 3.0 | 2.126 | 71% |
| 07. | சேதனப் பசளை உற்பத்தியையும் பாவனையையும் ஊக்குவிக்கும் நிகழ்ச்சித் திட்டம் | 125.0 | 100.0 | 92.742 | 93% |
| 08. | ஜப்பான் எதிர்மறை நிதியின் (2KR) கீழ் அரசாங்க விதை உற்பத்திப் பண்ணைகளை அபிவிருத்தி செய்தல் (முருங்கன், பரந்தன்) | 84.847 | 72.752 | 52.599 | 72.3% |
| 09. | தேசிய விவசாய ஆராய்ச்சிக் கொள்கை(NARP) | 20.0 | 10.0 | 5.056 | 50.6% |
| 10. | பெரிய வெங்காய விதை உற்பத்தி நிகழ்ச்சித் திட்டம் | 25.0 | 25.0 | 7.472 | 30% |
| 11. | தேசத்திற்கு மகுடம் அபிவிருத்தி நிகழ்ச்சித் | 60.0 | 60.0 | 38.315 | 64% |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | திட்டம் | | | | |
| 12. | மன்னார் மாவட்டத்தில் இடம்பெயர்ந்த மக்களின் உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு ஒத்துழைப்பு வழங்கல் | 40.0 | 60.14 | 44.594 | 76% |
| | **உபமொத்தம்** | **2,056.847** | **1,877.601** | **1,532.46** | **81.6%** |
| 13. | அரிசி ஏற்றுமதி நிகழ்ச்சித் திட்டம் - 2012 | - | 0.940 | 0.940 | 100% |
| | **கூட்டுமொத்தம்** | **2,056.847** | **1,878.541** | **1,533.398** | **82%** |

2012 இல் அமுல் செய்யப்பட்ட சகல அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களும் "மஹிந்த சிந்தனை முன்னோக்கிய பார்வை" எனும் கொள்கைப் பிரகடனத்திற்கு ஏற்ப அமுல் செய்யப்பட்டதுடன், இதனூடாக நாட்டின் விவசாயத்துறையின் அபிவிருத்திக்கு நேரடிப் பங்களிப்புச் செய்யப்பட்டது. அமுல் செய்யப்பட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களின் அடிப்படையில் அடையப் பெற்ற பௌதீக முன்னேற்றம் வருமாறு:

## 01. "நாம் நடுவோம் - நாட்டைக் கட்டியெழுப்புவோம் விசேட விவசாய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்

செய்கை பண்ண முடியுமான ஒவ்வொரு அங்குல நிலத்திலும் செய்கை பண்ணும் தேசிய விவசாயக் கொள்கையை இலக்காகக் கொண்டு, உள்ளூரில் உற்பத்தி செய்யக் கூடிய உணவுப் பொருட்களை கூடிய அளவில் உற்பத்தி செய்து, இறக்குமதிகளைக் கட்டுப்படுத்தி வெளிநாடுகளுக்குச் செல்லும் அந்நியச் செலாவணியை சேமிக்கும் நோக்குடன், குறுகிய கால மற்றும் மத்திய கால கிரமோபாயங்களைக் கடைப்பிடித்து உள்ளூர் உணவு உற்பத்தியை ஊக்குவிக்கும் வகையில் அமுல் செய்யப்பட்ட ***"நாம் நடுவோம் - நாட்டைக் கட்டியெழுப்புவோம்"*** விசேட அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 2012 ஆம் வருடத்தில் அமுல் செய்யப்பட்ட பல்வேறு உப நிகழ்ச்சித் திட்டங்களில்/கருத்திட்டங்களில் அடையப் பெற்ற முன்னேற்றம் கீழ்க் காட்டப்பட்டுள்ளது.

இதற்கமைய ***"நாம் நடுவோம் - நாட்டைக் கட்டியெழுப்புவோம்"*** விசேட அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்திற்காக 2012 ஆம் வருடத்திற்கு ரூ. 460.0 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டதுடன், 68.1% வீத நிதி முன்னேற்றம் அடையப் பெற்றுள்ளது.

### 1. மாதிரிக் கிராமங்களை நிறுவுதல்

***"நாம் நடுவோம் - நாட்டைக் கட்டியெழுப்புவோம்"*** நிகழ்ச்சித் திட்டத்திற்கென 2012 ஆம் வருடத்திற்காக ரூ. 5.5 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டதுடன், இதில் ரூ. 3.76 மில்லியன் நிதி செலவு செய்யப்பட்டுள்ளது.

இதன் கீழ் இலங்கை ஹதபிம அதிகார சபைக்காக ஒதுக்கப்பட்ட ரூ. 2.5 மில்லியன் நிதியில் ரூ. 1.69 மில்லியன் நிதி செலவு செய்யப்பட்டு, நுவரெளியா மாவட்டத்தின் வலப்பனை பிரதேச செயலாளர் பிரிவில், கந்தயாய எனும் கிராமத்திலுள்ள 350 விவசாயக் குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டு, அவர்களுக்கு மண்வளப் பாதுகாப்பும், நீர் முகாமைத்துவமும் தொடர்பில் பயிற்சியளிக்கப்பட்டது.

மேலும், அறுவடைக்குப் பிந்திய தொழில்நுட்ப நிறுவனத்திற்காக ஒதுக்கப்பட்ட ரூ. 3.0 மில்லியன் நிதியில் ரூ. 2.06 மில்லியன் நிதி செலவு செய்யப்பட்டு, குருணாகல், பொலநறுவை, நுவரெளியா, காலி, அம்பாறை, மாத்தறை ஆகிய மாவட்டங்களிலிருந்து கிராமங்கள் தெரிவு செய்யப்பட்டு, உணவுப் பாதுகாப்பும், அறுவடைக்குப் பிந்திய தொழில்நுட்பமும் தொடர்பில் பயிற்சி நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டு, உபகரணத் தொகுதிகள் வீதம் அவர்களுக்கு விநியோகிக்கப்பட்டன.

### 2. சமூக அடிப்படை விதை உற்பத்திக் கிராமங்களை நிறுவும் கருத்திட்டம்

சமூக அடிப்படை விதை உற்பத்திக் கிராமங்களை நிறுவுவதற்காக 2012 ஆம் வருடத்திற்காக கமத்தொழில் அமைச்சினால் ரூ. 35.0 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டதுடன், இதில் ரூ. 19.61 மில்லியன் நிதி செலவு செய்யப்பட்டுள்ளது. இதன் கீழ் ஊவா, மேல் மாகாணங்கள் தவிர மற்றைய ஏழு மாகாணங்களிலும் 46 விதை உற்பத்திக் கிராமங்கள் நிறுவப்பட்டுள்ளன. இக் கருத்திட்டத்தின் மூலம் அடையப் பெற்றுள்ள பௌதீக முன்னேற்றங்களுள் 900 கி.கி. மிளகாய் விதை உற்பத்தி செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. அத்துடன், 496 ஹெக்டயார் நிலப்பரப்பில் செய்கை பண்ணப்பட்ட மிளகாய்ச் செய்கையிலிருந்து விளைச்சல் அறுவடை செய்யும் தருவாயில் காணப்படுகின்றது. 25,000 கி.கி. நிலக்கடலை விதை உற்பத்தி செய்யப்பட்டிருப்பதுடன், 26,900 கி.கி. விதை உருளைக்கிழங்கும் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. இதன் கீழ் $G_0$, $G_1$, $G_2$, $G_3$ எனும் விதை வகைகள் உற்பத்தி செய்யப்பட்டு விவசாயிகளுக்கு மத்தியில் விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும் 300 கி.கி. சிறிய வெங்காய விதை உற்பத்தி செய்யப்பட்டதுடன், 144.5 மெற்றிக் தொன் சிறிய வெங்காய பழுப்பு விதை உற்பத்தி செய்யப்பட்டது.

### 3. பருவமல்லாத காலங்களிலும், புதிய பிரதேசங்களிலும் சிறிய வெங்காயச் செய்கையையும், பெரிய வெங்காயச் செய்கையையும் விஸ்தரிக்கும் நிகழ்ச்சித் திட்டம்




பருவமல்லாத காலங்களிலும், புதிய பிரதேசங்களிலும் சிறிய வெங்காயச் செய்கையையும், பெரிய வெங்காயச் செய்கையையும் விஸ்தரிக்கும் நிகழ்ச்சித் திட்டத்தின் பிரதான நோக்கம் யாதெனில், எமது நாட்டிற்குத் தேவையான சிறிய வெங்காயத்தையும், பெரிய வெங்காயத்தையும் உள்நாட்டிலேயே உற்பத்தி செய்து கொள்வதும். இதனை வருடம் முழுவதும் பேணிச் செல்வதுமாகும். 03 வருட காலப்பகுதியில் அமுல் செய்வதற்குத் திட்டமிடப்பட்ட இந் நிகழ்ச்சித் திட்டம் 2010, 2011 ஆம் வருடங்களில் மேல் மாகாணம் தவிர ஏனைய அனைத்து மாவட்டங்களிலும் மாதிரிச் செய்கையாக அமுல் செய்யப்பட்டது. 2012 ஆம் வருடத்திற்காக முழுக் கருத்திட்டத்திற்கும் ரூ. 20.0 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டதுடன், இதில் 2012 ஆம் வருட இறுதியாகும் போது ரூ. 12.27 மில்லியன் நிதி செலவு செய்யப்பட்டுள்ளது. இதன் கீழ் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு விதைகளை விநியோகித்தல், தெளிவூட்டல், பயிற்சிச் செயலமர்வுகளை நடாத்தல் முதலான பணிகள் மேற்கொள்ளப்பட்டன. அதே போன்று

½ ஏக்கர் கொண்ட 178 காணித் துண்டுகளில் சிறிய வெங்காயச் செய்கையும், ½ ஏக்கர் கொண்ட 548 காணித் துண்டுகளில் பெரிய வெங்காயச் செய்கையும் செய்கை பண்ணப்பட்டன.

ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் பருவமல்லாத காலங்களில் செய்கை பண்ணப்பட்ட பெரிய வெங்காயச் செய்கை மூலம் ஏக்கருக்கு சராசரி 17 மெற்றிக் தொன் விளைச்சலும், யாழ்ப்பாணம் மாவட்டத்தில் பருவமல்லாத காலங்களில் செய்கை பண்ணப்பட்ட சிறிய வெங்காயச் செய்கை மூலம் ஏக்கருக்கு சராசரி 20 மெற்றிக் தொன் விளைச்சலும் பெறப்பட்டுள்ளது.

### 4. தியகமை மஹிந்த ராஜபக்ஷ சர்வதேச விளையாட்டரங்குத் தொகுதியில் சூழல் நேசம் கொண்ட விவசாயப் பயிர் முறைமையொன்றை நிறுவும் கருத்திட்டம்

இக் கருத்திட்டத்திற்காகச் செலவாகும் காலம் 02 வருடங்கள் (2012 - 2013) ஆகும். இதற்குத் தேவையான முழு நிதி ரூ. 65.0 மில்லியனாகும். விவசாயத் திணைக்களத்தின் ஹோமாகமை பழச் செய்கை அபிவிருத்தி, ஆராய்ச்சிப் பணிப்பாளர் அலுவலகத்தின் தலைமையிலும், இலங்கை இராணுவத்தின் ஒருங்கிணைப்புடனும் அமுல் செய்யப்படுகின்ற இந் நிகழ்ச்சித் திட்டத்திற்காக 2012 ஆம் வருடத்திற்கென ஒதுக்கப்பட்ட முழு நிதி ஒதுக்கீடு ரூ. 25.0 மில்லியனாகும்.



சூழல் நேசம் கொண்ட விவசாயப் பயிர் முறைமை

2012 ஆம் வருடத்தின் இறுதியாகும் போது ரூ. 15.22 மில்லியன் நிதி முன்னேற்றம் அடையப் பெற்றுள்ளது. இக் கருத்திட்டத்தின் செயற்பாடுகளுள், சூரியசக்தியைப் பயன்படுத்தி சக்திவலுவை உற்பத்தி செய்து பயன்படுத்துதல், சொட்டு நீர்ப்பாசன முறைமையொன்றை நிறுவுதல், விளையாட்டுத் திடலுக்கு ஏற்ற நில அலங்காரமொன்றை மேற்கொள்ளல், வள மீள்சுற்றுப் பாவனை, கற்புல, செவிப்புல அலகொன்றை நிறுவுதல், விற்பனைக் கூடமொன்றை நிறுவுதல், பல்வேறு வகைகளையும் சேர்ந்த பழங்கல் கலந்த பழத் தோட்டமொன்றை அமைத்தல், உயிரியில் வாயு அலகொன்றை நிறுவுதல், மாட்டுத் தொழுவமொன்றை நிறுவுதல் முதலான பணிகள் தற்சமயம் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

2013 ஆம் வருடத்திலும் இந் நிகழ்ச்சித் திட்டத்தை தொடர்ந்தும் அமுல் செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளதுடன், இதற்காக ஒதுக்கப்பட்டுள்ள முழு நிதி ஒதுக்கீடு ரூ. 10.0 மில்லியனாகும்.

## 5. பூக்கள் பூப்பதற்கு தூண்டுதல் அளிப்பதினூடாக மாம் பழ விளைச்சலையும், தூரியன் விளைச்சலையும் அதிகரிக்கும் கருத்திட்டம்

மாம் பழ விளைச்சலையும் தூரியன் விளைச்சலையும் 40% வீதத்தினால் அதிகரிக்கும் நோக்குடன் அமுல் செய்யப்படுகின்ற இக் கருத்திட்டத்திற்காக ரூ. 1.12 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டதுடன், 2012 ஆம் வருடத்தில் 1.11 மில்லியன் நிதி செலவு செய்யப்பட்டுள்ளது. இக் கருத்திட்டம் கண்டி மாவட்டத்தைப் பிரதானமாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டதுடன், தற்சமயம் இது மாத்தளை மாவட்டத்திற்கும் விஸ்தரிக்கப்பட்டுள்ளது. இதன் கீழ் சுமார் 2,600 மரங்களுக்கு இப் பரிகாரம் பண்ணப்பட்டதுடன், தற்சமயம் மா மரம், தூரியன் மரம் என சுமார் 1,100 மரங்களில் பூக்கள் பூக்கத் தொடங்கியுள்ளன. இக் கருத்திட்டம் தொடர்பில் விழிப்புணர்வூட்டும் வகையில் 10 தெளிவூட்டல் நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. அது மட்டுமல்லாது இந் நிகழ்ச்சித் திட்டம் தொடர்பில் விளக்குவதற்காக 03 தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் ஒளிபரப்பப்பட்டதுடன், 05 வானொலி நிகழ்ச்சிகளும் ஒலிபரப்பப்பட்டன. அத்துடன் 04 பத்திரிகை விளம்பரங்கள் பிரசுரிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. இவற்றிற்கு மேலதிகமாக 02 வெளிக்களச் செயலமர்வுகள் நடாத்தப்பட்டதுடன், சுமார் 5,000 துண்டுப் பிரசுரங்கள் அச்சிடப்பட்டு விநியோகிக்கப்பட்டன.


அதிகரித்த பழ விளைச்சல் - தூரியன்


முறையான கவ்வாத்து முறையைப் பின்பற்றுதல் - மா

## 6. காபனீரொக்சைட் வாயு அதிகமாகவுள்ள சூழலில் பசுமைப் பயிர்ச் செய்கைகளை மேற்கொள்வதற்கு புதிய தொழில்நுட்பங்களை அறிமுகம் செய்தல்

இந் நிகழ்ச்சித் திட்டத்திற்காக ரூ. 2.32 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டதுடன், இதுவரை ரூ. 1.94 மில்லியன் நிதி செலவு செய்யப்பட்டுள்ளது. காபனீரொக்சைட் வாயு அதிகமாகவுள்ள சூழலில் தக்காளி, ஸ்ரோபரி, உருளைக் கிழங்கு விதைகளை உற்பத்தி செய்வதற்காக ஈடுபடுத்துவதற்கு கன்னோருவை, பண்டாரவளை, சீதாஎளிய ஆகிய பிரதேசங்களில் புதிதாக பச்சை வீடுகளை அமைப்பதற்கும், ஏற்கனவேயுள்ள பச்சை வீடுகளை பழுது பார்ப்பதற்கும் தேவையான உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. தற்போதைக்குக் கிடைக்கப் பெற்றுள்ள பெறுபேறுகளின் அடிப்படையில் தக்காளிச் செய்கையில் கூடுதலாக காய்க்கும் தன்மையும், கூடிய விளைச்சல் பெறக்கூடிய தன்மையும் அவதானிக்கப்படுகின்றது.

## 7. கீழ் நாட்டு ஈர வலயத்தில் வயல் காணிகளின் உற்பத்தி விளைவுப் பெருக்கத்தை அதிகரித்தல்

கீழ் நாட்டு ஈர வலய வயல் காணிகளில் விளைச்சல் குறைவடைவதற்கான காரணிகளைக் கண்டறிவது தொடர்பில் ஆய்வொன்றை மேற்கொள்வதும், அக் காரணிகளை தவிர்த்து வலயத்தில் விளைச்சலை அதிகரிப்பதற்காக பொருத்தமான நடைமுறைச் சாத்தியமான

வேலைத் திட்டமொன்றை முன்வைப்பதினூடாக விவசாய மக்களின் வாழ்க்கைத் தரத்தைக் கட்டியெழுப்புவதுமே இந் நிகழ்ச்சித் திட்டத்தின் பிரதான நோக்கமாகும். இக் கருத்திட்டத்திற்காக 2012 ஆம் வருடத்திற்கு ரூ. 5.0 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டதுடன், இது வரை ரூ. 1.95 மில்லியன் நிதி செலவு செய்யப்பட்டுள்ளது. இக் கருத்திட்டத்தை கொழும்பு, கம்பஹா, களுத்துறை காலி, மாத்தறை, இரத்தினபுரி, கேகாளை ஆகிய மாவட்டங்கிளல் அமுல் செய்வதற்குத் திட்டமிடப்பட்டிருப்பதுடன், இம் மாவட்டங்களில் ஆரம்ப மதிப்பீட்டுப் பணிகள் முடிக்கப்பட்டுமுள்ளன. மேலும் இக் கருத்திட்டத்தின் கீழ் விதை நெல் கிராம மொன்று நிறுவப்பட்டிருப்பதுடன், 12 வகையான நெல்லினங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன. சுமார் 400 இலை நிறச் சுட்டிகள் விவசாயிகளிடத்தில் விநியோகிக்கப்பட்டுள்ளன. மேலும், இக் கருத்திட்டத்தின் கீழ் 09 பயிற்சி வகுப்புகள் நடாத்தப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## 8. அறுவடைக்குப் பிந்திய தொழில்நுட்ப நிறுவனத்தினால் அமுல் செய்யப்படுகின்ற நிகழ்ச்சித் திட்டங்கள்

| | நிகழ்ச்சித் திட்டம் | நிதி ஒதுக்கீடு (ரூ. மில்லியன் | நிதி முன்னேற்றம் (%) |
|---|---|---|---|
| i. | அறுவடைக்குப் பிந்திய சேதங்களைக் குறைக்கும் வகையில் பொதி செய்தல் இல்லத் தொழில்நுட்பங்களை நிறுவுதல் | 1.90 | 40.18% |
| ii. | புதிய மரக்கறி, பழ விற்பனை நிலையங்களை மாவட்ட மட்டத்தில் பிரபல்யப்படுத்தும் கருத்திட்டம் | 0.72 | 20.91% |
| iii. | ரயிஸ்கிரீம் இயந்திரங்களை மாவட்ட மட்டத்தில் வழங்குதல் | 1.00 | 28.57% |

## 9. Clinical trials

விவசாயத்துறையின் அபிவிருத்திக்காக பல்கலைக்கழகங்களின் பங்களிப்பைப் பெற்றுக் கொள்ளல்

| | கருத்திட்டம் | பல்கலைக்கழகம் | நிதி ஒதுக்கீடு (ரூ. மில்லியன்) | நிதி முன்னேற்றம் (ரூ. மி.) |
|---|---|---|---|---|
| 1. | அறுவடைக்குப் பிந்திய சேதங்களைக் குறைத்தலும் உற்பத்திகளுக்கு பெறுமதி சேர்த்தலும்* | ருஹுணு பல்கலைக்கழகம் | 1.1 | 0.39 |
| 2. | பதுளை மாவட்டத்தில் தோட்டப் பயிர்ச் செய்கையின் போது கடைப்பிடிக்க வேண்டிய பயிர்ச் செய்கை முறைகளையும் விதிகளையும் ஊக்குவித்தல். | ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம் | 1.0 | 0.40 |
| 3. | கருவாவிலுள்ள ஔடத சிறப்பியல்பை நிரூபிப்பதற்கான கருத்திட்டம் | பேராதனைப் பல்கலைக்கழகம் | 5.0 | 0.34 |

*இக் கருத்திட்டத்தின் கீழ் 06 ஆவியாதல் மூலம் குளிர்ச்சியாக்கும் இயந்திரங்கள் தயாரித்து முடிக்கப்பட்டிருப்பதுடன், இவற்றின் ஆராய்ச்சிப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

## 10. விவசாயப் பண்ணைகளை அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித் திட்டம்

விவசாயப் பண்ணைகளை அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 2012 ஆம் வருடத்திற்காக கீழ்க் காணும் ஐந்து நிறுவனங்களின் கீழ் இயங்குகின்ற சுமார் 40 விவசாயப் பண்ணைகளின் அபிவிருத்திக்காக ரூ. 83.925 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டதுடன், 2012 ஆம் வருடத்தில் இதன் நிதி முன்னேற்றம் வருமாறு:

| | விவசாயப் பண்ணைகள் உரிய நிறுவனங்கள் | நிதி ஒதுக்கீடு (ரூ. மில்) | செலவு (ரூ. மில்) | நிதி முன்னேற்றம் (%) |
|---|---|---|---|---|
| 01. | அரிசி ஆராய்ச்சி, அபிவிருத்தி நிறுவனம் | 9.64 | 8.514 | 88% |
| 02. | விதை அத்தாட்சிப்படுத்தல் நிலையம் | 3.01 | 1.685 | 56% |
| 03. | களப் பயிர் ஆராய்ச்சி அபிவிருத்தி நிறுவனமும், விதை அத்தாட்சிப்படுத்தல் நிலையமும் | 26.50 | 26.015 | 93% |
| 04. | விரிவாக்கல், பயிற்சி நிலையம் | 17.20 | 17.154 | 98% |
| 05. | தோட்டப் பயிர் ஆராய்ச்சி, அபிவிருத்தி நிறுவனம் | 27.575 | 25.973 | 91% |
| | **மொத்தம்** | **83.925** | **79.341** | **92%** |

## 11. உப உணவுப் பயிர் உற்பத்தி நிகழ்ச்சித் திட்டம்

உள்ளூர் நுகர்வுக்குத் தேவையான உப உணவுப் பயிர்களின் இறக்குமதியைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் அமுல் செய்யப்பட்டு வந்த இந் நிகழ்ச்சித் திட்டம், 2012 ஆம் வருடத்தில் தீவின் அனைத்து மாவட்டங்களும் உட்படுமாறு அமுல் செய்யப்பட்டது. இந் நிகழ்ச்சித் திட்டத்திற்காக ரூ. 163.75 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டதுடன், இதில் ரூ. 83.77 மில்லியன் நிதி செலவு செய்யப்பட்டுள்ளது.
இந் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பயறு. கவுப்பி, நிலக்கடலை, எள்ளு, மிளகாய், சோளம், குரக்கன், உளுந்து, சோயா அவரை, உருளைக் கிழங்கு முதலான பயிர்ச் செய்கைகளில் ஈடுபடுவதற்காக, விதை மற்றும் நடுகைப் பொருட்கள், நீர்ப்பாசன முறைமைகள் (ஸ்பிரின்க்லர்), டாப்போலின் முதலானவற்றை விவசாயிகளுக்கு வழங்குதல், விவசாயிகளுக்குப் பயிற்சியளித்தல் முதலான பணிகள் முன்னெடுக்கப்பட்டன. இதன் கீழ் 2,566 விவசாயிகளுக்குப் பயிற்சியளிக்கப்பட்டதுடன், 6,113 ஹெக்டயார் நிலப்பரப்பில் உப உணவுப் பயிர்கள் செய்கை பண்ணப்பட்டது. அத்துடன் 65 ஸ்பிரின்க்லர் நீர்ப்பாசன முறைமைகள் நிறுவப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. விதை உருளைக் கிழங்கு உற்பத்திக்காக நுவரெளியா, பதுளை மாவட்டங்களில் பொலித்தீன் இல்லங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

## 12. பழப் பயிர் உற்பத்தி நிகழ்ச்சித் திட்டம்

பழ உற்பத்தியை அதிகரிக்கும் நோக்குடன் 2012 ஆம் வருடத்தில் அமுல் செய்யப்பட்ட இந் நிகழ்ச்சித் திட்டத்திற்காக ரூ. 26.0 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டதுடன், இதன் கீழ் மா, அண்ணாசி, வாழை, பப்பாசி, தோடை, யானைக் கொய்யா, மாதுளை, திராட்சை, கொடி தோடை முதலான பழப் பயிர்ச் செய்கைகளை புனரமைப்பதற்கும், புதிதாக பயிர்ச்

செய்கைகளை மேற்கொள்வதற்குத் தேவையான நடுகைப் பொருட்களை வழங்குவதற்கும் உதவி வழங்கப்பட்டது.

அண்ணாசிச் செய்கையின் கீழ் ரூ. 13.0 மில்லியன் செலவில் 10 மாவட்டங்களில் அண்ணாசிச் செய்கை நிகழ்ச்சித் திட்டம் அமுல் செய்யப்பட்டதுடன், ஒட்டுமொத்தமாக பழப் பயிர் உற்பத்தி நிகழ்ச்சித் திட்டத்திற்காக ரூ. 23.6 மில்லியன் நிதி செலவு செய்யப்பட்டுள்ளது.

### 13. விசேட விவசாயத்துறை நிகழ்ச்சித் திட்டம்

இந் நிகழ்ச்சித் திட்டத்திற்காக ரூ. 5.65 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டதுடன், இதன் கீழ் புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் இனங்காணப்பட்ட விவசாயக் குடும்பங்களுக்கு விவசாய உபகரணங்களை வழங்குதல், மாத்தறை கொடகம யாய அபிவிருத்தி, பழச் செடிகளை விநியோகித்தல் முதலான பணிகள் மேற்கொள்ளப்பட்டதுடன் இதற்காக ரூ. 5.644 மில்லியன் நிதி செலவு செய்யப்பட்டுள்ளது.

### 14. ஊடக நிகழ்ச்சிகள்

ஊடக நிகழ்ச்சிகளுக்காக ரூ. 7.25 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டதுடன், இதன் நிதி முன்னேற்றம் ரூ. 6.076 மில்லியாகும் ***"கொவி கெதரின் மக கெதரட்ட"*** எனும் 36 வானொலி நிகழ்ச்சிகளும், ***"ரண்அட்டுவ"*** எனும் 36 தொலைக்காட்சி நிகழ்ச்சிகளும் ஒளிபரப்புச் செய்யப்பட்டன. விவசாயத் திணைக்களத்தின் மேர்பார்வையின் கீழ் தயாரிக்கப்பட்ட இந் நிகழ்ச்சிகள், மக்கள் மத்தியில் விவசாயத்துறை தொடர்பில் புதியதோர் எழுச்சியை ஏற்படுத்துவதற்கு உறுதுணையாக அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

### 15. கிருமிநாசினிப் பாவனையைக் கட்டுப்படுத்தல்

| நிகழ்ச்சித் திட்டம் | நிதி ஒதுக்கீடு (ரூ. மில்) | நிதி முன்னேற்றம் (ரூ. மில்) | நிதி முன்னேற்ற வீதம் (%) | பௌதீக முன்னேற்றம் |
|---|---|---|---|---|
| **கிருமிநாசினிப் பாவனையைக் கட்டுப்படுத்தல்** | 5.3 | 3.6 | 68% | விவசாய இரசாயனப் பொருள் விற்பனை மற்றும் தொழில்நுட்ப உதவியாளர்களுக்கான பயிற்சிப் பாடநெறிகள் நடாத்தப்பட்டன |

### 16. உப உணவுப் பயிர் உற்பத்தியைத் துரிதப்படுத்தும் நிகழ்ச்சித் திட்டம் - மாகாணங்கள்

| | மாகாணம் | நிதி ஒதுக்கீடு (ரூ. மில்) | நிதி முன்னேற்றம் (ரூ. மில்) | நிதி முன்னேற்ற வீதம் (%) | பௌதீக முன்னேற்றம் |
|---|---|---|---|---|---|
| 1. | வட மாகாணம் | 2.0 | 1.77 | 88% | உளுந்து விதை, நிலக்கடலை விதை, குரக்கன் விதை கொள்வனவு செய்யப்பட்டன. பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். |
| 2. | மத்திய மாகாணம் | 2.0 | 2.0 | 100% | ரம்புட்டான், மா, டிரகன் புரூட், யானைக் கொய்யா, தூரியன், |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | | எழுமிச்சை, கொடிதோடை, பெயார்ஸ், வாழை முதலான பயிர்கள் இலக்கு வைக்கப்பட்ட ஹெக்டயார் நிலப்பரப்பிலேயே செய்கை பண்ணப்பட்டன. |
| 3. | வடமேல் மாகாணம் | 2.0 | 1.93 | 97% | சோளம், பயறு, நிலக்கடலை விதைகள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. |
| 4. | வடமத்திய மாகாணம் | 2.0 | 1.1 | 55% | கவுப்பி, எள்ளு, குரக்கன், மிளகாய் முதலான பயிர்கள் செய்கை பண்ணப்பட்டு நிகழ்ச்சித் திட்டம் அமுல் செய்யப்பட்டுள்ளது. |
| 5. | கிழக்கு மாகாணம் | 2.0 | 1.99 | 99.9% | பயறு, உளுந்து, நிலக்கடலை, கவுப்பி விதைகள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. |
| 6. | சபிரகமுவா மாகாணம் | 1.87 | 1.78 | 96% | விதை பயன்பாட்டுப் பொருட்களை வநியோகித்தலும், சோளம், பயறு, சிறிய வெங்காயம் முதலான செய்கைகளை மேற்கொள்ளலும். |
| 7. | ஊவா மாகாணம் | 2.0 | 1.97 | 99% | பயறு, எள்ளு, மிளகாய், வெங்காயம், கவுப்பி, சோளம் முதலான பயிர்கள் செய்கை பண்ணப்பட்டு நிகழ்ச்சித் திட்டம் அமுல் செய்யப்பட்டுள்ளது. |
| 8. | மேல் மாகாணம் | 2.0 | 1.72 | 86% | சேதனப் பசளை, வேப்பிலை கிருமிநாசினி மற்றும் செடிகள் என்பன விநியோகிக்கப்பட்டுள்ளன. |
| 9. | தென் மாகாணம் | 2.0 | 0.83 | 84% | 40 ஏக்கர் நிலப்பரப்பில் உப உணவுப் பயிர்கள் செய்கை பண்ணப்பட்டுள்ளன. 16 பயிற்சி வகுப்புகள் நடாத்தப்பட்டுள்ளன. 9 நீர் இறைக்கும் இயந்திரங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன. |

## 17. இலங்கை ஹதபிம அதிகார சபையினால் அமுல் செய்யப்படுகின்ற நிகழ்ச்சித் திட்டங்கள்

| | கருத்திட்டம் | விபரம் | நிதி ஒதுக்கீடு (ரூ. மில்லியன்) | செலவு செய்யப்பட்ட தொகை (ரூ. மில்லியன்) |
|---|---|---|---|---|
| i. | விவசாயக் காணிகள் அபிவிருத்தித் திட்டம் | வலப்பனை பிரதேச செயலாளர் பிரிவில் செயற்பாட்டாளர்களுக்குப் பயிற்சியளித்து, விவசாய உபகரணங்களை வழங்கி, | 2.5 | 1.67 |

| | | | | |
|---|---|---|---|---|
| | | சேதனப் பசளை உற்பத்தி நிகழ்ச்சித் திட்டத்தை ஆரம்பித்து வைத்தல். | | |
| **ii.** | உப உணவுப் பயிர் சிறப்பு வகைப்படுத்தல் நிகழ்ச்சித் திட்டம் - மொனறாகலை மாவட்டம் | தொழில்நுட்பப் பயிற்சி வழங்கி, விவசாய உபகரணங்களையும், விதைகளையும், பயன்பாட்டுப் பொருட்களையும் வழங்கி உப உணவுப் பயிர்ச் செய்கையை விஸ்தரிப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்தல். | 7.25 | 4.56 |
| **iii.** | இராணுவ வீரர் பங்களிப்புடனான பயிர் உற்பத்தி விளைவுப் பெருக்க நிகழ்ச்சித் திட்டம் | கண்டி, முல்லைத்தீவு, வவுனியா, அநுராதபுரம், கிளிநொச்சி, யாழ்ப்பாணம், பொலநறுவை ஆகிய மாவட்டங்களில் 30 இராணுவ முகாம்களுக்குத் தேவையான விவசாய உபகரணங்கள் வழங்கி, இராணுவ முகாம் வளவுகளில் பயிர்ச் செய்கைகளை மேற்கொள்வதற்கு ஊக்கமளித்தல். | 11.35 | 2.29 |

## 18. தேசிய உணவு ஊக்குவிப்புச் சபையினால் அமுல் செய்யப்படுகின்ற நிகழ்ச்சித் திட்டங்கள்

| | கருத்திட்டம் | விபரம் | நிதி ஒதுக்கீடு (ரூ. மில்லியன்) | செலவு செய்யப்பட்ட தொகை (ரூ. மில்லியன்) |
|---|---|---|---|---|
| **i.** | உள்ளூர் உணவு வகைகளைப் பிரபல்யப்படுத்தும் நிகழ்ச்சித் திட்டம் | உள்ளூர் உணவு வகைகளைப் பிரபல்யப்படுத்தும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 30 செயலமர்வுகள் நடாத்தப்பட்டு, இச் செயலமர்வுகளில் கலந்து கொண்டோருக்கு சுவபோஷ மற்றும் அரிசிமா பக்கற் 01 வீதம் பகிர்ந்தளித்தல். | 2.99 | 1.20 |
| **ii.** | புத்தலை விவசாயப் பண்ணையை அபிவிருத்தி | விவசாயப் பண்ணையை அபிவிருத்தி செய்தலின் கீழ் | 3.23 | 1.40 |

| | | | | |
|---|---|---|---|---|
| | செய்யும் நிகழ்ச்சித் திட்டம் | மிளகாய், தோடை, மா, பப்பாசி முதலான பயிர்களைச் செய்கை பண்ணுதல். | | |
| iii. | தனமல்விலை விவசாயப் பண்ணையை அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித் திட்டம் | இதன் கீழ் சம்பிரதாய நெற் செய்கை பிரதானமாக மேற்கொள்ளப்பட்டதுடன், மிளகாய், பப்பாசி முதலான பயிர்களும் செய்கை பண்ணப்பட்டன. | 3.23 | 1.40 |
| iv. | வட்டக்கச்சி விவசாயப் பண்ணையை அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித் திட்டம் | இதன் கீழ் விவசாயக் கிணறொன்று அமைக்கப்பட்டு, மிளகாய், நெல் முதலான செய்கைகள் செய்கை பண்ணப்பட்டன. | 6.97 | 4.90 |

## 02. மண்வளப் பாதுகாப்புச் சட்டத்தை அமுல் செய்தல்

மண்ணரிப்பு காரணமாக மண் வளத்திற்கு ஏற்படும் சேதங்களைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் சட்டமாக்கப்பட்ட 1951 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க மண் வளப் பாதுகாப்புச் சட்டத்தை அமுல் செய்வதினூடாக, இலங்கையில் மண்ணரிப்பைக் கட்டுப்படுத்துவதும், இதனூடாக காணிகளின் உற்பத்தி விளைவுப் பெருக்கத்தை அதிகரித்து விவசாய விளைவுப் பெருக்கத்தைக் கூட்டுவதுமே இந் நிகழ்ச்சித் திட்டத்தின் பிரதான குறிக்கோளாகும்.

மண்வளப் பாதுகாப்பு நிகழ்ச்சித் திட்டத்தை அமுல் செய்யும் போது, இலங்கையில் அதிகளவில் மண்ணரிப்பிற்கு உட்படும் மாகாணங்கள் மீது கூடிய கவனம் செலுத்தப்படும். இதற்கமைய, ஊவா, சபிரகமுவா, மத்திய, வடமேல், தென், மேல் மாகாணங்களைச் சேர்ந்த மாவட்டங்களில் மண்ணரிப்பிற்கு உட்படும் விவசாய நிலங்களை இனங் கண்டு, விவசாயிகளின் பங்களிப்புடன் மண் வளப் பாதுகாப்பு முறைகள் மூலம் காணிகளை அபிவிருத்தி செய்வதற்கும், அபிவிருத்தி செய்யப்பட்ட காணிகளில் பயிர்ச் செய்கைகளை மேற்கொள்வதற்கும், இதற்கான பயிற்சி நிகழ்ச்சிகளை நடாத்துவதற்கும், மண்வளப் பாதுகாப்புச் சட்டத்தை அமுல் செய்வதற்கான செலவினத் தலைப்பின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகின்றது.

இதற்கமைய 2012 இல் இந் நிகழ்ச்சித் திட்டத்தை அமுல் செய்வதற்காக ரூ. 14.8 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டதுடன், இந் நிதி ஒதுக்கீட்டை உபயோகித்து 06 மாகாணங்களுக்குரிய மாவட்டங்களில் மண் வளப் பாதுகாப்பு நடவடிக்கைகள் திட்டமிடப்பட்டன. இதற்கமைய 700 ஏக்கர் விவசாய நிலங்களில் மண்வளப் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளல், விவசாயிகளுக்குப் பயிற்சியளித்தல், மண் வளப் பாதுகாப்பு மாதிரிகளை நிறுவுதல், விதை மற்றும் நடுகைப் பொருட்களையும் விவசாய உபகரணங்களையும் பெற்றுக் கொடுத்தல், பிரசார நிகழ்ச்சிகளை அமுல் செய்தல் முதலான நடவடிக்கைகள் திட்டமிடப்பட்டன.





கல் வரப்புகள் - தெரணியகலை

ஜீவ வரப்புகள் - பிட்டபெத்தர

இவ் அபிவிருத்திப் பணிகள், மாவட்டச் செயலகங்கள் ஊடாகவும், மாகாண விவசாயத் திணைக்களங்களூடாகவும், விவசாயத் திணைக்களத்தினூடாகவும் அமுல் செய்யப்பட்டன. 2012 ஆம் வருட இறுதியாகும் போது ரூ. 10.2 மில்லியன் நிதி முன்னேற்றம் அடையப் பெற்றிருப்பதுடன், 500 ஏக்கர் நிலப்பரப்பில் மண் வளப் பாதுகாப்பு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

### 03. நுண் நீர்ப்பாசன அபிவிருத்தியும், மழை நீரைப் பேணிப் பாதுகாத்தலும்

உலர் வலயத்தில் நிலவும் தண்ணீர்ப் பற்றாக்குறைக்கான மாற்றுத் தீர்வாக மழைநீரைச் சேகரித்து பயிர்ச் செய்கை பராமரிப்பிற்கும், குடிநீர்த் தேவையை நிவர்த்தி செய்து கொள்வதற்கும் விவசாயிகள் சமுகத்தை ஊக்குவிப்பதினூடாக, கிராமிய மக்களின் சுமுக வாழ்வை பாதுகாப்பதையும், வறுமையை ஒழிப்பதையும் நோக்காகக் கொண்டு, இத் திட்டம் அமுல் செய்யப்படுகின்றது. இதற்காக நுண் நீர்ப்பாசன அபிவிருத்தியும், மழைநீரைப் பேணிப் பாதுகாத்தலும் செலவினத் தலைப்பின் கீழ் நிதி பெற்றுக் கொடுக்கப்படுவதுடன், இந் நிதியை ஈடுபடுத்தி தண்ணீர்ப் பற்றாக்குறை நிலவும் பிரதேசங்களில் மழைநீரைச் சேகரிப்பதற்கான நீர்த் தாங்கிகளை அமைத்தல், தடாகங்களை அமைத்தல், மழைநீரைப் பேணிப் பாதுகாக்கும் மாதிரிகளை நிறுவுதல், நுண் நீர்ப்பாசனத் தொகுதிகளை 50% வீத விவசாயிகள் பங்களிப்பில் பெற்றுக் கொடுத்து, அவற்றை நிறுவி, மரக்கறிச் செய்கைகளையும், பழச் செய்கைகளையும் அபிவிருத்தி செய்தல், விவசாயிகளைத் தெளிவுபடுத்தல், வீட்டுத் தோட்ட அபிவிருத்தி முதலான பணிகள் மேற்கொள்ளப்படும்.





வடமத்திய மாகாணத்தில் நுண் நீர்ப்பாசன மாதிரியொன்று

2012 ஆம் வருடத்திற்காக நுண் நீர்ப்பாசன அபிவிருத்திக்காக ரூ. 2.8 மில்லியன் நிதியும், மழைநீர் முகாமைத்துவத்திற்காக ரூ. 2.4 மில்லியன் நிதியும் ஒதுக்கப்பட்டதுடன், இந் நிதியை ஈடுபடுத்தி கிழக்கு மாகாணத்தையும், தென் மாகாணத்தையும் சேர்ந்த மாவட்டங்களில், அம் மாவட்டங்களின் மாவட்டச் செயலகங்கள் ஊடாகவும், மாகாண விவசாயத் திணைக்களங்களூடாகவும் மழைநீரைப் பேணிப் பாதுகாக்கப்பட வேண்டியதும், நீர்ப் பற்றாக்குறை நிலவும் பிரதேசங்களில் மழைநீரைப் பேணிப் பாதுகாத்து முகாமை செய்வதற்கு விவசாயிகளுக்குப் பயிற்சியளித்தல், மழைநீரைச் சேகரிப்பதற்கான தாங்கிகளையும்,

தடாகங்களையும் அமைத்தல், நுண் நீர்ப்பாசன முறைமைகளை நிறுவுவதன் மூலம் மரக்கறிச் செய்கை நிலங்களையும், பழச் செய்கை நிலங்களையும் அபிவிருத்தி செய்தல் முதலான அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன.

நுண் நீர்ப்பாசன அபிவிருத்தியின் கீழ், 2012 ஆம் வருட இறுதியாகும் போது 20 பயிற்சிச் செயலமர்வுகள் நடாத்தப்பட்டிருப்பதுடன், 40 நுண் நீர்ப்பாசன முறைமைகள் விவசாய நிலங்களில் பொருத்தப்பட்டன. இக் கருத்திட்டத்தின் கீழ் ரூ. 2.8 மில்லியன் நிதி செலவு செய்யப்பட்டுள்ளதுடன், இது 100% வீத நிதி முன்னேற்றத்தைக் காட்டுகின்றது. மழைநீர் முகாமைத்துவக் கருத்திட்டத்தின் கீழ் 2012 ஆம் வருட இறுதியாகும் போது 17 மழைநீரைச் சேகரிக்கும் தாங்கிகள் அமைக்கப்பட்டதுடன், 2007, 2008, 2009 ஆம் வருடங்களில் அமைக்கப்பட்ட மழைநீரைச் சேகரிக்கும் தடாகங்களின் கீழ் 38.25 ஏக்கர் விவசாய நிலங்கள் புனரமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. அத்துடன் இதன் கீழ் 21 பயிற்சிச் செயலமர்வுகள் நடாத்தப்பட்டிருப்பதுடன், 27.5 ஏக்கர் விவசாய நிலங்கள் சார்பில் விதை மற்றும் நடுகைப் பொருட்கள் வழங்கப்பட்டு, இந்த வீட்டுத் தோட்டங்கள் அபிவிருத்தி செய்யப்பட்டன. இந் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ரூ. 1.48 மில்லியன் நிதி செலவு செய்யப்பட்டிருப்பதுடன், இது 61.67% வீத நிதி முன்னேற்றத்தைக் காட்டுகின்றது.

## 04. உலர் வலய ஜீவனோபாய பங்குபற்றல் மற்றும் ஒத்துழைப்பு வழங்கல் நிகழ்ச்சித் திட்டம் - DZLISPP

உலர் வலய ஜீவனோபாய பங்குபற்றல் மற்றும் ஒத்துழைப்பு வழங்கல் நிகழ்ச்சித் திட்டம், கமத்தொழில் அபிவிருத்திக்கான சர்வதேச நிதியத்தின் **(International Fund for Agricultural Development)** நிதியுதவியுடன் கமத்தொழில் அமைச்சினால் அமுல் செய்யப்படுகின்றது. இக் கருத்திட்டம் உலக வங்கியினால் மேற்பார்வை செய்யப்படுகின்றது. இக் கருத்திட்டம் சுமார் 07 வருட காலம், அதாவது 2005 திசெம்பர் தொடக்கம் 2013 மார்ச் வரை அமுல் செய்யப்படுவதுடன், இதற்காக ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 3,000 மில்லியனாகும். 2012 ஆம் வருட இறுதியாகும் போது ரூ. 2,730 மில்லியன் நிதி முன்னேற்றம் அடையப் பெற்றுள்ளது. இது 94% வீத நிதி முன்னேற்றமாகும். இந் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் அநுராதபுரம், குருணாகல், பதுளை, மொனறாகலை ஆகிய மாவட்டங்களில் உலர் வலயத்தைச் சேர்ந்த 44 பிரதேச செயலாளர் பிரிவுகளில், 1,077 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் வசிக்கும் கிராமிய விவசாய மக்களின் வாழ்வாதாரத்தை விருத்தி செய்வதினூடாக அவர்களது பொருளாதாரத்தையும், வாழ்க்கைத் தரத்தையும் மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

இக் கருத்திட்டத்திற்காக 2012 ஆம் வருடத்திற்கு ரூ. 573.0 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டதுடன், வருட இறுதியாகும் போது ரூ. 516.0 மில்லியன் நிதி செலவு செய்யப்பட்டுள்ளது. இது 90% வீத நிதி முன்னேற்றத்தைக் காட்டுகின்றது. இங்கு திறைசேரி மேலும் ரூ. 40. மில்லியன் நிதியை குறித்த வருடத்திற்காகப் பெற்றுத் தர வேண்டியுள்ளது.

இக் கருத்திட்டத்தின் போது 05 ஆக்கக் கூறுகளின் கீழ் கருத்திட்டம் அமுல் செய்யப்படுகின்றது.

1. மேட்டுநில கமத்தொழில் அபிவிருத்தியும், மிருக வளர்ப்பும்
2. சிறிய நீர்ப்பாசன புனரமைப்பும் நீர் முகாமைத்துவமும்

3. சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி
4. சிறிய கடன் மற்றும் வருமானம் ஈட்டல்
5. சந்தைப்படுத்தல் நடவடிக்கைகள் விருத்தி

**கருத்திட்டத்தின் நிதி முன்னேற்றம்**

| | ஆக்கக் கூறு | 2012 நிதி முன்னேற்றம் | | | திரட்டிய நிதி முன்னேற்றம் (2012.12.31 வரை) | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | நிதி ஒதுக்கீடு (ரூ. மி.) | செலவு (ரூ. மி.) | % | நிதி ஒதுக்கீடு (ரூ. மி.) | செலவு (ரூ. மி.) | % |
| 1. | மேட்டுநில கமத்தொழில் அபிவிருத்தியும், மிருக வளர்ப்பும் | 69.0 | 69.0 | 99% | 380.0 | 368.2 | 97% |
| 2. | சிறிய நீர்ப்பாசன புனரமைப்பும் நீர் முகாமைத்துவமும் | 60.0 | 60.0 | 99% | 488.0 | 462.4 | 95% |
| 3. | சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி | 90.0 | 88.0 | 98% | 740.0 | 729.3 | 99% |
| 4. | சிறிய கடன் மற்றும் வருமானம் ஈட்டல் | 74.0 | 73.0 | 99% | 275.0 | 274.4 | 100% |
| 5. | சந்தைப்படுத்தல் நடவடிக்கைகள் விருத்தி | 140.0 | 110.0 | 76% | 320.0 | 250.7 | 78% |
| 6. | கருத்திட்ட முகாமைத்துவம் | 127.0 | 117.0 | 95% | 686.0 | 615.0 | 90% |
| 7. | காணி உடைமை தொடர்பான ஆய்வு | 13.0 | - | - | 42.0 | 30.0 | 71% |
| | **மொத்தம்** | **573.0** | **516.0** | **90%** | **2,891.0** | **2,730.0** | **94%** |

**<u>கருத்திட்டத்தின் மூலம் அடையப் பெற்ற பயன்கள்</u>**

### 1. மேட்டுநில கமத்தொழில் அபிவிருத்தியும், மிருக வளர்ப்பும்

வெளிக்களப் பாடசாலை முறை மூலம் அமுல் செய்யப்படுகின்ற இந் நிகழ்ச்சித் திட்டத்தினூடாக விதை உற்பத்தியை மேம்படுத்தல், விளைச்சலை 25% வீதத்தினால் அதிகரித்தல், சந்தைப்படுத்தல் தொடர்புகளை பேணுவதன் மூலம் வருமான மட்டத்தை மேம்படுத்தல் முதலான பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன. இந் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 2012 ஆம் வருடத்தில் 322 விவசாயப் பயிர் வெளிக்களப் பாடசாலைகள் நிறுவப்பட்டதுடன், பயனாளிகளான விவசாயிகளின் எண்ணிக்கை 3,000 இற்கும் அதிகமாகும். மேலும் இதன் கீழ் 104 பாற்பசு வளர்ப்புச் சங்கங்கள் நிறுவப்பட்டதுடன், இதன் பயனாளி விவசாயிகளின் எண்ணிக்கை 2,080 ஆகும்.

விதை அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 7 விவசாயிகள், பாதுகாப்பு வீடுகளில் போகமொன்றிற்கு உற்பத்தி செய்யப்படுகின்ற $G_0$ விதை உருளைக் கிழங்கைப் பயன்படுத்தி

விசேட காணிகளில் $G_1$ விதை உருளைக் கிழங்கை உற்பத்தி செய்து வருகின்றனர். தற்சமயம் சுமார் 3,000 விவசாயிகள் இந்த முறையின் கீழ் விதை உருளைக் கிழங்கைப் ($G_1$ விதை உருளைக் கிழங்கு) பெற்று வருவதுடன், இதன் காரணமாக உருளைக் கிழங்கு உற்பத்திச் செலவு ரூ. 52/- இலிருந்து ரூ. 23/- வரை குறைவடைந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.





பதுளை விதை உருளைக் கிழங்கு உற்பத்தி

வெளிக்களப் பாடசாலைகளுக்காக விவசாயிகள் அமைப்புகளினால் விவசாயத் திணைக்களத்திற்கு விதைகளை வழங்கும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மொனறாகலை, தெலுல்ல விவசாய அமைப்புகளினால் நிலக்கடலை, பயறு, கவுப்பி என்றவாறு 40,000 கி.கி. விதை வழங்கப்பட்டுள்ளது. குருணாகல் மாவட்ட விவசாய அமைப்பினால் 100,000 கி.கி. நிலக்கடலை விதை வழங்கப்பட்டுள்ளது.



தனமல்விலை தெலுல்ல சிறிய வெங்காய விதை உற்பத்தி



கஹட்டகஸ்திகிலிய பெரிய வெங்காய விதை உற்பத்தி

## 2. சிறிய நீர்ப்பாசன புனரமைப்பு

இக் கருத்திட்டத்தின் கீழ் 708 சிறிய நீர்ப்பாசனங்கள் (374 குளங்கள், 334 ஏரிகள்) புனரமைப்புச் செய்யப்பட்டதுடன், இதனூடாக சுமார் 18,850 ஏக்கர் நிலங்களுக்கு நீர்ப்பாசனம் வழங்க முடிந்துள்ளது. நீர்ப்பாசன முறைமைகளைச் தெரிவு செய்யும் போது மிகவும் சிரமமானதும், பயங்கரவாத அச்சுறுத்தல்களுக்கு உட்பட்டிருந்ததுமான நீர்ப்பாசன முறைமைகள் மீது முன்னுரிமை வழங்கப்பட்டதுடன், இவ்வாறு புனரமைப்புச் செய்யப்பட்ட நீர்ப்பாசன முறைமைகளுள் 51 நீர்ப்பாசன முறைமைகள் செயலிழந்த நிலையில் இருந்தமை குறிப்பிடத்தக்கது. இந் நீர்ப்பாசன முறைமைகளின் புனரமைப்பு காரணமாக பயிர்ச் செய்கை நிலங்களின் அளவு 3,270 ஏக்கராக அதிகரித்துள்ளது.

இத் திட்டத்தின் கீழ் 2012 ஆம் வருடத்தில் மட்டும் 56 ஏரி, குளங்கள் புனரமைக்கப்பட்டதுடன், மொத்த சிறிய நீர்ப்பாசன முறைமைகளின் மேம்படுத்தல் காரணமாக பயன் பெற்ற விவசாயிகளின் எண்ணிக்கை 1,700 இற்கும் அதிகமாகும். இந் நீர்ப்பாசன முறைமைகளின்

புனரமைப்பின் பின்னர் நீர்ப்பாசன பராமரிப்பு நிதியமொன்று ஆரம்பிக்கப்பட்டு பராமரிப்பு பொறுப்பாளரொருவர் நியமிக்கப்பட்டு நிலைபேறான பராமரிப்பு நடைமுறையொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.



**புனரமைப்புச் செய்யப்பட்ட ஒருசில ஏரிகளும் குளங்களும்**

### 3. சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி

கருத்திட்ட ஆளுகைப் பிரதேசங்களில் வசிக்கும் கிராமிய சமூகத்தின் பிரதான தேவைகளான விவசாயப் பாதைகள், குடிநீர் வசதிகள், மழைநீரை சேகரிப்பதற்கான தாங்கிகள் மற்றும் பிற வசதிகளை வழங்குவதினூடாக மக்களின் சமூக, பொருளாதார மட்டத்தை மேம்படுத்தும் பணிகள் இதனூடாக மேற்கொள்ளப்படுகின்றது. இதற்கமைய 78 விவசாயப் பாதைகளும், 4 பல்தேவை கட்டிடங்களும், 18 குடிநீர் வழங்கல் திட்டங்களும், சமூகத்தின் தேவையின் அடிப்படையில் 193 சிரமசக்தி நிகழ்ச்சித் திட்டங்களும் **(Cash for work)**, பிற உட்கட்டமைப்பு வசதிகளும் அதாவது தேகாரோக்கியம், சூரியசக்தி மின்சக்தி, பாலங்களையும் மதகுகளையும் செப்பனிடல் என்னறவாறு 98 வகையான அபிவிருத்திப் பணிகள் முடிக்கப்பட்டதுடன், இந்த ஆக்கக் கூறின் கீழ் பயனடைந்தோரின் எண்ணிக்கை 56,000 இற்கும் அதிகமாகும்.



**பால் சேகரிக்கும் நிலையங்களும், பாலர் பாடசாலைகளும்**

### 4. சந்தைப்படுத்தல் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி

சந்தைப்படுத்தல் ஊக்குவிப்பின் போது 10,000 முன் ஒப்பந்தங்களின் கீழ் பயிர்ச் செய்கைகளும், தனியார்துறையுடன் இணைந்து 90 பால் சேகரிக்கும் நிலையங்களை நிறுவுதலும், 40 வாராந்த சந்தைகளை மேம்படுத்தும் பணிகளும், போக்குவரத்து வசதிகளை இலகுபடுத்தும் வகையில் 700 விவசாயப் பாதைகளை மேம்படுத்தும் பணிகளும் மேற்கொள்ளப்பட்டன. அதேபோன்று கார்கில்ஸ் நிறுவனத்துடன் இணைந்து வெளிமடை, மடுல்ல பிரதேசங்களில் மரக்கறி, பழங்களைச் சேகரிக்கும் 02 நிலையங்களும் அமைக்கப்பட்டன.





பதுளை, வங்கியகும்புர மரக்கறி, பழங்களை சேகரிக்கும் சேகரிப்பு நிலையம்

மடுல்ல, ருவல்வெல நிலையம்

இதன் கீழ் நாளொன்றிற்கு சுமார் 5 - 7 மெற்றிக் தொன் வரை மரக்கறி கொள்வனவு செய்யப்படுவதின் காரணமாக பிரதேச விவசாயிகளுக்கு அளப்பரிய சேவை இடம்பெற்று வருகின்றது. 2012 ஆம் வருடத்தில் கருத்திட்ட ஆளுகைப் பிரதேசத்தில் சிறிய அளவிலான 32 சந்தைப்படுத்தல் அலகுகள் நிறுவப்பட்டதுடன், இதன் காரணமாக சுமார் 500 விவசாயக் குடும்பங்களுக்கு பயன் கிட்டியுள்ளது.





குருணாகல் மாவட்டத்தின் சிறிய தொழில் முயற்சி அபிவிருத்திக்கான கடன் வழங்கல்

கோழி வளர்ப்புக் கருத்திட்டம் - அநுராதபுரம்

## 5. சிறிய கடன் மற்றும் வருமானம் ஈட்டல்

சிறிய அளவிலான விவசாயத் தொழில் முயற்சிகளின் மேம்பாட்டிற்காக ***"பாக்யா", "அபேக்ஷா"*** எனும் பெயர்களில் 02 நிகழ்ச்சித் திட்டங்கள் அமுல் செய்யப்பட்டன. இந் நிகழ்ச்சித் திட்டத்தினூடாக குறைந்த வருமானம் பெறுவோருக்கு சுயதொழில்களில் ஈடுபட்டு குடும்ப வருமானத்தை அதிகரித்துக் கொள்வதற்காக கடன் வசதிகள் வழங்கப்படுகின்றது.

2012 ஆம் வருடத்தில் 1,007 குடும்பங்களுக்கு கடன் வழங்கப்பட்டதுடன், இதற்காக ரூ. 73.0 மில்லியன் நிதி செலவு செய்யப்பட்டுள்ளது. இலங்கை மத்திய வங்கி உள்ளிட்ட அரச வங்கிகளுடன் இணைந்து ***"பாக்யா"*** கடன் திட்டம் அமுல் செய்யப்பட்டதுடன், இலங்கை மகளிர் பணியகத்துடன் இணைந்து ***"அபேக்ஷா"*** கடன் திட்டம் அமுல் செய்யப்பட்டது. இதில் பயனாளிகளில் 80% வீதமானோர் பெண்கள் என்பது குறிப்பிடத்தக்கது.




வீட்டுக் கைத்தொழிலாக அலுமினியம் உற்பத்தி

**2012.12.31 வரை கருத்திட்டத்தின் திரட்டிய முன்னேற்றம்**

| | ஆக்க க் கூறு | திரட்டிய பௌதீக முன்னேற்றம் (2012.12.31 வரை) | |
|---|---|---|---|
| | | இலக்கு | முன்னேற்றம் |
| 1. | மேட்டுநில கமத்தொழில் அபிவிருத்தியும், மிருக வளர்ப்பும் | 3,600 விவசாய வெளிக்களப் பாடசாலைகள் | 3,228 விவசாய வெளிக்களப் பாடசாலைகள் |
| 2. | சிறிய நீர்ப்பாசன புனரமைப்பும், நீர் முகாமைத்துவமும் | 750 ஏரி, குளங்களைப் புனரமைப்புச் செய்தல் | புனரமைப்புச் செய்யப்பட்ட ஏரி, குளங்கள் 708 |
| 3. | சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி | • 750 விவசாயப் பாதைகள்<br>• 135 பல்தேவை கட்டிடங்கள்<br>• 105 நீர்வழங்கல் திட்டங்கள்<br>• 875 சிரமசக்தி நிகழ்ச்சித் திட்டங்கள்<br>• 800 பிற உட்கட்டமைப்பு வசதிகள் | • 738 விவசாயப் பாதைகள்<br>• 120 பல்தேவை கட்டிடங்கள்<br>• 114 நீர்வழங்கல் திட்டங்கள்<br>• 847 சிரமசக்தி நிகழ்ச்சித் திட்டங்கள்<br>• 897 பிற உட்கட்டமைப்பு வசதிகள் |
| 4. | சிறிய கடன் மற்றும் வருமானம் ஈட்டல் | 5,000 பயனாளிகள் | 4,631 பயனாளிகள் |
| 5. | சந்தைப்படுத்தல் நடவடிக்கைகளை மேம்படுத்தல் | • 20,000 முன் ஒப்பந்தங்கள்<br>• 300 சந்தை உட்கட்டமைப்பு வசதிகள்<br>• 2,000 சிறியளவிலான தொழில் முயற்சியாளர்கள்<br>• 3,000 "அபேக்ஷா" கடன் பயனாளிகள் | • 11,443 முன் ஒப்பந்தங்கள்<br>• 278 சந்தை உட்கட்டமைப்பு வசதிகள்<br>• 1,646 சிறியளவிலான தொழில் முயற்சியாளர்கள்<br>• 2,714 "அபேக்ஷா" கடன் பயனாளிகள் |

## 05. உணவு உற்பத்திக்கான ஜப்பான் கொடை – 2 KR

உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு ஒத்துழைப்பு வழங்கும் திட்டத்தின் கீழ் குறைந்த வசதியுடைய விவசாயிகளின் உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் ஜப்பான் அரசாங்கத்தினால் இலங்கைக்கு வழங்கப்படுகின்ற விவசாய உபகரணங்கள் வழங்கும் நிகழ்ச்சித் திட்டமாகும்.



இந் நிகழ்ச்சித் திட்டத்தின் **2KR**-2010 நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ஜப்பான் அரசாங்கத்திடமிருந்து 360.0 மில்லியன் யென் நிதி கொடையாகக் கிடைக்கப் பெற்றதுடன், இலங்கை அரசாங்கம் சுங்கத் தீர்வை உள்ளிட்ட உள்நாட்டுச் செலவுகளைப் பொறுப்பேற்றது. இந் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் சுழற்சிக் கலப்பையுடனான 50 நான்கு சில்லு உழவு இயந்திரங்கள் 2011 ஆம் வருடத்தில் கிடைக்கப் பெற்றதுடன், சுழற்சிக் கலப்பையுடனான 896 இரண்டு சில்லு கைஉழவு இயந்திரங்களும் கிடைக்கப் பெற்றன. 2012 ஆம் வருடத்திற்காக திறைசேரி நிதி ஒதுக்கீடாக ரூ. 585.0 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டதுடன், இதன் திருத்தப்பட்ட நிதி ஒதுக்கீடு ரூ. 493.7 மில்லியனாகும். 2012 ஆம் வருட இறுதியாகும் போது இந் நிகழ்ச்சித் திட்டத்தின் நிதி முன்னேற்றம் ரூ. 430.466 மில்லியனாகும்.

2012 ஆம் வருடத்தில் கிடைக்கப் பெற்ற சுழற்சிக் கலப்பையுடனான 896 இரண்டு சில்லு கைஉழவு இயந்திரங்கள் மற்றும் அதற்குரிய உதிரிப் பாகங்களுள், 820 இரண்டு சில்லு கைஉழவு இயந்திரங்களும், அதற்குரிய உதிரிப் பாகங்களும் கமநல அபிவிருத்தித் திணைக்களத்தினூடாக, தெரிவு செய்யப்பட்ட விவசாய அமைப்புகளைச் சேர்ந்த குறைந்த வசதிகளையுடைய விவசாயிகளுக்கு சலுகை விலைக்கு தவணைக் கொடுப்பனவின் கீழ் வழங்கப்பட்டதுடன், எஞ்சிய 76 கைஉழவு இயந்திரங்களும் விவசாயத் திணைக்களத்தின் விதை மற்றும் நடுகைப் பொருள் விவசாயப் பண்ணைகளுக்கும், ஆராய்ச்சி விவசாயப் பண்ணைகளுக்கும், திணைக்களத்தின் விரிவாக்கல் பிரிவின் பயிற்சி நடவடிக்கைகளுக்கும் வழங்கப்பட்டன.

## 06. பயிர் முன்னறிவிப்பு நிகழ்ச்சித் திட்டம்

இந் நிகழ்ச்சித் திட்டத்திற்காக 2012 ஆம் வருடத்திற்கு ரூ. 3.0 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டதுடன், இந் நிதி ஒதுக்கீடு ரூ. 2.85 மில்லினாக திருத்தப்பட்டது. வருட இறுதியாகும் போது நிதி முன்னேற்றம் ரூ. 2.126 மில்லியனாகும்.

- 2012 சிறு போகத்திற்கும் 2012/2013 பெரும் போகத்திற்கும் உரிய அட்டவணைகளும், மாதிரிப் படிவங்களும் அச்சிடப்பட்டு களத்தில் விநியோகிக்கப்பட்டு முடிக்கப்பட்டது.
- பிரதேச உத்தியோகத்தர்களையும், விவசாய ஆராய்ச்சி, உற்பத்தி உதவியாளர்களையும் தெளிவுபடுத்தும் 06 நிகழ்ச்சிகள் 06 மாவட்டங்களில் அமுல் செய்யப்பட்டன.
- சிறுபோகம் பெரும் போகம் ஆகிய இரு போகங்களுக்காகவும் நெல் மற்றும் உப உணவுப் பயிர்கள் தொடர்பில் 03 பயிர் முன்னறிவிப்பு அறிக்கைகள் தயாரிக்கப்பட்டன.
- சோளம், பெரிய வெங்காயம், பயறு, சிறிய வெங்காயம் முதலான பயிர்களுக்காக (மூன்றாவது போகம் உட்பட) போகங்களுக்கான 03 விசேட அறிக்கைகள் தயாரிக்கப்பட்டன.

## 07. சேதனப் பசளை உற்பத்தியையும் பாவனையையும் ஊக்குவிக்கும் நிகழ்ச்சித் திட்டம்

சேதனப் பசளை உற்பத்தியையும் பாவனையையும் ஊக்குவிக்கும் நிகழ்ச்சித் திட்டத்திற்காக 2012 ஆம் வருடத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீடு ரூ. 100.0 மில்லியனாகும். 2012 ஆம் வருடத்தில் இந் நிகழ்ச்சித் திட்டத்தை அமுல் செய்வதில் ரூ. 92.742 மில்லியன் நிதி செலவு செய்யப்பட்டிருப்பதுடன், இது 93% வீத நிதி முன்னேற்றமாகும்.



அம்பாறை மாவட்டத்தில் சேதனப் பசளை உற்பத்தி தொடர்பான பயிற்சி நிகழ்ச்சியொன்று

கடந்த வருடங்களைப் போன்றே 2012 ஆம் வருடத்திலும் இந் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பல செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. இங்கு கிராமிய மட்டத்தில் முன்னெடுக்கப்படுகின்ற சேதனப் பசளை உற்பத்தி நிகழ்ச்சித் திட்டம் முக்கிய இடம் வகிக்கின்றது. இதற்காக அம்பாறை, ஹம்பாந்தோட்டை மாகாணங்களுக்கிடையிலான ஆளுகைப் பிரதேசங்களிலிருந்தும், மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களிலிருந்தும் 23,420 விவசாயிகளின் பங்களிப்பு பெற்றுக் கொள்ளப்பட்டது.

இங்கு, விவசாயிகளை சேதனப் பசளை உற்பத்தியின் பக்கம் ஊக்குவிக்கும் வகையில் 3 விரல் மண்வெட்டி முள், 25 கி.கி. றொக் பொஸ்பேற், 3.5 கி.கி. கறுப்புப் பொலித்தீன், 5 கி.கி. கொண்ட பண்படுத்திய உரம் என்பன அடங்கிய 23,420 பொருட் தொகுதிகள் நிகழ்ச்சித் திட்டத்தில் இணைந்து கொண்ட விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது.

இந் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 2012 ஆம் வருடத்தில் 25,774 விவசாயிகளுக்கும், 2,310 உத்தியோகத்தர்களுக்கும் பயிற்சியளிக்கப்பட்டது. இதற்கு மேலதிகமாக, சேதனப் பசளை உற்பத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் முன்னோடி நிலையமாக விளங்கும் மாக்கந்துற பிரதேச விவசாய ஆராய்ச்சி, அபிவிருத்தி நிலையத்தினூடாக சேதனப் பசளை, உற்பத்தியும் பாவனையும் தொடர்பில் 364,650 துண்டுப் பிரசுரப் பிரதிகள் அச்சிடப்பட்டு விநியோகிக்கப்பட்டுள்ளன.

2012 ஆம் வருடத்தில் இக் கருத்திட்டத்தின் பங்களிப்பில் விவசாயிகளினாலும், மாக்கந்துற பிரதேச விவசாய ஆராய்ச்சி, அபிவிருத்தி நிலையத்தினூடாகவும் சுமார் 34,191 மெற்றிக் தொன் சேதனப் பசளை உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. 1 கி.கி. சேதனப் பசளையின் விலை ரூ. 7.00 எனக் கொள்ளும் போது, உற்பத்தி செய்யப்பட்ட சேதனப் பசளையின் பணப் பெறுமதி சுமார் ரூ. 239.0 மில்லியனாகும். இந் நிகழ்ச்சித் திட்டத்திற்காக செலவு செய்யப்பட்ட நிதியிலும் பார்க்க உற்பத்தி செய்யப்பட்ட சேதனப் பசளையின் பணப் பெறுமதி அதிகமாக இருப்பது இங்கு முக்கியமாக கவனத்திற் கொள்ளப்பட வேண்டும்.



மாக்கந்துற பிரதேச விவசாய ஆராய்ச்சி, அபிவிருத்தி நிலையத்தில் பண்படுத்திய உரப் பொதிகளை வியோகிப்பதற்கு ஆயத்தப்படுத்தல்

இதற்கு மேலதிகமாக இக் கருத்திட்டத்தின் கீழ் பல்வேறு செயற்பாடுகளும் அமுல் செய்யப்பட்டுள்ளன. சேதனப் பசளை உற்பத்தியை ஊக்குவிக்கும் வகையில் பயிற்சிச் செயலமர்வுகளில் கலந்து கொண்டோர், கண்காட்சிகளிலும், பிற நிகழ்ச்சிகளிலும் கலந்து கொண்டோர்கள் என்றவாறு 5 கி.கி. எடைகொண்ட 18,365 பண்படுத்திய உரப் பொதிகள் பகிர்ந்தளிக்கப்பட்டன.

மாக்கந்துற முன்னோடி நிலையத்தில் மேற்கொள்ளப்பட்ட 03 மாதிரிகள் மூலம், இரசாயன உரப் பாவனையை 25% வீதத்தினால் குறைத்து சேதனப் பசளை இடுவதன் மூலம் இரசாயன உரத்தை மட்டும் இடுவதிலும் பார்க்க விளைச்சல் அதிகரித்துள்ளமை தெளிவாகக் கண்டறியப்பட்டுள்ளது.

சேதனப் பசளை உற்பத்திக்காக பயன்படுத்தப்படுகின்ற பல்வேறு மூலப் பொருட்களையும், அதாவது மண், சேதனப் பசளை மாதிரிகள் என 527 வகையான மாதிரிகளை பகுப்பாய்வு செய்வதற்கு இலக்கு வைக்கப்பட்டதுடன், இந்த 527 மாதிரிகளும் பகுப்பாய்விற்கு உட்படுத்தப்பட்டு இந்த இலக்கு அடையப் பெற்றிருப்பதுடன், அவற்றில் அடங்கியுள்ள போசாக்குப் பொருட்கள், பார உலோகம் தொடர்பிலும் பகுப்பாய்வுகள் மேற்கொள்ளப்பட்டன.



**மாக்கந்துற முன்னோடி நிலையத்தில் அமைக்கப்பட்டு வரும் பயிற்சிக் கட்டிடம்**

சேதனப் பசளை பாவனையை பிரபல்யப்படுத்தும் நோக்குடன் 03 கண்காட்சிகள், 120 வெளிக்கள நாட்கள், 07 ஊடக நிகழ்ச்சிகள் என்பன நடாத்தப்பட்டுள்ளன.

மேற்சொன்ன செயற்பாடுகளுக்கு மேலதிகமாக, 2012 ஆம் வருடத்தில் இக் கருத்திட்டத்தினூடாக, இந் நிகழ்ச்சித் திட்டத்தின் முன்னோடி நிலையமாகச் செயற்படும் மாக்கந்துற பிரதேச விவசாய ஆராய்ச்சி, அபிவிருத்தி நிலையத்திற்காக பயிற்சி நடவடிக்கைகளுக்கென கட்டிடமொன்றை அமைப்பதற்கு 2012 மே மாதம் 10 ஆம் திகதி அடிக்கல் நாட்டப்பட்டு ஆரம்பிக்கப்பட்டதுடன், வருட இறுதியாகும் போது இக் கட்டிட நிர்மாணப் பணிகளுள் சுமார் 60% வீதம் முற்றுப் பெற்றுள்ளது.

கமத்தொழில் அமைச்சு, விவசாயத் திணைக்களம், திருகோணமலை, மட்டக்களப்பு மாகாண விவசாயத் திணைக்களங்களூடாக இந் நிகழ்ச்சித் திட்டம் அமுல் செய்யப்பட்டது.

## 08. ஜப்பான் எதிர்மறை நிதியின் கீழ் அரசாங்க விதை உற்பத்திப் பண்ணைகளை அபிவிருத்தி செய்தல் (முருங்கன், பரந்தன்)

முருங்கன், பரந்தன் அரசாங்க விதை உற்பத்திப் பண்ணைகளில் விதை உற்பத்தியை ஆரம்பிப்பதே இத் திட்டத்தின் பிரதான நோக்கமாகும். இக் கருத்திட்டத்திற்கான நிதி **JICA** மற்றும் இணைந்த நிதியத்தினால் வழங்கப்படுகின்றது. 2012 ஆம் வருடத்திற்காக திறைசேரி

நிதி ஒதுக்கீடாக ரூ. 85.0 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டதுடன், திருத்தப்பட்ட நிதி ஒதுக்கீடு ரூ. 72.752 மில்லியனாகும். 2012 ஆம் வருடத்தில் நிதி முன்னேற்றம் ரூ. 52.599 மில்லியனாகும்.

முருங்கன், பரந்தன் அரசாங்க விதை உற்பத்திப் பண்ணைகளின் பிரதான அபிவிருத்திப் பணிகள்:

- நீர்ப்பாசன முறைமைகளையும், நீர்வழங்கல் முறைமைகளையும் மேம்படுத்தல்.
- விவசாய இயந்திரோபகரணங்களை புனரமைத்தல்.
- விவசாயக் கிணறுகளை அமைத்தல்.
- வாகனங்களைக் கொள்வனவு செய்தல்.
- நிலத்தைச் செப்பனிடலும், உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தலும்.

இவ் அபிவிருத்திப் பணிகள் 100% வீதம் முற்றுப் பெற்றுள்ளன.

## 09. தேசிய விவசாய ஆராய்ச்சிக் கொள்கை (NARP)

"மஹிந்த சிந்தனை" கொள்கைப் பிரகடனத்திற்கு அமைவாக, 2012 - 2016 காலப்பகுதிக்கான தேசிய விவசாய ஆராய்ச்சிக் கொள்கை வகுக்கப்பட்டு முடிக்கப்பட்டுள்ளது. இதன் போது சட்ட மற்றும் வழிநடாத்தல் பொறிமுறை என்பவற்றின் போது விசேட துறைகள், முன்னுரிமை சீராக்கல்கள், நிதி வளங்களை ஒன்று திரட்டல், வள அறிவையும் தொழில்நுட்பங்களையும பரிமாறிக் கொள்ளல், சாத்தியவள விருத்தி என்பவற்றின் மீது கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

### தேசிய விவசாய ஆராய்சித் திட்டம் - 2012

தேசிய விவசாய ஆராய்சித் திட்டம் என்பது, இணைந்த திட்டமொன்றைப் போன்றே தேசிய விவசாய ஆராய்ச்சி முறைமையின் ஆராய்ச்சி நிகழ்ச்சி நிரலில் அடங்கியுள்ள செயற் திட்டமொன்றுமாகும். இத் தேசிய விவசாய ஆராய்ச்சித் திட்டத்தின் கீழ் 186 அறிவு ஆராய்ச்சிக் கருத்திட்டங்கள் அமுல் செய்யப்படுவதுடன், இதன் மூலம் விவசாயத்துறையில் எழுந்துள்ள பிரதான பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

அதாவது, குறைந்த பழுதுடைய பயிர்கள், தரத்தில் சிறந்த விதை மற்றும் நடுகைப் பொருட்களைப் பயன்படுத்துவதிலுள்ள பின்னணி, உழைப்புப் பற்றாக்குறை, முறையற்ற பீடைநாசினிப் பாவனை, உயிரியில் பீடைநாசினிப் பாவனைக்கு ஊக்கம் காட்டாமை, அதிகரித்த விளைச்சலுக்குப் பிந்திய நட்டம், முடிவுப் பொருள் பெறுமதியை அதிகரித்தல், பயிர் உற்பத்திகளுக்காகக் காணப்படுகின்ற வெளிநாட்டுக் கேள்வி, உயிரியல் உரப் பாவனைக்கு விவசாயிகளைத் தூண்டுதல், உற்பத்திகளை மட்டுப்படுத்தல், விவசாயத்துறையில் தாக்கம் செலுத்தும் சூழல் காரணிகளும் அதனுடன் தொடர்புடைய பிரச்சினைகளும், தொழில்நுட்பப் பரிமாற்றம், வேலை வாய்ப்பும் உழைப்புப் பயன்பாடும், மிருக வளர்ப்பு, மீள் உற்பத்தி, மீன்பிடி, விவசாயத்துறை இவற்றுள் மிக முக்கிய பிரச்சினைகளாக இனங்காணப்பட்டுள்ளன. மேலும், தேசிய விவசாய ஆராய்ச்சி, கொள்கைப் பேரவையின் விசேட குழுவொன்றினால் இவ் ஆராய்ச்சி நிகழ்ச்சித் திட்டங்களை அமுல் செய்வதற்கு சிபாரிசு செய்யப்பட்டுள்ளது. அதே போன்று தேசிய விவசாய ஆராய்ச்சித் திட்டம் விசேட குழுவொன்றினால் தொடர்

மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்படும். மேலும், இதற்குத் தேவையான ஆலோசனைகள், ஆராய்ச்சி நிகழ்ச்சி மற்றும் கருத்திட்டங்கள் தொடர்பான தேசிய குழுவினால் வழங்கப்படும்.

**தேசிய, சர்வதேச நிறுவனங்களுக்கிடையில் உறவுகளைப் பேணல்**

ஆராய்ச்சி நிகழ்ச்சிகள் மற்றும் கருத்திட்டங்கள் தொடர்பிலான தேசிய குழு, வலயத்திலுள்ள சம நிறுவனங்களுடன் தொடர்புகளை ஆரம்பித்துள்ளது. இதன் போது பெரிதும் பயன் தரக்கூடிய ஒப்பந்தம், விவசாய ஆராய்ச்சிக்கான சர்வதேச கவுன்சிலுடன் செய்து கொள்ளப்பட்டுள்ளது. இதற்கமைய, 2012 ஆம் வருடத்தில் 09 உள்நாட்டு விஞ்ஞானிகள், விவசாய ஆராய்ச்சிக்கான சர்வதேச கவுன்சிலின் கீழுள்ள பல்கலைக்கழகங்களில் பல்வேறு பயிற்சிப் பாடநெறிகளைப் பின்பற்றியுள்ளனர். அதாவது, இந்திய விவசாய ஆராய்ச்சி நிறுவனம், தேசிய பாற் பண்ணை ஆராய்ச்சி நிறுவனம், மீன்பிடிக் கல்வி தொடர்பான மத்திய நிறுவனம், தமிழ்நாடு மத்திய நிறுவனம் முதலான நிறுவனங்களில் பயிற்சிப் பாடநெறிகளைப் பின்பற்றி வருவதுடன், இவர்கள் காலநிலை மாற்றங்களுக்கு ஏற்ப விவசாயத்தில் ஈடுபடுதல், விவசாயத்துறை ஆராய்ச்சி, அபிவிருத்தியின் போது பெண்களின் பங்குபற்றுதலையும் பங்களிப்பையும் அதிகரித்தல், உயிரியல் தொழில்நுட்ப விதிகளைப் பின்பற்றுதலை விருத்தி செய்தல் முதலானவையாகும்.

**வெளிவாரி மீளாய்வு**

நிபுணத்துவ பணியாட் தொகுதியொன்றினால் மிருக வைத்திய ஆராய்ச்சி நிறுவகத்தின் தரம், செலவுகளை வினைத்திறன் மிக்கவாறு மேற்கொள்ளல் என்பன தொடர்பில் மதிப்பீடொன்று மேற்கொள்ளப்பட்டதுடன், மீளாய்வுக் குழுவின் சிபாரிசுகள், மிருக வைத்திய ஆராய்ச்சி நிறுவகத்திற்கும் அதே போன்று கால்நடை வள, கிராமிய தோட்ட அபிவிருத்தி அமைச்சிற்கும் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது.

**ஆராய்ச்சிக் கொடுப்பனவுகள்**

தகுதி பெறும் விண்ணப்பதாரிகளுக்கான ஆராய்ச்சிக் கொடுப்பனவு அங்கீகரிக்கப்பட்டிருப்பதுடன், இதனை இலங்கை விவசாய ஆராய்ச்சி கொள்கைப் பேரவையினால் உரிய நிறுவனங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

**தெளிவூட்டல்**

அரச தாவரவியல் பூங்காவுடனான ஒத்துழைப்புடன் தோட்டப் பயிர்ச் செய்கை தொடர்பில் தேசிய மாநாடொன்றை ஏற்பாடு செய்தல், சேதன விவசாயத்தை முன்னுரிமைப்படுத்தலும், வழிநடாத்தலும் தொடர்பில் செயலமர்வொன்றை நடாத்தல், இலங்கை சேதன விவசாய ஆராய்ச்சி அடிப்படை அம்சங்கள் மற்றும் விதிப்பனவுகளை வகுத்தல் தொடர்பில் தரப்பினர்களுடன் இணைந்து கருத்தரங்குகளை நடாத்தல் என்பது தெளிவூட்டுவதில் எடுக்கப்பட்ட முக்கிய நடவடிக்கைகளாகும்.

**நூலக/விவசாயத் தகவல் வலையமைப்பு**

விவசாயத் தகவல் வலையமைப்பின் நிலையமான கொள்கைப் பேரவைக்குச் சொந்தமான நூலகத்தை, விஞ்ஞானிகளுக்கு, விவசாயிகளுக்கு, ஆய்வுப் பணிகளில் ஈடுபட்டுள்ளோருக்கு,

தனியார்துறை நிறுவனங்களுக்கு/நபர்களுக்கு, அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு தகவல்களை வழங்கும் பணிகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுகின்றது.

**தரவுத் தளம் - 2012**

தகவல் தரவுகளை மேம்படுத்தும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதற்கமைய, விவசாய ஆராய்ச்சிகளில் ஈடுபட்டுள்ள ஆராய்ச்சியாளர்களுக்கு/முகாமையாளர்களுக்கு, தீர்மானங்களை எடுப்பதற்கு இலகுவாக இற்றைப்படுத்தப்பட்ட தரவுகளைப் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கும்.

## 10. பெரிய வெங்காய உற்பத்தி நிகழ்ச்சித் திட்டம்

2013 ஆம் வருடமாகும் போது உள்ளூரில் 25,000 கி.கி. பெரிய வெங்காய விதையை உற்பத்தி செய்து கொள்வதும், இதனூடாக தரத்தில் சிறந்த பெரிய வெங்காய விதைகளை விவசாயிகளுக்கு விநியோகிப்பதுமே இந் நிகழ்ச்சித் திட்டத்தின் பிரதான நோக்கமாகும். இந் நிகழ்ச்சித் திட்டத்திற்காக 2012 ஆம் வருடத்திற்கு ரூ. 22.0 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டதுடன், இதில் ரூ. 7.472 மில்லியன் நிதி செலவு செய்யப்பட்டுள்ளது. இந் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 2012 ஆம் வருடத்தில் சுமார் 900 விவசாயிகள் பங்குபெறச் செய்யப்பட்டனர். இதன் கீழ் சுமார் 157,000 கி.கி. தாய்க் கிழங்கு செயற்கை வளர்ப்பிற்காக (vernalization) ஈடுபடுத்தப்பட்டுள்ளது. 2012 ஆம் வருடத்தில் நாட்டில் சுமார் 23,000 கி.கி. பெரிய வெங்காய விதை உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. மேலும், இந் நிகழச்சித் திட்டத்தின் கீழ் மழையிலிருந்து பாதுகாப்புப் பெறுவதற்கான 19 மூடும் உறைகள், 39 களஞ்சிய தட்டுகள் என்பன வழங்கப்பட்டுள்ளன. 10 வெளிக்கள நாட்கள் நடாத்தப்பட்டுள்ளன. 10 விவசாயிகளுக்கும், உத்தியோகத்தர்கள் இருவருக்கும் மேலதிக பயிற்சிகளைப் பெற்றுக் கொள்ளும் பொருட்டு இந்திய ஆய்வுச் சுற்றுலாவொன்று வழங்கப்பட்டது.

2013 ஆம் வருடமாகும் போது உற்பத்திக்குப் பொருத்தமான புதிய இனங்களை இனங் கண்டு, பாரிய அளவில் பெரிய வெங்காயத்தையும், சிறிய வெங்காயத்தையும் உற்பத்தி செய்வதற்குத் திட்டமிடப்பட்டிருப்பதுடன், நாட்டிற்கான பெரிய வெங்காய விதைத் தேவையாக இலக்கு வைக்கப்பட்டுள்ள 35,000 கி.கி. பெரிய வெங்காய விதையையும் உள்நாட்டிலேயே உற்பத்தி செய்து கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. இந் நிகழ்ச்சித் திட்டத்திற்காக 2013 ஆம் வருடத்திற்கு ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 20.0 மில்லியனாகும். இதற்கு மேலதிகமாக, 1,000 கி.கி. சிறிய வெங்காய விதையையும் உற்பத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.





பெரிய வெங்காய விதை உற்பத்தி

## 11. “தேசத்திற்கு மகுடம்” தேசிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டமும் கண்காட்சியும் - 2012

“தேசத்திற்கு மகுடம்” தேசிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டமும் கண்காட்சியும் இவ் வருடம் அநுராதபுரம் மாவட்டத்தின் ஒயாமடுவ பிரதேசத்தை மையமாகக் கொண்டு நடாத்தப்பட்டது.

அமைச்சின் கீழுள்ள அனைத்து நிறுவனங்களும், மாகாண விவசாயத் திணைக்களங்களும் இணைந்து இந் நிகழ்ச்சித் திட்டத்திற்கு தமது பங்களிப்பை வழங்கியதுடன், பிரதானமாக கண்காட்சி வளவில் விவசாயத் தோட்டமொன்று அமைக்கப்பட்டதுடன், பிரதேச அபிவிருத்தியை நோக்காகக் கொண்டு மாதிரிக் கிராமம் நிகழ்ச்சித் திட்டமும் அமுல் செய்யப்பட்டது.

இப் பணிகளுக்காக அமைச்சின் 2011/12 நேரடி நிதி ஒதுக்கீடுகளின் கீழ் ஒதுக்கப்பட்ட தொகையிலிருந்து ரூ. 65.5 மில்லியன் நிதி செலவு செய்யப்பட்டதுடன், கமத்தொழில் அமைச்சின் சேதனப் பசளை உற்பத்தியையும் பாவனையையும் ஊக்குவிக்கும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ரூ. 4.31 மில்லியன் நிதியும், உலர் வலய வாழ்வாதாரத்தைக் கட்டியெழுப்பும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் (IFAD) ரூ. 186.0 மில்லியன் நிதியும் செலவு செய்யப்பட்டு கருத்திட்டங்கள் அமுல் செய்யப்பட்டன. 2012 ஆம் வருடத்திற்காக ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீட்டில் எஞ்சிய ரூ. 28.5 மில்லியன் நிதி, 2013 தேசத்திற்கு மகுடம் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டமும் கண்காட்சியும் நடைபெறவுள்ள அம்பாறை மாவட்டத்தின் கண்காட்சி வளவு அபிவிருத்திப் பணிகளுக்கும் அதற்குச் சமாந்திரமாக அம்பாறை, பொலநறுவை, மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களில் அமுல் செய்யப்படவுள்ள அபிவிருத்திப் பணிகளுக்குமாக ஒதுக்கப்பட்டது.

<u>குறித்த நிறுவனங்களில் அமுல் செய்யப்பட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களும் அவற்றின் முன்னேற்றமும்</u>

### 1. விவசாயத் திணைக்களத்தினால் அமுல் செய்யப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள்

- ஒதுக்கப்பட்ட தொகை - ரூ. 44.5 மில்லியன்
- நிதி முன்னேற்றம் - ரூ. 42.05 மில்லியன்

களப் பயிர் ஊக்குவிப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் இப்பலோகமை பிரதேச செயலாளர் பிரிவில் 5 ஏக்கர் நிலப்பரப்பில் நீர்ப்பாசன வசதிகளை ஏற்படுத்தல், உப உணவுப் பயிர் விதை உற்பத்தி, பல்லாண்டுப் பயிர் நடுகை, 5 ஏக்கர் நிலப்பரப்பில் புல் வளர்த்தல் முதலான பணிகள் மேற்கொள்ளப்பட்டன. மேலும், விவசாயிகளுக்கும் உத்தியோகத்தர்களுக்கும் பயிற்சியளித்தல், 90 மண் மாதிரிகளையும், 134 நீர் மாதிரிகளையும் பகுப்பாய்வு செய்தல் முதலான பணிகளும் மேற்கொள்ளப்பட்டன.

தேசத்திற்கு மகுடம் கண்காட்சியின் போது, காட்சிக் கூடங்கள்/அலகுகளுள் விவசாயக் கண்காட்சி அலகிற்கு முதலிடம் கிடைக்கப் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

### 2. மாகாண விவசாயத் திணைக்களங்களினால் அமுல் செய்யப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள்

- ஒதுக்கப்பட்ட தொகை - ரூ. 9.0 மில்லியன்
- நிதி முன்னேற்றம் - ரூ. 4.4 மில்லியன்

பிரதி விவசாயப் பணிப்பாளர் அலுவலகத்தினூடாக மாவட்டத்தின் 8 பிரதேச செயலாளர் பிரிவுகளில் 688 ஏக்கர் நிலப்பரப்பில் நல்ல தரத்திலான விதை நெல் உற்பத்தி, நெற் செய்கையில் புதிய தொழில்நுட்பத்தை அறிமுகம் செய்தல், 2 ஏக்கர் நிலப்பரப்பில் மரக்கறிச் செய்கையையும், 92 ஏக்கர் நிலப்பரப்பில் மா, பப்பாசிச் செய்கையையும் மேற்கொள்ளல், தரத்தில் சிறந்த அரிசி உற்பத்தியை மேற்கொள்ளும் வகையில் 2 கிராமங்களுக்கு நெல் அவிக்கும் 56 பெரல்களைப் பெற்றுக் கொடுத்தல், 320 ஏக்கர் நிலப்பரப்பில் உப உணவுப் பயிர்ச் செய்கையை மேற்கொள்ளல், 1,000 கி.கி. பெரிய வெங்காய விதை உற்பத்தியை மேற்கொள்ளல், 163 விவசாயிகளை சேதனப் பசளை உற்பத்தியில் ஈடுபடுவதற்கு ஈடுபடுத்தல் முதலான பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

**3. வடமத்திய மாகாண விவசாயத் திணைக்களத்தினால் அமுல் செய்யப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள்**

- ஒதுக்கப்பட்ட தொகை - ரூ. 12.0 மில்லியன்
- நிதி முன்னேற்றம் - ரூ. 5.86 மில்லியன்





**விவசாயக் கண்காட்சிப் பூமி -**

பரஷூட் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி 90 ஏக்கர் நிலப்பரப்பில் விதை நெல் உற்பத்தியை மேற்கொள்ளல், 16,185 கி.கி. பெரிய வெங்காய விதை உற்பத்தியை மேற்கொள்ளல், உப உணவுப் பயிர்ச் செய்கையின் கீழ் 105 ஏக்கர் நிலப்பரப்பில் உளுந்து, கவுப்பி, பயறுச் செய்கைகளை மேற்கொள்ளல், பழச் செய்கையின் கீழ் 120 ஏக்கர் நிலப்பரப்பில் மா, பப்பாசிச் செய்கையை மேற்கொள்ளல், மரக்கறிச் செய்கையை மேற்கொள்ளல், 06 தேனீ வளர்ப்புக் கிராமங்களை நிறுவுதல் முதலான பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

**4. அறுவடைக்குப் பிந்திய தொழில்நுட்ப நிறுவனத்தினால் அமுல் செய்யப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள்**

- ஒதுக்கப்பட்ட தொகை - ரூ. 3.0 மில்லியன்
- நிதி முன்னேற்றம் - ரூ. 1.33 மில்லியன்

இதன் கீழ் 28 பயிற்சி நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டு 933 பயனாளிகளுக்கு அறுவடைக்குப் பிந்திய தொழில்நுட்பம் தொடர்பில் பயிற்சியளித்தல், 03 அரிசி ஆலைகளை மேம்படுத்தல், 04 பேக்கரி இல்லங்களுக்கு அரிசி சார்ந்த உற்பத்திகளை அறிமுகம் செய்தல், 05 அரிசி மாவு உற்பத்தி

ஆலைகளை நவீனமயப்படுத்தல், 10 தானிய மற்றும் வாசனைத் திரவியப் பயிர் பதனிடும் அலகுகளை நிறுவுதல், பழம்/புளியம்பழம் சார்ந்த உற்பத்திகளைப் பிரபல்யப்படுத்தல், மரக்கறிகளையும் பழங்களையும் கையாள்வதற்காக 800 பிளாஸ்ரிக் கூடைகளை அறிமுகம் செய்தல் முதலான நிகழ்ச்சித் திட்டங்கள் அமுல் செய்யப்பட்டன.

**இலங்கை ஹதபிம அதிகார சபையினால் அமுல் செய்யப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள்**

- ஒதுக்கப்பட்ட தொகை - ரூ. 5.0 மில்லியன்
- நிதி முன்னேற்றம் - ரூ. 1.38 மில்லியன்

இந் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 250 விவசாயிகளை இணைத்துக் கொண்டு கோணகும்புக்வெவ கிராம உத்தியோகத்தர் பிரிவில் சிறிய குளங்கள் சார்ந்த மண்வள மற்றும் நீரேந்து பிரதேசகளைப் பாதுகாப்பதற்கான நிலைபேறான காணி முகாமைத்துவ முன்னோடிக் கருத்திட்டத்தை அமுல் செய்தல், விவசாய உபகரணங்களைப் பகிர்ந்தளித்தலின் கீழ் 2 சில்லு கைஉழவு இயந்திரங்கள், மண்வெட்டி, வீல்பரோ, முள் முதலான விவசாய உபகரணங்களைப் பகிர்ந்தளித்தல், 50 புசல் விதை நெல்லை பகிர்ந்தளித்தல் முதலான பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

5. **ஹெக்டர் கொப்பேகடுவை விவசாய ஆராய்ச்சி, பயிற்சி நிறுவனத்தினால் அமுல் செய்யப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள்**

- ஒதுக்கப்பட்ட தொகை - ரூ. 7.0 மில்லியன்
- நிதி முன்னேற்றம் - ரூ. 7.89 மில்லியன்

இந் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ரம்பேவ பிரதேச செயலாளர் பிரிவில் 250 இல்ல அலகுகளை பிரதானமாகக் கொண்டு பங்குபற்றுதலுடனான கிராம தேடிப்பார்த்தல் மற்றும் சமூக, பொருளாதார மதிப்பீட்டை மேற்கொள்ளல், விவசாயத்துறை உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தலின் கீழ் 5 குளங்களை புனரமைத்தலும் இதனூடாக 248 பயனாளிகளுக்கான நீர்ப்பாசன வசதிகளை மேம்படுத்தலும், சுயதொழில்களை மேற்கொள்வதற்காக உபகரணங்களை விநியோகித்தல், கோணகும்புக்வெவ பாடசாலையில் திருத்த வேலைகளை மேற்கொள்ளல், 10 மழைநீரைச் சேகரிப்பதற்கான நீர்த் தாங்கிகளை அமைத்தல், பொதுக் கிணறுகளை பழுதுபார்த்தல், 150 இல்ல அலகுகளுக்கு வீட்டுத் தோட்டச் செய்கைக்கான விதைகளை விநியோகித்தல், குள ஒதுக்கங்களை அபிவிருத்தி செய்தல், மா, தெங்கு, மாதுளை, கொய்யா, தோடை, எழுமிச்சை முதலான நாற்று மேடைகளை முன்னெடுத்துச் செல்லல், 04 விவசாய அமைப்புகளைச் சேர்ந்த உறுப்பினர்களுக்கு சந்தைப்படுத்தல் தொடர்பில் தெளிவூட்டும் பயிற்சி நிகழ்ச்சிகளை நடாத்தல் முதலான பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

**தேசிய உணவு ஊக்குவிப்புச் சபையினால் அமுல் செய்யப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள்**

- ஒதுக்கப்பட்ட தொகை - ரூ. 2.0 மில்லியன்
- நிதி முன்னேற்றம் - ரூ. 2.59 மில்லியன்

இந் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ், சமயலறை அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் கோணகும்புக்வெவ கிராமத்திலுள்ள 250 வீடுகளுக்கு சமயலறை உபகரணங்களைப் பெற்றுக் கொடுத்தல், மானிங்கம கிராம அபிவிருத்திப் பணிகள் சார்பில் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு விவசாய உபகரணங்களை விநியோகித்தல், சேதனப் பசளைப் பொதிகளை விநியோகித்தல், மா, தெங்கு, தோடைச் செடிகளை விநியோகித்தல், 03 உள்ளூர் உற்பத்தி விற்பனை நிலையங்களை அமைத்தல் முதலான பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

### 6. கமத்தொழில் அமைச்சின் சேதனப் பசளைப் பிரிவினால் அமுல் செய்யப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள்

- ஒதுக்கப்பட்ட தொகை - ரூ. 4.5 மில்லியன்
- நிதி முன்னேற்றம் - ரூ. 4.3 மில்லியன்

இந் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ரம்பேவ பிரதேச செயலாளர் பிரிவில் 240 விவசாயிகளின் பங்களிப்புடன் சேதனப் பசளை உற்பத்தி நிகழ்ச்சித் திட்டத்தை அமுல் செய்தல், ஏனைய 21 பிரதேச செயலாளர் பிரிவுகளும் உட்படுமாறு 21 கிராமங்களில் சேதனப் பசளை உற்பத்தி நிகழ்ச்சித் திட்டத்தை அமுல் செய்யும் வகையில் உபகரணத் தொகுதிகளைப் பெற்றுக் கொடுத்தல் முதலான நிகழ்ச்சித் திட்டங்கள் அமுல் செய்யப்பட்டதுடன், இதன் கீழ் சுமார் 2,800 மெற்றிக் தொன் சேதனப் பசளை உற்பத்தி செய்யப்பட்டது.

### 7. உலர் வலய வாழ்வாதாரத்தைக் கட்டியெழுப்பும் நிகழ்ச்சித் திட்டத்தினால் (IFAD) அமுல் செய்யப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள்

- ஒதுக்கப்பட்ட தொகை - ரூ. 186.0 மில்லியன்
- நிதி முன்னேற்றம் - ரூ. 186.0 மில்லியன்

இந் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 16 பிரதேச செயலாளர் பிரிவுகள் உட்படுமாறு மேட்டுநில அபிவிருத்தி, சந்தைப்படுத்தல் மற்றும் சிறு தொழில்முயற்சி அபிவிருத்தி, சிறு கடன் வழங்கலும் வருமானம் ஈட்டலும், சிறிய நீர்ப்பாசனங்களைப் புனரமைத்தல், சமூக உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல் முதலான நிகழ்ச்சித் திட்டங்கள் அமுல் செய்யப்பட்டன.

## 12. மன்னார் மாவட்டத்தில் இடம்பெயர்ந்த மக்களின் உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக ஒத்துழைப்பு வழங்கல்

இக் கருத்திட்டத்திற்காக 2012 ஆம் வருடத்திற்கு திறைசேரி நிதி ஒதுக்கீடாக ரூ. 40.0 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டதுடன், இதன் நிதி முன்னேற்றம் ரூ. 44.594 மில்லியனாகும். மன்னார் மாவட்டத்தில் இடம்பெயர்ந்த மக்களின் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்வதற்கு ஒத்துழைப்பு வழங்குவதே இந் நிகழ்ச்சித் திட்டத்தின் பிரதான நோக்கமாகும். இதுவரை மேற்கொள்ளப்பட்ட பணிகளின் முன்னேற்றம் வருமாறு:

| | விபரம் | அளவு |
|---|---|---|
| i. | வீல்பரோ | 475 |
| ii. | நீர் தெளிக்கும் இயந்திரங்கள் | 943 |
| iii. | நீர் இறைக்கும் இயந்திரங்கள் | 210 |
| iv. | மண்வெட்டிகள் | 3,200 |
| v. | விதைநெல் புசல்கள் | 2,100 |
| vi. | மரக்கறி விதை பக்கற்றுகள் | 3,200 |
| vii. | மிளகாய் விதை | 8 |
| viii. | சோளம் விதை | 80 |
| ix. | சிறிய வெங்காய விதை | 52,800 |
| x. | நிலக்கடலை விதை | 16,000 |
| xi. | பயறு | 570 |
| xii. | தென்னங் கன்றுகள் | 6,400 |
| xiii. | மாங் கன்றுகள் | 6,400 |
| xiv. | பலாக் கன்றுகள் | 6,400 |

- இவற்றிற்கு மேலதிகமாக இரசாயன உரமும், விவசாய இரசாயனப் பொருட்களும் விவசாயிகளுக்கு மத்தியில் விநியோகிக்கப்பட்டன.

## 13. அரிசி ஏற்றுமதி நிகழ்ச்சித் திட்டம் - 2012

இந் நிகழ்ச்சித் திட்டத்திற்காக 2012 ஆம் வருடத்திற்கு செலவினத் தலைப்பு இல. 118-2-3-30-2502 இன் கீழ் விரிவாக்கல், பயிற்சிப் பிரிவிற்கு ரூ. 0.485 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டது. இந் நிதியை ஈடுபடுத்தி அரிசி ஏற்றுமதி வலயங்களில் கீழ்க் காணும் விதத்தில் உற்பத்திகள் மேற் கொள்ளப்பட்டு இலக்குகள் அடையப் பெற்றன.

| மாவட்டம் | பரப்பளவு | நெல்லினம் | விளைச்சல் (மெ.தொ.) | விவசாயிகள் |
|---|---|---|---|---|
| **பொலநறுவை** | 1,000 | **BG 352** | 2,000 | 1,800 |
| **ஹம்பாந்தோட்டை** | 434 | **AT 362** | 2,823 | 434 |
| **அம்பாறை** | 420 | **BG 357** | 2,000 | 500 |
| **மன்னார்** | 360 | **BG 360** | 1,700 | 570 |
| **மொத்தம்** | **2,214** | | **8,523** | **3,304** |

இக் கருத்திட்டத்தின் கீழ் உற்பத்தி செய்யப்பட்ட நெல் உற்பத்தியை, அரிசியாக்குவதற்குப் பொருத்தமான 22 அரிசி ஆலைகள் அந்தந்த மாவட்டங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்டன.

i. சர்வதேச சந்தையில் அரிசி விலை குறைவடைதல் - 1 கி.கி. அரிசியின் கொள்விலை ரூ. 50/- - ரூ. 55/-.

ii. அரிசி ஏற்றுமதியின் போது குறைந்த பட்சம் 1 கி.கி. அரிசி ரூ. 100/- வுக்குக் கூடிய விலைக்கு விற்பனை செய்யப்பட வேண்டுமென அரசு தீர்மானித்தல்.

மேற் காட்டப்பட்ட காரணிகள் காரணமாக 2012 ஆம் வருடத்தில் எதிர்பார்க்கப்பட்டவாறு அரிசியை ஏற்றுமதி செய்வதற்கு முடியாமல் போனது. கமத்தொழில் அமைச்சினால் இந் நெற் செய்கை வேலைத் திட்டத்திற்காக ரூ. 0.485 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் இந் நிதி 2012 ஆம் வருடத்தின் இறுதிக் காலாண்டிலேயே வழங்கப்பட்டது.

இதன் காரணமாக மாவட்ட பிரதிப் பணிப்பாளர்களினால், விவசாயிகளுக்குப் பயிற்சியளிப்பதற்காக செலவான தொகையில் ஒரு பகுதி, வேறு கருத்திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட தொகையிலிருந்து ஈடு செய்யப்பட்டதன் காரணமாக, விரிவாக்கல் பிரிவிற்கு வழங்கப்பட்ட நிதியில் ரூ. 273,220.50 மட்டும் செலவாகியுள்ளது.

## 04. விசேட அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள்/கருத்திட்டங்கள்

### i. முன்வைக்கப்பட்ட புதிய கருத்திட்டங்களும் யோசனைகளும்

1. பூகோல விவசாயத்துறையும் உணவுப் பாதுகாப்பும் தொடர்பான வேலைத் திட்டம்
2. உலர் வலய விவசாய உற்பத்தி விளைவுப் பெருக்க நிகழ்ச்சித் திட்டம்
3. செடி மரபுவழி வள நிலையத்தில் பாதுகாக்கப்பட்ட செடி வகைகளையும் உயிர் ஊன்மங்களையும் இனங் காண்பதற்காக உயிர் மரபணு (D.N.A.) கைவிரல் அடையாள தரவுத் தளமொன்றை மேம்படுத்தல்.
4. கமத்தொழில் அமைச்சின் முன்னுரிமை அபிவிருத்தி பணிச் சட்டத்திற்குப் பொருத்தமானவாறு கருத்திட்ட யோசனைகளை வகுப்பதற்காக 07 எண்ணக்கருப் பத்திரங்களை, விவசாயத் திணைக்கள உத்தியோகத்தர்களுடன் இணைந்து தயாரித்து, அவற்றிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட 03 யோசனைகளை கருத்திட்ட அறிக்கைகளாக மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
5. இலங்கையில் பாதுகாக்கப்பட்ட வீடுகளில் ஸ்ரோபரி (Fragariaananassa) செய்கையை ஊக்குவித்தல்.
6. அறுவடைக்குப் பிந்திய விளைச்சல்களைப் பேணிப் பாதுகாப்பது தொடர்பில் கருத்திட்ட அறிக்கையொன்றைத் தயாரித்து சார்க் அபிவிருத்தி நிதியத்திடம் சமர்ப்பித்து, இதற்காக 727,500 அமெரிக்க டொலர் நிதி பெறப்பட்டுள்ளது. இந் நிகழ்ச்சித் திட்டம் 2013 ஆம் வருடத்தில் அமுல் செய்யப்படவுள்ளது.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சினூடாக பல்வேறு நிறுவனங்களுக்கும்/நாடுகளுக்கும் கருத்திட்ட யோசனைகளை அனுப்புதல்

1. 03 கருத்திட்ட யோசனைகள் தென் ஆபிரிக்காவிடம் முன்வைக்கப்பட்டது.
2. 01 கருத்திட்ட யோசனை ஓமான் அரசிடம் முன்வைக்கப்பட்டது.
3. 01 கருத்திட்ட யோசனை கட்டார் அரசிடம் முன்வைக்கப்பட்டது.

### ii. சர்வதேச தொடர்புகளும் அவற்றுடன் தொடர்புடைய பணிகளும்

**புரிந்துணர்வு நினைவுக் குறிப்புகளுடன் தொடர்புடைய பணிகள்:**

- இந்தியாவுடனான புரிந்துணர்வு நினைவுக் குறிப்பொன்றை இலங்கையில் கைச்சாத்திடுதலும் அதற்கான ஏற்பாடுகளைச் செய்தலும்.
- பிரேசிலுடனான புரிந்துணர்வு நினைவுக் குறிப்பொன்று பிரேசில் நாட்டில் கைச்சாத்திடப்பட்டது. இதற்கான தூதுக்குழுவை பிரேசில் நாட்டிற்கு அனுப்புவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்.
- பிலிப்பைன்ஸ் அரசுடன் செய்து கொள்ளப்படவுள்ள உத்தேச புரிந்துணர்வு நினைவுக் குறிப்பு தொடர்பில் அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.
- பங்களாதேஷ் அரசுடன் ஏற்கனவே செய்து கொள்ளப்பட்டுள்ள புரிந்துணர்வு நினைவுக் குறிப்பு தொடர்பில் அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.

- இலங்கை - இந்திய புரிந்துணர்வு நினைவுக் குறிப்பிற்கு ஏற்ப ஒருங்கிணைந்த ஒத்துழைப்பு குழுக்களை நியமித்து அடுத்து வரும் வருடத்திற்கான செயற் திட்டத்தை வகுத்தல்.
- இலங்கையில் விவசாயத் திணைக்களத்தினால் அமுல் செய்யப்படுகின்ற புரிந்துணர்வு நினைவுக் குறிப்புகளுக்கான செயற் திட்டங்களை வகுக்கும் பொருட்டும் முன்னேற்றத்தை மீளாய்வு செய்யும் பொருட்டும் கூட்டமொன்று நடாத்தப்பட்டது.
- இலங்கை தேசிய விவசாய ஆராய்ச்சி, கொள்கைப் பேரவையினால் அமுல் செய்யப்படுகின்ற புரிந்துணர்வு நினைவுக் குறிப்புகள் சார்பில் செயற் திட்டங்களை வகுக்கும் பொருட்டு விசேட கூட்டமொன்றை ஏற்பாடு செய்தல்.

தற்சமயம் கைச்சாத்திடப்பட்டுள்ள புரிந்துணர்வு நினைவுக் குறிப்புகள் தொடர்பிலான தற்போதைய நிலவரம் தொடர்பில் அறிக்கையொன்று தயாரிக்கப்பட்டு செயலாளரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

**சர்வதேச வர்த்தகத்துடன் தொடர்புடைய பணிகள்:**

- **SAFTA** ஒப்பந்தத்துடன் தொடர்புடைய புறத்தூண்டுதல் பட்டியலின் அளவை 20% வீதத்தினால் குறைப்பதற்கான சிபாரிசுகள், விவசாயத் திணைக்களத்தின் உரிய உத்தியோகத்தர்களுடன் கலந்துரையாடி வர்த்தகத் திணைக்களத்திடம் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது.
- இலங்கைக்கும் பங்களாதேசுக்கும் இடையிலான பொருளாதார, விவசாய நடவடிக்கைகள் தொடர்பிலான இணைந்த ஆணைக்குழுவின் கூட்டத்தில் உரிய தகவல்களுடன் பங்குபற்றல்.
- சுங்கத் தீர்வை தொடர்பில் **HS** இலக்கமிடுதலில் திருத்தங்களை மேற்கொள்வதற்குத் தேவையான சிபாரிசுகள், வியாபார சுங்கத் தீர்வை, முதலீட்டுக் கொள்கைத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டது.
- ஏற்றுமதி, இறக்குமதி கட்டுப்பாட்டுத் திணைக்களத்தினால் அனுமதிப் பத்திரங்கள் கட்டுப்படுத்தப்பட வேண்டிய வகைகள் நிர்ணயிக்கப்பட்டு வருவதுடன், விவசாயத்துறையுடன் தொடர்புடைய ஏற்றுமதி, இறக்குமதி அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட வேண்டிய வகைகளை நிர்ணயிப்பதற்குத் தேவையான சிபாரிசுகள் முன்வைக்கப்பட்டன.

### iii. சர்வதேச மாநாடுகளும் கூட்டத் தொடர்களும்

- ஜேர்மனியின் பர்லின் நகரில் நடைபெற்ற **கமத்தொழில் அமைச்சர்களின் நான்காவது கூட்டத்தொடரிலும், வியட்நாமில் நடைபெற்ற கூட்டத்தொடரிலும்** பங்கு பற்றுவதற்கு மாண்புமிகு அமைச்சர் உள்ளிட்ட தூதுக் குழுவிற்குக் தேவையான வசதிகளைச் செய்து கொடுத்தல்.
- இஸ்ரவேல் கமத்தொழில் அமைச்சர் மாண்புமிகு ஒரிட்டி நொக்டிகே அவர்களின் உத்தியோகபூர்வ அழைப்பின் பேரில் இஸ்ரவேலில் நடைபெற்ற 18 ஆவது கமத்தொழில் கண்காட்சியைப் பார்வையிடுவதற்காக மாண்புமிகு அமைச்சருக்கு 2012 மே 14 தொடக்கம் 18 வரை கலந்து கொள்வதற்குத் தேவையான வசதிகளைச் செய்தல்.

- ஆசிய பசுபிக் வலயத்தில் காணப்படுகின்ற வர்த்தகப் பொருட்கள் தொடர்பிலான பிரச்சினைகளை ஆராயும் உணவு மற்றும் விவசாய அமைப்பின் 69 ஆவது கூட்டத் தொடருக்கு 2012.05.28 தொடக்கம் 2012.05.30 வரை இத்தாலியிலும், 2012.10.01 தொடக்கம் 2012.10.02 வரை தாய்லாந்தின் பாங்கொக் நகரிலும் நடைபெற்ற ஆசிய பசுபிக் வலயத்தில் நிலவும் அதிகரித்த உணவு விலைகளுக்கு பதில் அளிப்பதற்குத் தேவையான கொள்கைகள் தொடர்பில் ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ளும் உயர் மட்ட நிகழ்ச்சியில் மாண்புமிகு அமைச்சருக்குப் பங்கு பற்றுவதற்குத் தேவையான வசதிகளைச் செய்தல்.
- ஆசிய விளைவுப் பெருக்க மாநாட்டை ஏற்பாடு செய்தல்

**"சேதன உற்பத்திகளை அத்தாட்சிப்படுத்தல் மற்றும் கணக்காய்வு"** எனும் தலைப்பில் பயிற்சிச் செயலமர்வொன்று இலங்கை சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டது. ஆசிய, பசுபிக் வலயத்தைச் சேர்ந்த 10 நாடுகளின் 24 பிரதிநிதிகள் இதில் கலந்து கொண்டதுடன், இதற்குத் தேவையான வசதிகள் செய்யப்பட்டன (செலவு ரூ. 2.5 மில்லியன்).

### iv. கமக்காரர் வாரம்

இந் நிகழ்ச்சித் திட்டத்திற்காக ரூ. 10.0 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டதுடன், இதன் நிதி முன்னேற்றம் 100% வீதமாகும். விவசாயத் திணைக்களம் தனது நூற்றாண்டு விழா கொண்டாட்டத்திற்குச் சமாந்திரமாக தேசிய கமக்காரர் வாரம் கன்னோருவையில் நடாத்தப்பட்டது. கமக்காரர் வாரத்துடன் தொடர்புடைய செயற்பாடுகள் இதன் போது வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டது.



**விவசாயத் திணைக்களத்தில் நடைபெற்ற நூற்றாண்டு விழா கண்காட்சியும் கமக்காரர் வாரமும்**

### v. தகவல் தொழில்நுட்ப நிகழ்ச்சித் திட்டம்

2012 ஆம் வருடத்தில் கமத்தொழில் அமைச்சு தகவல் தொழில்நுட்பத் துறையில் அடைந்துள்ள முன்னேற்றங்கள் வருமாறு:

#### 1. அமைச்சின் உள்ளக கணினி வலையமைப்பு விஸ்தரிப்புப் பணிகளை முடித்தல்

2011 ஆம் வருடத்தின் ஆரம்பத்தில் மட்டுப்படுத்தப்பட்ட எண்ணிக்கையிலான கணினிகளுக்கு மட்டும் சேவை வழங்கிய அமைச்சின் கணினி வலையமைப்பு, 2012 ஆம் வருடத்தின் இறுதியாகும் போது அமைச்சின் அனைத்துக் கணினிகளும் வலயமயப்படுத்தப்பட்டு,

வலயமயப்படுத்தலுக்குட்பட்ட ஏனைய சேவைகளையும் நிறுவி முற்றுமுழுதாக முடிக்கப்பட்டதுடன், இதன் மூலம் அமைச்சின் 194 நிலையங்கள் தொடர்புபடுத்தப்பட்டுள்ளன.

அமைச்சின் அனைத்துப் பிரிவுகளுக்காகவும் அமுல் செய்யப்படுகின்ற டிஜிட்டல் கோப்புச் சேவையொன்றும், அனைத்து கணினிகளுக்காகவும் இணையத்தள/மின்னஞ்சல் வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டதன் பிரதான நோக்கம், அமைச்சின் எல்லா மட்டத்திலான உத்தியோகத்தர்களுக்கும் தகவல் தொழில்நுட்பத்தினூடாக மிக இலகுவாக தமது கடமைகளை நிறைவேற்றுவதற்கான சந்தர்ப்பத்தைப் பெற்றுக் கொடுப்பதாகும். மேலும் மின்னஞ்சலூடாக வினைத்திறன் மிக்கவாறு கடிதங்களை அனுப்பும் வகையில், இணையத்தள வேகம் 2012 ஆம் வருடத்தில் **8 Mbps** வரை அதிகரிக்கப்பட்டது. தகவல்களினதும் தரவுகளினதும் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் பொருட்டு, அனைத்து கணினிகளுக்கும் வைரஸ் மென்பொருள் ஈடுபடுத்தப்பட்டிருப்பதுடன், கணினி வலையமைப்பைப் பயன்படுத்துவோர்களுக்காக தனித்தனியான பயனிப் பெயர்களும் கடவுச் சொல்லும் வழங்கப்பட்டுள்ளன.

### 2. அமைச்சின் புதிய உத்தியோகபூர்வ இணையத் தளத்தை நிர்மாணித்தல்

2011 ஆம் வருடத்தின் இறுதி வரை இலங்கை தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் நிறுவனத்தின் அனுசரணையுடனும், வழிகாட்டல்களுடனும் இயங்கி வந்த அமைச்சு இணையத் தளம், 2012 ஆம் வருடத்தில் புதிய தொழில்நுட்பங்கள் சகிதம் மீள் நிர்மாணம் செய்யப்பட்டது.

எமது அமைச்சின் அனைத்துப் பிரிவுகளினாலும் நிறைவேற்றப்படுகின்ற பணிகள் மற்றும் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பான முழு விபரங்களுடன் நிர்மாணிக்கப்பட்டுள்ள இவ் இணையத் தளத்தினூடாக கமத்தொழில் நிகழ்ச்சித் திட்டங்களுடன் தொடர்புடைய மாதிரிப் படிவங்கள், சுற்றறிக்கைகள், விவசாயத்துறை சார்ந்த சட்டதிட்டங்கள், புள்ளிவிபரங்கள் முதலான விபரங்களை நோக்குவது மட்டுமல்லாது இறக்கிக் கொள்ளவும் முடியும். தகவல் தொழில்நுட்ப கொள்கைகளுக்கு ஏற்ப சிங்களம், தமிழ், ஆங்கிலம் என்றவாறு மும்மொழிகளிலும் தயாரிக்கப்பட்டுள்ள இவ் இணையத் தளத்தை, எந்தவொரு பிரசைக்கும் நோக்கி தகவல்களைப் பெற்றுக் கொள்ள முடியும்.

### 3. கணினி மற்றும் கணினி சார்ந்த துணை உறுப்புகளை பழுது பார்த்தல், பராமரிப்பு, நிருவாகம் முதலான பணிகளைத் தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்லல்

2012 ஆம் வருடத்தில் அமைச்சின் கணினிகளின் மென்பொருள், வன்பொருள் சார்ந்த பழுதுபார்ப்புப் பணிகளுள் 95% வீதமானவை தகவல் தொழில்நுட்ப அலகினால் மேற்கொள்ளப்பட்டது. இதனூடாக அமைச்சின் கணினி வள முகாமைத்துவத்திற்கு உச்ச பங்களிப்பைச் செய்வதற்கு முடிந்ததுடன், கணினி சார்ந்த தொழில்நுட்பக் கோளாறுகளை மிகக் குறுகிய காலப்பகுதியில் திருத்திக் கொடுப்பதற்கும் முடிந்தமை குறிப்பிடத்தக்கது.

### 4. கணினிகளையும் கணினி சார்ந்த துணை உறுப்புகளையும் கொள்வனவு செய்தலும், நிருவாக நடவடிக்கைகளைச் சீரமைத்தலும்

கணினிகளையும், கணினி சார்ந்த துணை உறுப்புகளையும் கொள்வனவு செய்யும் போது, அதற்குரிய தனிக்குறிப்பீடுகளைத் தயாரித்தலை தகவல் தொழில்நுட்ப அலகின் மேற்பார்வையின் கீழ் மேற்கொள்வதற்கும், உரிய பொருட்களின் தனிக்குறிப்பீடுகளுக்கு ஏற்ற தன்மையையும், சரியான தொழிற்பாட்டையும் பரீட்சித்துப் பார்த்து மட்டும் கொள்வனவு

செய்வதற்கு ஏற்றவாறு அதற்குரிய கிரமோபாயங்களை தயாரிப்பதும் மேற்கொள்ளப்பட்டதுடன், கணினி வழங்குனர்களினால் வழங்கப்படுகின்ற மென்பொருட்கள் சட்டரீதியான பிரதிகளா? என்பதை அத்தாட்சிப்படுத்துவதற்குத் தேவையான நடைமுறைகளும் வகுக்கப்பட்டன.

### 5. அலுவலக நடவடிக்கைகளுக்குத் தேவையான மென்பொருட்களை நிர்மாணித்தல்

2012 ஆம் வருட இறுதியாகும் போது கீழ்க் காட்டப்பட்ட அலுவலகப் பணிகளுக்குத் தேவையான மென்பொருட்கள் தயாரிக்கப்பட்டு வழங்கப்பட்டதுடன், இவற்றுக்காக தரவுகளை உள்ளடக்குவது தொடர்பில் பயிற்சியும் உரிய விடயங்களுக்குப் பொறுப்பான உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டது.

1. கிடைக்கப் பெறுகின்ற கடிதங்களுடன் தொடர்புடைய தகவல்கள் (தபால் பிரிவிற்காக)
2. வெளிநாட்டு புலமைப் பரிசில் பெறுவோரின் தகவல்கள் (நிருவாகப் பிரிவிற்காக)
3. சேதனப் பசளை உற்பத்தியில் ஈடுபடுவோர் தொடர்பான தகவல்கள் (சேதனப் பசளை உற்பத்தி அலகிற்காக)
4. பிரதான வழங்குனர்கள் தொடர்பான தகவல்கள் (கொள்முதல் அலகிற்காக)

### 6. உத்தியோகத்தர்களின் கணினி அறிவை விருத்தி செய்தல்

இந் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 2012 ஆம் வருடத்திற்காக அமைச்சின் அலுவலகப் பணியாளர்களும் சாரதிகளும் தேர்ந்தெடுக்கப்பட்டதுடன், இவர்களுக்காக ஆரம்ப கணினி பயிற்சிப் பாடநெறியொன்று அமுல் செய்யப்பட்டது.

## vi. திவிநெகும கருத்திட்டம்

**குறிக்கோள்:** "தேகாரோக்கியமும், பொருளாதார ரீதியில் பலம்பொருந்தியதுமான சுபீட்சமுள்ள குடும்பத்தைக் கட்டியெழுப்புதல்"

திவிநெகும கட்டம் IV இன் கீழ் 2012 ஆம் வருடத்தில் கமத்தொழில் அமைச்சினால் அமுல் செய்யப்படுகின்ற கருத்திட்டங்களுக்காக ரூ. 337.0 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டது. இதன் கீழ் மேற்கொள்ளப்பட்ட பணிகளும் அவற்றின் முன்னேற்றமும் வருமாறு:

| நிகழ்ச்சித் திட்டம் | பௌதீக முன்னேற்றம் | | நிதி முன்னேற்றம் (ரூ.) |
|---|---|---|---|
| | மாவட்டம் | விதை விநியோகிக்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை | |
| மரக்கறி விதை அடங்கிய 50 இலட்சம் பக்கற்றுகளை பகிர்ந்தளித்தல் | கொழும்பு | 315,226 | |
| | கம்பஹா | 561,238 | |
| | களுத்துறை | 297,432 | |
| | இரத்தினபுரி | 323,432 | |
| | கேகாளை | 215,595 | |

| | | | |
|---|---|---|---|
| | குருணாகல் | 444,691 | 333,790,280.00 |
| | புத்தளம் | 200,671 | |
| | அநுராதபுரம் | 222,608 | |
| | பொலநறுவை | 114,197 | |
| | காலி | 202,888 | |
| | மாத்தறை | 174,169 | |
| | ஹம்பாந்தோட்டை | 168,365 | |
| | மொனறாகலை | 125,426 | |
| | பதுளை | 190,506 | |
| | நுவரெளியா | 185,241 | |
| | கண்டி | 304,963 | |
| | மாத்தளை | 128,007 | |
| | திருகோணமலை | 77,372 | |
| | மட்டக்களப்பு | 162,754 | |
| | அம்பாறை | 180,963 | |
| | யாழ்ப்பாணம் | 187,666 | |
| | முல்லைத்தீவு | 30,779 | |
| | கிளிநொச்சி | 35,140 | |
| | மன்னார் | 14,441 | |
| | வவுனியா | 50,794 | |
| | **மொத்தம்** | **4,914,564** | |

- பொருளாதார அபிவிருத்தி அமைச்சிடமும் விவசாயத் திணைக்களத்திமும் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைவாக, திருகோணமலை, கம்பஹா, கண்டி மாவட்டங்களுக்கு விநியோகிக்கப்பட்ட மேலதிக விதை பக்கற்றுகள் - 99,003
- இதற்கு மேலதிகமாக அரச நிறுவனங்களுக்கும் விதை பக்கற்றுகள் விநியோகிக்கப்பட்டன.

## 05. கமக்காரர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்

1994 இல் தாபிக்கப்பட்ட கமக்காரர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் கீழ்க் காட்டப்பட்ட விடங்கள் சார்பில் இயங்கி வருகின்றது.

1. இலங்கையில் விவசாயத்துறையில் அபிவிருத்தியை மேற்கொள்ளலும், விவசாய மக்களின் சேமநலனை மேம்படுத்தலும்.
2. சிறியளவிலான விவசாயிகளுக்கு குறுகியகால விவசாயக் கடன் வசதிகளை வழங்குதல்.
3. சிறியளவிலான விவசாயிகளுக்கு விவசாய ஈடுபாட்டுப் பொருட்களை வழங்குதல்.
4. சிறியளவிலான விவசாயிகளின் நிதிச் சிரமங்களை நிவர்த்தி செய்து கொள்ளும் பொருட்டு, அவர்களுக்கு சந்தை கடன் வசதிகளை செய்து கொடுத்தல்.
5. சிறியளவிலான விவசாயிகளின் விவசாயத்துறை அபிவிருத்தி, சேமநலன் என்பன தொடர்பில் தெளிவூட்டல் நிகழ்ச்சிகள், கண்காட்சிகள், மாதிரிகள் மற்றும் பிற தொழிற்பாடுகள் உள்ளிட்ட நிகழ்ச்சித் திட்டங்களை அமுல் செய்தல்.
6. பயிர் மற்றும் பண்ணை விலங்கு உற்பத்தித் தொழிற்பாடு மற்றும் அதேபோன்று உற்பத்தி வகுத்தமைத்தலுக்காக சிறியளவிலான விவசாயிகளுக்குத் தேவையான அனுசரணைகளைப் பெற்றுக் கொடுத்தல்.
7. விவசாயத்துறையின் அபிவிருத்திக்குத் தேவையான வசதிகளைச் செய்யும் வகையில் விசேட விவசாயத்துறை நிகழ்ச்சித் திட்டங்களை அமுல் செய்தல்.

2012 ஆம் வருடத்தில் கமக்காரர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தினால், கமத்தொழில் அமைச்சும் அதனுடன் இணைந்த நிறுவனங்களும், கமநல அபிவிருத்தித் திணைக்களம், மாகாண விவசாயத் திணைக்களங்கள் என்றவாறு நிறுவனங்களுக்கு அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களுக்கு கடன் அடிப்படையில் நிதி ஒதுக்கீடுகள் வழங்கப்பட்டன. இந் நிறுவனங்களின் அடிப்படையில் நிதி முன்னேற்றம் வருமாறு:

| | விபரம் | செலவினத்தின் தன்மை | 2012 - செலவு (ரூ. மி.) | நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்ட நிறுவனம் |
|---|---|---|---|---|
| 1. | நூற்றாண்டு விழாவும் கமக்காரர் வாரமும் | அபிவிருத்தி | 20.0 | விவசாயத் திணைக்களம் |
| உபமொத்தம் | | | 20.0 | |
| 2. | மாவட்ட மட்டத்தில் ஏர்ப்பூட்டு விழாக்களை நடாத்தல் | அபிவிருத்தி | 0.75 | |
| 3. | உரக் களஞ்சியசாலைகளை அமைத்தல் | அபிவிருத்தி | 0.93 | |
| 4. | கிராமிய சிறிய நீர்ப்பாசனங்களைக் கட்டியெழுப்பும் வேலைத்திட்டம் (மாத்தறை, கண்டி, கமநல அபி. திணை) | அபிவிருத்தி | 8.0 | |
| 5. | உர மானியம் தொடர்பில் | அபிவிருத்தி | 0.02 | |

| | | | | |
|---|---|---|---|---|
| | தெளிவூட்டும் நிகழ்ச்சித் திட்டம் | | | கமநல அபிவிருத்தித் திணைக்களம் |
| 6. | புதிய அரிசி விழா | அபிவிருத்தி | 1.0 | |
| 7. | வட மாகாணத்தில் விவசாய நடவடிக்கைகளை அபிவிருத்தி செய்தல் | அபிவிருத்தி | 12.75 | |
| 8. | அம்பாறை மாவட்டத்தில் இரண்டு விவசாயப் பாதைகளை அமைத்தல் | அபிவிருத்தி | 3.8 | |
| 9. | கொம்பத்தல விகாரைக்கு அண்மையிலுள்ள பாதுகாப்பு மதிலையும் விவசாயப் பாதையையும் அமைத்தல் | அபிவிருத்தி | 1.0 | |
| 10. | பண்டாரவளை, நுவரெளியா மாவட்டங்களுக்கு பிளாஸ்ரிக் கூடைகளை விநியோகிக்கும் நிகழ்ச்சித் திட்டம் | அபிவிருத்தி | 4.2 | |
| 11. | கிளிநொச்சி மாவட்டத்தில் சிறியளவிலான நீர்ப்பாசனங்களை அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித் திட்டம் | அபிவிருத்தி | 1.0 | |
| 12. | மூதூர் கமநல அபிவிருத்தி நிலையத்தை நிறுவுதல் | அபிவிருத்தி | 0.94 | |
| 13. | விவசாயக் கிணறுகளை அமைக்கும் நிகழ்ச்சித் திட்டம் | அபிவிருத்தி | 20.0 | |
| 14. | வடக்கின் வசந்தம் (யாழ்ப்பாணம், வ வுனியா, கிளிநொச்சி) | அபிவிருத்தி | 1.4 | |
| 15. | கிழக்கின் உதயம் (திருகோணமலை, அம்பாறை, மட்டக்களப்பு) | அபிவிருத்தி | 3.9 | |
| **உபமொத்தம்** | | | **59.69** | |
| 16. | பெரிய வெங்காயச் செய்கைக்காக மழையிலிருந்து பாதுகாப்பதற்கான மூடும் உறைகளைப் பெற்றுக் கொடுத்தல் | அபிவிருத்தி | 3.9 | விவசாயத் திணைக்களம் (மத்திய மாகாணம்) |
| **உபமொத்தம்** | | | **3.9** | |
| 17. | பப்பாசிச் செய்கையை ஊக்குவிக்கும் நிகழ்ச்சித் திட்டம் | அபிவிருத்தி | 0.51 | விவசாயத் திணைக்களம் (வட மாகாணம்) |
| 18. | சிறிய வெங்காய களஞ்சியசாலைகளை அமைப்பதற்குத் திட்டமிடுதல் | அபிவிருத்தி | 1.5 | |
| 19. | தோட்டப் பயிர் உற்பத்தியில் பொருத்தமான தொழில்நுட்பங்களை ஈடுபடுத்தல் | அபிவிருத்தி | 0.995 | |
| **உபமொத்தம்** | | | **3.005** | |
| 20. | பயிற்சியளிப்பதற்கும் ஊக்குவிப்பதற்குமான நிகழ்சித் திட்டம் | அபிவிருத்தி | 0.045 | பயிற்சியளித்தலும் ஊக்குவித்தலும் |
| **உபமொத்தம்** | | | **0.045** | |

| | | | | |
|---|---|---|---|---|
| 21. | கடன் - குறுகியக் காலக் கடன். | கடன் | 362.0 | |
| 22. | நீண்டகாலக் கடன் | கடன் | 35.2 | கமநல அபிவிருத்தித் திணைக்களம் |
| 23. | தேசிய உணவு சேகரிக்கும் நிலையங்களை நிறுவுதல் | கடன் | 4.0 | தேசிய உணவு ஊக்குவிப்புச் சபை |
| **உபமொத்தம்** | | | **4.0** | |
| 24. | மோட்டார் சைக்கிள் கடன் | கடன் | 1.43 | கமநல அபிவிருத்தித் திணைக்களம் |
| 25. | மோட்டார் சைக்கிள் கடன் | கடன் | 1.35 | விவசாயத் திணைக்களம் |
| 26. | மோட்டார் சைக்கிள் கடன் | கடன் | 3.5 | மாகாண விவசாயத் திணைக்களம் |
| 27. | மோட்டார் சைக்கிள் கடன் | கடன் | 2.7 | தென் மாகாணம் |
| 28. | மோட்டார் சைக்கிள் கடன் | கடன் | 0.3 | ஏற்றுமதி விவசாயத் திணைக்களம் |
| **உபமொத்தம்** | | | **9.28** | |
| **கூட்டு மொத்தம்** | | | **99.920** | |

## 06. அமைச்சின் கீழ் நிறுவனங்களினால் அமுல் செய்யப்பட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள்/கருத்திட்டங்கள்

### (i) விவசாயத் திணைக்களம்

2012 ஆம் வருடத்திற்காக ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீடுகளும் அவற்றின் நிதி முன்னேற்றமும்

| | கருத்திட்டம் | மூலதனம் (ரூ. மில்லியன்) | | மீண்டெழும் (ரூ. மில்லியன்) | | விவசாயத் திணைக்கள விசேட கருத்திட்டம் (ரூ. மி.) | |
|---|---|---|---|---|---|---|---|
| | | நிதி ஒதுக்கீடு | செலவு | நிதி ஒதுக்கீடு | செலவு | நிதி ஒதுக்கீடு | செலவு |
| 1. | நிருவாகமும் தாபனச் சேவைகளும் | 25.7 | 22.0 | 222.0 | 221.0 | - | - |
| 2. | விவசாய ஆராய்ச்சியும் அபிவிருத்தியும் | 228.6 | 123.0 | 773.0 | 769.0 | 291.6 | 167.75 |
| 3. | விரிவாக்கலும் பயிற்சியும் | 63.7 | 55.0 | 586.0 | 581.0 | 61.7 | 61.0 |
| 4. | விதை அத்தாட்சிப்படுத்தலும் செடிப் பாதுகாப்பும் | 76.0 | 51.0 | 410.0 | 409.0 | 741.0 | 676.0 |
| | **மொத்தம்** | **394.1** | **251.0** | **1,991.0** | **1,980.0** | **1,094.3** | **904.75** |

### 1. விசேட ஆராய்ச்சி வாய்ப்புகள்

**<u>அரிசி</u>**

- **புதிய இனங்களை விநியோகித்தல்**

○ **Bw 367**

இது 3½ மாத வயதுத் தொகுதியைச் சேர்ந்த வெள்ளை நிற சம்பா வகையாகும். இது ஹெக்டயாருக்கு சுமார் 7.9 தொன் விளைச்சலைப் பெற்றுத் தரும். இந்த நெல் இனம் உலோக நஞ்சாதல், வெள்ளாமை தண்டு உடைந்து விழுதல், கழுத்து வாடி விழுதல் முதலான பீடைகளை எதிர்த்துச் செயற்படும்.

○ **Ld 368**

ஈர வலயத்தில் 105 நாட்களில் முற்றிப் பழுக்கக் கூடிய சிவப்புநிற, கட்டையான வட்ட வடிவ விதைகளைக் கொண்ட நெல்லினமாகும். இது ஹெக்டயாருக்கு சராசரி 7 தொன் விளைச்சலைப் பெற்றுத் தரும். இந்த நெல் இனம் இலை வாடுதல், தண்டு உடைந்து விழுதல் முதலான நோய்களை எதிர்த்து செயற்படக்கூடியதுடன், பக்றீறியா, பக்றீறியா இலை சுருளுதல், கேடு விளைவிக்கும் பூச்சி, கபிலநிற தத்துப் பூச்சி முதலான பொதுவான நோய்களையும் எதிர்த்துச் செயற்படும். அத்துடன் இந்த நெல் இனம் தண்டு உடைந்து விழுதல், தானியம் நிறம் மாறுதல் முதலான பாதிப்புகளிலிருந்தும் பாதுகாப்புப் பெறும்.

- **Bg 369**

இது 3½ மாத வயதுத் தொகுதியைச் சேர்ந்த வெண்மை நிற வகையாகும். இந்த நெல்லின விதை நீண்டதாகக் காணப்படுவதுடன், உலர் வலயத்தில் 104 நாட்களில் நெல் முற்றிப் பழுக்கும். அமிலத் தன்மை காணக்கூடிய மண் வகை காணப்படுகின்ற பிரதேசங்களுக்கு இந்த நெல் இனம் சிபாரிசு செய்யப்படுகின்றது. அமிலத் தன்மை மண்ணில் ஹெக்டயாருக்கு சுமார் 7.9 தொன் எனும் சாதனையான விளைச்சலைப் பெற்றுத் தரும்.

- அண்மையில் விளைச்சலில் சுமார் 90% வீதத்திற்கு சேதம் விளைவிக்கக் கூடிய நெல் பொதிகூடு பீடையொன்றாக மைட்டாக்கள் ***(Stenotarsonemusspinki/Smiley)*** இனங் காணப்பட்டது. மைட்டாக்களைக் கட்டுப்படுத்துவதற்காக பீடைநாசினியாகப் பயன்படுத்தப்படுகின்ற Profenophos 50EC சூழலுக்கும் இலக்கு வைக்கப்படாத நுண்ணங்கிகளுக்கும் ஏற்படுகின்ற பாரிய பாதிப்பைக் கருத்திற் கொண்டு, மைட்டாக்களைக் கட்டுப்படுத்துவதற்காக தற்காலிகமாக சிபாரிசு செய்யப்படுகின்றது.
- இலங்கையில் வயல்களில் வளர்ந்து காணப்படுகின்ற களைகளைக் கட்டுப்படுத்துவதற்கு இணைந்த தொழில்நுட்ப பரிகாரகத் தொடரொன்றை விருத்தி செய்வதற்கான ஆய்வுகளின் பெறுபேறுகள் மூலம், சம்பிரதாய முறைகளுடன் ஒப்பிடும் போது சுத்தமான விதை நெல்லை வரிசையாகத் தூவுவதன் மூலம் புற்கள் வளர்வதும் வளர்ச்சியடைவதும் குறிப்பிடத்தக்க அளவில் குறைவதாகவும் புற்கள் காரணமாக ஏற்படுகின்ற விளைச்சல் சேதமும் குறைக்கப்படுவதாகவும் அவதானிக்கப்பட்டது.
- இலை நிறக் குறிப்புகளை அடிப்படையாகக் கொண்டு, நைதரசன் உரத்தைப் பயன்படுத்துவதினூடாக ஏக்கருக்கு சுமார் 120 கி.கி. எனும் தற்போதைய யூரியா உரப் பாவனையை 30% வீதத்தினால் குறைத்து நைதரசன் பாவனையின் வினைத்திறன் அதிகரிக்கப்பட்டது. ஈர வலய மற்றும் உலர் வலய நிலைமைகளுக்கு ஏற்ற புதிய இலை நிறக் குறிப்புகள் மேம்படுத்தப்பட்டு விரிவாக்கல் உத்தியோகத்தர்களுக்கு அவர்களின் கருத்துக்களைப் பெற்றுக் கொள்ளும் வகையில் விநியோகிக்கப்பட்டன.
- இலங்கை நெனோ தொழில்நுட்ப நிறுவனத்தின் **(Sri Lanka Institute of Nanotechnology)** மூலம் உற்பத்தி செய்யப்பட்ட நெனோ விதத்திலான நைதரசன் மற்றும் பொட்டாசியம் உரத்தைப் பயன்படுத்துவதன் மூலம், குறைந்த பட்சம் 25% வீதம் அல்லது அதற்கு மேற்பட்ட யூரியா மற்றும் பொட்டாசியம் உரத்தை இடும் தற்போதைய மட்டத்திலான தேவையை குறைப்பதற்கு உதவுவதாக ஆரம்ப அவதானிப்புகளிலிருந்து தெரிய வந்தது.
- அரிசி உற்பத்தியின் போது மண்ணின் வளத்தையும் உரப் பாவனையை வினைத்திறனாக்குவதற்கும் சேதனப் பசளைப் பாவனையையும் சூழல் மாசடைவதைக் கட்டுப்படுத்துவதற்கும், சேதன, அசேதன ஆகிய இருவகை உரத்தினதும் கலவை மிகப் பொருத்தமான மாற்று வழியாக கண்டுபிடிக்கப்பட்டது.
- களைநெல் ஆக்கிரமித்துள்ள பிரதேசங்களில் களைநெல்லைக் கட்டுப்படுத்துவதற்காக தொழில்நுட்ப பரிகாரங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன.
- அறுவடை செய்யப்பட்ட விளைச்சலிலிருந்து பதர் நெல், களை விதை மற்றும் தூசுகளை நீக்கும் பொருட்டு, அதி இயக்க ஆற்றலுடைய (மணித்தியாலத்திற்கு 400 கி.கி.) விதை நெல் சுத்திகரிக்கும் இயந்திரமொன்று மேம்படுத்தப்பட்டது.

- வரிசையாக விதைகளை இடுதல் மற்றும் நாற்றுகள் பிடுங்கி நாட்டப்படுகின்ற வயல் காணிகளில் நாளொன்றிற்கு 1.5 ஏக்கர் களத்தில் களைகளை அகற்றக் கூடிய புதிய கீழ்நாட்டு களை அகற்றும் கருவியொன்று மேம்படுத்தப்பட்டது.

<u>பிற களப் பயிர்கள்</u>

- **விநியோகிக்கப்பட்ட புதிய இனங்கள்**
    - ஹெக்டயாருக்கு 4 தொன்னுக்கு மேற்பட்ட விளைச்சலைப் பெற்றுத் தரும் 90 நாள் வளர்ச்சிக் காலத்தைக் கொண்ட பெரிய கிரீம் நிறத்திலான விதை கொண்ட சோயா அவரை இனமாகும். (**MISB – 1**).

- பயிர்வகை மாற்றியமைத்தல் பரீட்சார்த்த நடவடிக்கைகளின் (Varietal Adaptability Trials) பின்னர் **PC – 01 ICPN** எனும் எதிர்பார்ப்பு வைக்கக் கூடிய பச்சை மிளகாய் இனவிருத்தி இனங்கள் 2 கண்டு பிடிக்கப்பட்டன. விவசாயத் திணைக்களத்தின் விதை அத்தாட்சிப்படுத்தல் சேவையின் சிறப்பியல்பு, ஒரேநிலையையும், நிலைத்திருக்கும் தன்மையையும் பரீட்சிக்கும் பொருட்டு இந்த எதிர்பார்ப்பு வைக்கக் கூடிய இனங்களின் விதைகள் சமர்ப்பிக்கப்பட்டன.
- 21 வெளிநாட்டு பெரிய வெங்காய இனங்கள் பரிசோதிக்கப்பட்டு எதிர்பார்ப்பு வைக்கக் கூடிய 2 இனங்கள் இனங் காணப்பட்டன.
- இந்தோனேசியாவிடமிருந்து கிடைக்கப் பெற்ற திறந்த 3 சோள இனங்கள் தேசிய ஒருங்கிணைப்பு பயிர்வகை மாற்றியமைத்தல் பரீட்சார்த்த நடவடிக்கைகளின் (Varietal Adaptability Trials) கீழ் உயர் விளைச்சல் பரீட்சார்த்தம் மதிப்பிடப்பட்டது. விவசாயக் களங்களில் பயிர்வகை மாற்றியமைத்தல் பரீட்சார்த்தங்களை (Varietal Adaptability Trials) மேற்கொள்வதற்காக **(Srikandiruning, “MIOPVI”)** சோள இனமொன்று தேர்ந்தெடுக்கப்பட்டது.
- எதிர்பார்ப்பு வைக்கக் கூடிய குரக்கன் சேகரிப்புகள் 4 தேசிய ஒருங்கிணைப்பு பயிர்வகை மாற்றியமைத்தல் பரீட்சார்த்தங்களின் (Varietal Adaptability Trials) கீழ் பரீட்சிக்கப்பட்டு விவசாயக் களங்களில் பயிர்வகை மாற்றியமைத்தல் பரீட்சார்த்தங்களை மேற்கொள்வதற்காக தெரிவு செய்யப்பட்டன.
- எதிர்பார்ப்பு வைக்கக் கூடிய 04 வகையான பயறு இனங்கள் **(MICP 111, MICP 113, MICP 114, MICP 539 – 17)** விவசாயக் களங்களில் பயிர்வகை மாற்றியமைத்தல் பரீட்சார்த்திக்கும் (Varietal Adaptability Trials) பொருட்டு பரீட்சிக்கப்பட்டதுடன், தெரிவு செய்யப்பட்ட பயிரினங்கள் சிறப்பியல்பு, ஒரேநிலையையும், நிலைத்திருக்கும் தன்மையையும் பரீட்சித்தலுக்கு உட்படும்.
- பயிர் ஆரம்பத்தில் இடம்பெறும் பீடை பாதிப்பைக் கட்டுப்படுத்தும் போது தியாமெதொசாம் 70% WS மற்றும் இமிடக்லொபிரீட் 70% WS உடன் பரிகாரம் மிக வினைத்திறன் மிக்கது என்பது கண்டுபிடிக்கப்பட்டது.
- மிளகாய்ப் பயிரின் இரசாயன நைதரசன் உரத் தேவையை குறைக்கும் பொருட்டு கிளிரிசீடியா இலையுடன் இரசாயன உரத்தைக் கலந்து இடுவது பரீட்சிக்கப்பட்டது. இப் பரிசோதனை மூலம் ஹெக்டயாருக்கு 6 தொன் கிளிரிசீடியாவை இடுவதன் மூலம் மிளாய்ச் செய்கைக்குத் தேவையான இரசாயன நைதரசன் உரத்தின் தேவையை 25% வீதத்தினால் குறைக்க முடியுமென பெறுபேறுகள் மூலம் தெரிய வந்தது. நாற்றுகளை

நடுவதற்கு ஒரு வாரத்திற்கு முன்னர் இந்த அளவில் அரைவாசியையும் எஞ்சிய அளவை செடிகள் நடப்பட்டு 4 வாரங்களுக்குப் பின்னரும் இட முடியும்.

- நான்கு சில்லு உழவு இயந்திரத்தின் மூலம் சக்தி பிறப்பிக்கப்படுகின்ற ஆகக் கூடியது 8 அடி வரை உயர்த்தக் கூடிய ஒரு நிமிடத்திற்கு 20,000 லீற்றர் கொள்ளளவுடைய 12 அங்குலம் நீரில் மூழ்குவிக்கக் கூடிய ஊடச்சுடைய **(Axial)** நீர் இறைக்கும் இயந்திரமொன்று மேம்படுத்தப்பட்டது.
- பாரிய நிலப்பரப்புகளுக்காக நான்கு சில்லு உழவு இயந்திரத்திற்கு பொருத்தப்பட்ட நாற்று நடும் இயந்திரம், இரண்டு சில்லு கைஉழவு இயந்திரத்தின் மூலம் இயங்குகின்ற சுழற்சி முறைப்படி பொருத்தப்பட்ட மேட்டுநில புல் அகற்றும் இயந்திரம், சதுப்பு நிலங்களில் நாற்றுகளை நடுவதற்கான இயந்திரம் என்பன மேம்படுத்தப்பட்டன.

**<u>தோட்டப் பயிர்</u>**

- **விநியோகிக்கப்பட்ட புதிய இனங்கள்**
    - உள்நாட்டில் விருத்தி செய்யப்பட்ட **F1** உயர் கலப்பின வெள்ளரிக்காய் **(HORDI Green F1)**.
    - நன்கு வளர்ந்த தண்டு, நீண்ட காம்பு கொண்டதும் தோல் கவர்ச்சிகரமான நிறத்திலும் உள்ள கூடிய விளைச்சலைப் பெற்றுத் தரக்கூடிய மரவள்ளி இனம் **(HORDI Mu 1)**.
    - ஈர மற்றும் இடைநிலை வலயங்களுக்காக சிபாரிசு செய்யப்பட்ட தண்டு வைரஸ் பீடையை எதிர்க்கக் கூடிய கூடிய விளைச்சலைப் பெற்றுத் தருகின்ற கலப்பின வெண்டிக்காய்**(HB 100)**.
    - 02 செபதில்லா வகைகள் **(Manikarazapota) HoS12** மற்றும் **HoS 13**.
    - 04 விரலிக்காய் இனங்கள் **(Elaeocarpusserratus) HoW 5, HoW 7, HoW 9, HoW 13.**
    - "ஹொரண ஜம்போ", "ஹொரண கோல்ட்" ஆகிய 2 தூரியன் இனங்கள் **(Duriozibethinus)** மற்றும் "ஹொரண ரிக்கிரி", "ஹொரண யெலோ" என்ற இன்னும் 2 தூரியன் இனங்கள் நிபந்தனைகளுடன் விடுவிக்கப்பட்டன.
- சம்பிரதாய முறைகளுடன் ஒப்பிடுகையில் குறைந்த சூழல் பாதிப்பு கொண்ட உருளைக் கிழங்கு பீடைகளை வினைத்திறன் மிக்கவாறு முகாமை செய்யும் வகையில் பரிகாரத் தொகுதியொன்று அடங்கிய பொதியொன்று மேம்படுத்தப்பட்டது.
- பாணிப் பூசணி பூச்சிகளையும் பழப் பூச்சிகளையும் கட்டுப்படுத்துவதற்காக பிரதேசத்தில் ஒருங்கிணைந்த பீடை முகாமைத்துவம் **(AW - IPM)** வெற்றிகரமான முறையொன்றென இனங் காணப்பட்டதுடன், நாடு முழுவதும் செய்ம்முறைகளை மேற்கொள்வதினூடாக விவசாயிகளுக்கு மத்தியில் தொழில்நுட்பம் பகிர்ந்தளிக்கப்படுகின்றது.
- மண்வள பங்கசு ஒட்டுண்ணிகளை கட்டுப்படுத்துவதற்கான முறையாக **TrichodermaSpp** அவ்விடத்திலிருந்து வேறாக்கி தயாரிப்பது வினைத்திறன் மிக்க கட்டுப்பாட்டு முறையொன்றாகவே அதேபோன்று செடி வளர்ப்பு தூண்டுதலாகவும் இனங் காணப்பட்டுள்ளது.

- **கண்டறியப்பட்ட புதிய பீடை தாக்கங்கள்**
    - வட்டக்காவில் நடுப்புள்ளி வைரஸ் நோய்.
    - பலா, பெங்கிரி, அனோதா என்பவற்றில் துரித பின் அழிவுக்கான தொற்று ஜீவியாக **Lasiodiplodiatheobromae 250g/1EW 2ml/1 50% WP 2g/1** கண்டறியப்பட்டது. Carbendazim 500g/l SC மற்றும் Tebaconazole 250g/l EW 2ml/l கலவை மற்றும் Carbendazim 50% WP 2g/l கலவை ஜீவியைக் கட்டுப்படுத்துவதற்கு மிகப் பொருத்தமான பீடைநாசினியாகக் கண்டறியப்பட்டுள்ளது.

**<u>பிற</u>**

- இலங்கையில் வரட்சி அனர்த்த ஆக்கக் கூறுகளை விருத்தி செய்தல்.
- கீழ்நாட்டு ஈர வலயத்தில் அரிசி உற்பத்தி விளைவுப் பெருக்கத்தை அதிகரிப்பதற்காக நிலத்தைப் பிரதானமாகக் கொண்ட சிபாரிசுகளை மேம்படுத்தல்.
- அதி ஆற்றலுடைய செய்மதிப் படங்களை அடிப்படையாகக் கொண்டு வயல் காணி அளவு தொடர்பிலும் விளைச்சல் தொடர்பிலும் எதிர்வுகூறல்.

### 2. அடிப்படை விதை உற்பத்தியும் தர ஊக்குவிப்பும் தொடர்பான நிகழ்ச்சித் திட்டம்

2012 ஆம் வருடத்தில் விநியோகிக்கப்பட்ட விதை அளவு கீழ்க் காட்டப்பட்டுள்ளது.

| | போகம் | 2011/2012 பெரும் போகம் | 2012 சிறு போகம் |
|---|---|---|---|
| 2. | விவசாயத் திணைக்களத்தினால் விநியோகிக்கப்பட்ட விதை அளவு (மெ.தொ.) | | |
| | அத்திவார விதை | 52.13 | 42.82 |
| | பதிவு செய்யப்பட்ட விதை | 1,156.43 | 832.34 |
| | அத்தாட்சிப்படுத்தப்பட்ட விதை | 904.64 | 323.94 |
| | வாணிப விதை | 112.20 | - |
| | அவசர தேவைகளுக்கான விதை | 4,378.41 | - |
| 2.1 | தேசிய விதை நெல் தேவையில் விவசாயத் திணைக்களத்தினால் நிறைவு செய்யப்படுகின்ற வீதம்(%) | | |
| | அத்திவார விதை | 115.9% | 135.6% |
| | பதிவு செய்யப்பட்ட விதை | 64.2% | 65.8% |
| | அத்தாட்சிப்படுத்தப்பட்ட விதை | - | 0.6% |
| | வாணிப விதை | 7.5% | - |
| | அவசர தேவைகளுக்கான விதை | - | - |
| 3. | விவசாயத் திணைக்களத்தினால் விநியோகிக்கப்பட்ட உப உணவுப் பயிர் விதை (கி.கி.) | | |
| | பச்சை மிளகாய் | 75 | 3,614 |
| | சிறிய வெங்காயம் | - | - |
| | பெரிய வெங்காயம் | 2 | - |
| | உருளைக் கிழங்கு | 294,550 | 93,900 |

| | | | |
|---|---|---|---|
| | கவுப்பி | 6,696 | 14,875 |
| | பயறு | 87,935 | 80,053 |
| | சோளம் | 25,363 | 10,953 |
| | உளுந்து | 23,306 | 20,185 |

**2012 ஆம் வருடத்தில் விதை அத்தாட்சிப்படுத்தல் நிகழ்ச்சித் திட்டத்தின் முன்னேற்றம் வருமாறு:**

| நிகழ்ச்சித் திட்டம் | முன்னேற்றம் | |
|---|---|---|
| | வகைகளின் எண்ணிக்கை | அளவு (மெ.தொ.) |
| **இனவிருத்தி விதை அத்தாட்சிப்படுத்தல்** | | |
| நெல் | 30 | 6.24 |
| மரக்கறி | 22 | 0.29 |
| ஏனைய களப் பயிர்கள் | 22 | 2.04 |
| பழங்கள் | 1 | 0.0007 |
| **மொத்தம்** | **75** | **8.58** |
| **அத்தாட்சிப்படுத்தல் நிகழ்ச்சித் திட்டம்** | | |
| நெல் | 6,446.29 | 14,386.9 |
| ஏனைய களப் பயிர்கள் | 969.82 | 356.61 |
| மரக்கறி | 182.78 | 49.88 |
| உருளைக் கிழங்கு | 72.57 | 749.99 |
| **மொத்தம்** | **7,671.46** | **15,542.60** |

**3. 2012 ஆம் வருடத்தில் திணைக்களத்தினால் முன்னெடுக்கப்பட்ட விவசாயக் கருத்திட்டங்களின் முன்னேற்றம்:**

<u>**விவசாய விரிவாக்கல்**</u>

**மாகாணங்களுக்கிடையிலான பிரதேசம்**

- மாகாணங்களுக்கிடையிலான பிரதேசங்களில் செய்கை பண்ணப்பட்ட நெல் மற்றும் ஏனைய களப் பயிர்ச் செய்கை நிலத்தின் அளவு கீழ்க் காணும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது. (அம்பாறை, அநுராதபுரம், ஹம்பாந்தோட்டை, மொனறாகலை, பொலநறுவை, கண்டி ஆகிய மாவட்டங்களின் பகுதிகள்)

| பயிர் | 2011/2012 பெரும் போகம் (ஹெக்டயார்) | 2012 சிறு போகம் (ஹெக்டயார்) |
|---|---|---|
| நெல் | 184,206 | 124,645 |
| களப் பயிர்ச் செய்கையின் கீழ் செய்கை பண்ணப்பட்ட நிலத்தின் அளவு | 7,299 | 13,136 |

நீர்த் தேக்கங்களில் நிலவிய நீர்ப் பற்றாக்குறை காரணமாக இலக்கு வைக்கப்பட்ட நிலப்பரப்பில் செய்கை பண்ண முடியாமல் போனதெனினும், உற்பத்தியில் குறிப்பிடத்தக்க வீழ்ச்சி காணப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

**விவசாயத் தொழில் முயற்சி அபிவிருத்தியும் தகவல் சேவைகளும்**

- குளியாப்பிட்டி, புத்தளை, அயகமை, ஹல்மில்லேவ, பலாங்கொடை, வவுனியா ஆகிய பிரதேசங்களில் புதிதாக 6 விவசாயச் சேவை இல்லங்கள் திறந்து வைக்கப்பட்டன.
- விவசாயப் பண்ணை தொழில் முயற்சிப் பாடசாலையில் பிரதான பயிற்றுவிப்பாளர்களாக 10 மாவட்டகளைச் சேர்ந்த 108 கருத்திட்ட உத்தியோகத்தர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டன. இக் கருத்திட்டத்தின் கீழ் அறுவடைக்குப் பிந்திய தொழில்நுட்பம் தொடர்பில், குறிப்பாக அரிசியை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திகள் தொடர்பில் 885 விவசாயப் பெண்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது.

**பெண்கள் விவசாயக் கருத்திட்டத் தொழிற்பாடுகள்**

- யாழ்ப்பாணம், வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார் ஆகிய மாவட்டங்களில் அறுவடைக்குப் பிந்திய தொழில்நுட்பம், வருமானம் ஈட்டல், குடும்பப் போசாக்கு என்பன தொடர்பில் மகளிர் விவசாயக் குழுக்களுக்கு உதவி செய்யும் நோக்குடன், உலக உணவுத் திட்டத்தின் கீழ் அறுவடைக்குப் பிந்திய உதவிக் கருத்திட்டமொன்று அமுல் செய்யப்பட்டது.

**விவசாயப் பயிற்சி**

விவசாயிகள், பாடசாலை மாணவர்கள், விவசாயத் திணைக்களம், 3 சேவைக் காலப் பயிற்சி நிலையங்கள், 4 மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையங்கள், விவசாயப் பண்ணை இயந்திரோபகரண பயிற்சி நிலையம் ஆகிய நிறுவனங்களில் உத்தியோகத்தர்களுக்கான 623 பயிற்சி நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டன.

**விவசாயக் கல்வி**

- விவசாயக் கல்லூரிகளைச் சேர்ந்த 202 மாணவர்கள் விவசாய டிப்ளோமா பட்டத்தைப் பெற்றுக் கொண்டதுடன், 485 மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது.
- 2012 ஆம் வருடத்தில் 112 விவசாய ஆராய்ச்சி, உற்பத்தி உதவியாளர்கள் தமது பயிற்சியை பூர்த்தி செய்துள்ளனர்.
- இலங்கை மகாவலி அதிகார சபையைச் சேர்ந்த 39 வெளிக்கள உதவியாளர்களுக்காக வருடாந்த செயன்முறை விவசாயச் சான்றிதழ் பயிற்சிப் பாடநெறி நடாத்தப்பட்டது.

**விவசாயத் தகவல்களும் தொடர்பாடலும்**

- கன்னோருவையில் தேசிய விவசாயத் தகவல் நிலையமொன்றை அமைப்பதற்கான அடிக்கல் நாட்டப்பட்டது.

- கற்புல செவிப்புல நிலையத்தின் மூலம் 98 தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் தயாரிக்கப்பட்டு ஒளிபரப்புச் செய்யப்பட்டன.
- நூற்றாண்டு விழா வெளியீடுகளாக 5 புதிய புத்தகங்கள் வெளியிடப்பட்டு, இவற்றின் 30,000 பிரதிகள் விவசாய வெளியீட்டு அலகில் அச்சிடப்பட்டது. இதற்கு மேலதிகமாக, பிற விவசாயத் தொழில்நுட்பம் சார்ந்த புத்தகங்களும் பிரசுரங்களும் (23406 பிரதிகள்), துண்டுப் பிரசுரங்கள் (191,300), சான்றிதழ்கள் (33,962), சஞ்சிகைகள் (33,650), கடிதங்கள் (43,450) என்பன அச்சிடப்பட்டன.
- விவசாயப் பண்ணை தொழில்முயற்சிப் **(F.B.S.)** பாடசாலைகள் மூலம் விவசாயம் தொடர்பிலான 1,440 வானொலி நிகழ்ச்சிகள் தயாரிக்கப்பட்டு, இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், இரஜரட்ட வானொலிச் சேவை, வயம்ப ஹண்ட, ரண்கிரி எப்எம், கந்துரட்ட வானொலிச் சேவை முதலான வானொலி நிலையங்களூடாக ஒலிபரப்புச் செய்யப்பட்டன.
- ***"கொவி சஹன சரண"*** நேரடித் தொலைபேசி ஆலோசனைச் சேவையின் கீழ் (தொலைபேசி இல.: 1920) விவசாயிகளின் சுமார் 50,000 பிரச்சினைகளுக்கு தொலைபேசி மூலம் தீர்வு வழங்கப்பட்டதுடன், **Skype** தொழில்நுட்பத்தினூடாக சுமார் 60 பிரச்சினைகளுக்கும், மின்னஞ்சல் மூலம் சுமார் 400 பிரச்சினைகளுக்கும் தீர்வு வழங்கப்பட்டன.
- கன்னோருவை நூற்றாண்டு விழா மற்றும் ஒயாமடுவ தேசத்திற்கு மகுடம் கண்காட்சிக்காக 2 கண்காட்சி இடங்கள் திட்டமிடப்பட்டன. இப் போட்டியில் 7 வது தடவையாகவும் விவசாயத் திணைக்களம் முதலிடத்தைப் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.
- 3 இணையத் தளங்களை பேணிச் செல்லல், இற்றைப்படுத்தல், மதிப்பீடு செய்தல்

    1. **www.agridept.gov.lk** 2008 ஆம் வருடத்தில் **"e-world"** பரிசளிப்பு விழாவில் சிறந்த இணையத்தளத்திற்குரிய விருது கிடைக்கப் பெற்றது.
    2. **www.govia.lk** 2009 ஆம் வருடத்தில் **"e-Swabimani"** விருது, 2009 ஆம் வருடத்தில் இந்தியாவின் மன்னன் விருது மற்றும் உலக மாநாட்டு விருது விழாவில் உலகில் சிறந்த இலத்திரனியல் உள்ளடக்கத்திற்கான **(e-content)** விருது, படைப்பாற்றலுக்காக வழங்கப்படுகின்ற மதிப்பிற்கும் மரியாதைக்கும் பாத்திரமான விருதான "கைரோ 2011" விருது.
    3. **www.krushilanka.lk** இலங்கையில் ஒட்டுமொத்த விவசாயப் பயிர்த்துறை தொடர்பில் விவசாயத்துறைத் தகவல்கள் இவ் இணையத் தளத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

## 4. விவசாயத் திணைக்களத்தின் கீழ் காணப்படுகின்ற பயிர்களின் விளைவுப் பெருக்கத்திற்கான யோசனைகள்

- பயிரின வகைகளை மேம்படுத்தல்.
- உரப் பாவனையின் வினைத்திறனைக் கூட்டுதல்.
- செலவைக் குறைக்கும் பொருட்டு விவசாயத் தொழிற்பாடுகளின் போது பொறிமுறையைக் கூட்டுதல்.
- தரத்தில் சிறந்த விதை மற்றும் நடுகைப் பொருட்களை வழங்கல்.
- இணைந்த விவசாய முகாமைத்துவ முறைகளை பயன்படுத்துதல்.

**<u>நெல்</u>**

- இலக்குகளை வழங்கி வெளிக்கள உத்தியோகத்தர்களுக்குப் பயிற்சியளித்தலும், அவர்களின் செயலாற்றுகையை அதிகரிக்கும் பொருட்டு பலமான மதிப்பீட்டு முறையொன்றைக் கடைப்பிடித்தலும்.
- தெரிவு செய்யப்பட்ட விவசாயிகளுக்குப் பயிற்சியளித்தல்.
- சேதனப் பொருட்களை ஈடுபடுத்துவதை ஊக்குவித்தல்.

**<u>ஏனைய களப் பயிர்கள்</u>**

- தரத்தில் சிறந்த விதைகளைப் பயன்படுத்துதல்.
- நீர்ப்பாசன மற்றும் மழைநீர் நீர்ப்பாசன நிலைமைகளின் கீழ் உயிர் சார்ந்த மற்றும் உயிரைச் சாராத (biotic and abiotic) காரணிகள் மீது மாற்றிக் கொள்ளத் தக்க தன்மையைக் காட்டும் கூடிய விளைச்சலைப் பெற்றுத் தருகின்ற உயர் தரத்திலான வேறு களப் பயிர் வகைகளை மேம்படுத்தல்.
- முடியுமான எல்லாச் சந்தர்ப்பங்களிலும் நீர்ப்பாசன முறைமையொன்றின் கீழ் உரிய காலப்பகுதியில் பயிர்ச் செய்கையை மேற்கொள்ளல். (உயர் கலப்பின மற்றும் மகரந்தச் சேர்க்கை).
- விவசாயிகளின் நிலைமைகளுக்குப் பொருத்தமான விதத்தில் மண்வளப் பாதுகாப்பு முறைகளையும் நீர்வளப் பாதுகாப்பு முறைகளையும் விவசாயிகளிடத்தில் வியாப்பித்தல்.
- நிலத்தின் உற்பத்தி விளைவுப் பெருக்கத்தைக் கூட்டும் அதேவேளை, உற்பத்திச் செலவை குறைக்கும் வினைத்திறன் மிக்க விவசாயச் செய்கை நடைமுறையொன்றை விருத்தி செய்தலும் விஸ்தரித்தலும்.
- உட்கட்டமைப்பு வசதிகளை விருத்தி செய்வதினூடாக மிகவும் வினைத்திறன் மிக்கவாறு விவசாயிகளின் தேவைகளை நிறைவு செய்வதற்கு ஏற்றவாறு தாபனத் திறனை மேம்படுத்தல்.
- பீடைகள் காரணமாக ஏற்படுகின்ற பயிர்ச் சேதங்களைக் கட்டுப்படுத்தும் பொருட்டு, சிபாரிசு செய்யப்பட்ட பீடைநாசினிகளை (களைநாசினி, கிருமிநாசினி), உரிய அளவில், உரிய நேரத்தில் பயன்படுத்துவதன் மூலம் ஒருங்கிணைந்த பீடை முகாமைத்துவ நடைமுறையை விருத்தி செய்தல்.
- அறுவடைக்குப் பிந்திய சேதங்களைக் கட்டுப்படுத்தி, விளைச்சலுக்கு கூடிய பெறுமதியை வழங்குவதற்கு ஊக்குவிப்பதன் மூலம் தேவையான ஒத்துழைப்பை வழங்கல்.
- விவசாயிகள் தமது தொழில்நுட்பங்களை விஸ்தரிப்பதற்காக முறையான நடைமுறைகளைக் கையாளுதல்.

**பழங்கள்**

- தரத்தில் சிறந்த விதை மற்றும் நடுகைப் பொருட்களை பெற்றுக் கொள்வதற்கான ஒழுங்குகளைக் கூட்டுதல்.
- கூடிய விளைச்சலைப் பெற்றுத் தருகின்ற புதிய பழப் பயிர் வகைகளை அறிமுகம் செய்தல்.
- அறுவடைக்கு முந்திய/பிந்திய மற்றும் கூடிய பெறுமதியைப் பெற்றுக் கொடுக்கக் கூடியவாறு புதிய தொழில்நுட்பங்களை ஊக்குவித்தலும் விஸ்தரித்தலும்.

**மரக்கறி**

- தரத்தில் சிறந்த விதை மற்றும் நடுகைப் பொருட்களை பெற்றுக் கொள்வதற்கான ஒழுங்குகளைக் கூட்டுதல்.
- அறுவடைக்கு முந்திய/பிந்திய மற்றும் கூடிய பெறுமதியைப் பெற்றுக் கொடுக்கக் கூடியவாறு புதிய தொழில்நுட்பங்களை ஊக்குவித்தலும் விஸ்தரித்தலும்.
- புதிய பயிர்ச் செய்கை முகாமைத்துவ முறைகளை அறிமுகம் செய்தலும் செய்கை பண்ணப்படுகின்ற நிலத்தின் அளவைக் கூட்டுதலும்.
- கூடிய விளைச்சலைப் பெற்றுத் தருகின்ற புதிய மரக்கறிப் பயிர் வகைகளை அறிமுகம் செய்தல்.

5. **தோட்டப் பயிர் துறையின் அபிவிருத்திக்காக மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் தொடர்பான விபரமும் அதன் முன்னேற்றமும்**

- வேர் மற்றும் தண்டுப் பயிர்களின் அனைத்து சிபாரிசு செய்யப்பட்ட பயிரினங்களினதும் 50,000 இற்கும் மேற்பட்ட அடிப்படை நடுகைப் பொருட்களை பல்வேறு சேவை பெறுனர்களுக்கும் விநியோகித்தல்.
- சேதனப் பசளையை தொடர்ச்சியாக இடுவது தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின் 25 வது போகத்தின் பெறுபேறுகளின் அடிப்படையில், சேதனப் பசளை, இரசாயன உரம் ஆகிய இருவகை உரத்தையும் ஒன்றாக இடுவது மரக்கறி உற்பத்திக்கு மிக உகந்ததாகும்.
- களத்திலும் களஞ்சியசாலைகளிலும் உருளைக் கிழங்கின் தண்டங் கிழங்கு அந்துப் பூச்சிகளைக் கண்காணிப்பதற்காக ஈடுபடுத்த முடியும் என இனங் காணப்பட்டது. Identified an effective pheromone (from InsectScience.co.sz) for monitoring Potato Tuber Moth in the field and store houses that can be used for mass trapping of male moths.
- பல்வேறு வேற்று மரக்கறி வகைகளுக்கான மாற்றி அமைத்துக் கொள்ளக் கூடிய திறன் பரிசோதனைகள் பீட்றூட் (Detroit Dark red 2 'cristal', Red star, AX RB 462F1) கோவா வகைகள் (CBS 153, Supper Green, White Cabbage – Balashi, White Cabbage – Bandung) பூகோவா வகைகள் (Rocky, Balvany, White Flash, Milky Way, Candid Charm) மலைநாட்டு ஈர வலயங்களில் பீடைகளுக்கும் நோய்களுக்கும் எதிர்த்து நின்று செயற்படுதல் மற்றும் விளைச்சல் தொடர்பில் இப் பயிர் வகைகள் பொருத்தமானவாறு செயற்படும் என்பது பரீட்சிக்கப்பட்டது.
- மென்மையும், சுவையும், சாறும் கொண்ட உயர் பெறுமதியுடைய அனோதா (**Annonamuricata**) வகையிலிருந்து நடுகைப் பொருள் உட்பத்தி செய்யப்பட்டு வருகின்றது.

இந்த வகையை நட்டி 5 வருடங்களின் பின்னர் மரமொன்றிலிருந்து சராசரி 29 பழங்களை விளைச்சலாகப் பெற்றுக் கொள்ளக் கூடிய வாய்ப்புக் காணப்படுகின்றது.

- எதிர்பார்ப்பு வைக்கக் கூடியதும் சிறந்த பெறுபேறுகளைத் தரக் கூடியதுமான 2 உயர் கலப்பின பப்பாசியினங்கள் இலங்கையின் பல்வேறு விவசாயச் சூழல் வலயங்களிலிருந்தும் மதிப்பீட்டிற்கு உட்படுத்தும் பொருட்டு தற்சமயம் இதன் விதைகள் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன.
- உள்ளூர் மா இனங்களின் தாய்ச் செடியிலிருந்து வேறாக்கப்பட்ட வளர்ச்சியடையாத கலங்களை வேறாக்கி பாதுகாப்பாக விருத்தி செய்து கொள்ளும் பொருட்டு, பொருத்தமான சிறந்த நிலைமைகளைப் பெற்றுத் தருகின்ற நடைமுறையொன்றை மேம்படுத்தும் வேலைத்திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டது. நோய் நுண்மத் தீர்வாக்க நடைமுறை உச்சப்படுத்தப்பட்டதுடன், இந் நிகழ்ச்சித் திட்டம் தொடர்ந்தும் அமுல் செய்யப்பட்டு வருகின்றது.

## 6. விவசாயத்துறையை அபிவிருத்தி செய்யும் பொருட்டு வருடத்தில் எடுக்கப்பட்ட கொள்கைத் தீர்மானங்கள்

உணவுப் பயிர்த் துறையின் அபிவிருத்தியை இலகுபடுத்தும் பொருட்டு வருடத்தில் கட்டமைக்கப்பட்ட திருத்தங்கள் செய்யப்பட்டு மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டன. தற்போதுள்ள மாவட்டச் செயலக நிருவாகக் கட்டமைப்பின் கீழ் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் விவசாய மாவட்டப் பணிப்பாளர்களும், ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவிற்கும் உதவிப் பணிப்பாளர்களும் நியமிக்கப்பட்டனர்.

கமத்தொழில் அமைச்சினாலும், விவசாயத் திணைக்களத்தினாலும் வலயத்தின் அபிவிருத்திக்காக வழங்கப்படுகின்ற நிதியத்திலுள்ள பணத்தின் உற்பத்தி விளைவுப் பெருக்கத்தை அதிகரிக்கும் நோக்குடன் இக் கட்டமைக்கப்பட்ட மாற்றங்கள் செய்யப்பட்டன.

### (ii) இலங்கை ஹதபிம அதிகார சபை

இலங்கை ஹதபிம அதிகார சபையினால் 2012 ஆம் வருடத்தில் ஆரம்பிக்கப்பட்ட விவசாய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களின் கீழ் திறைசேரி நிதி ஒதுக்கீடுகளின் கீழ் அமுல் செய்யப்பட்ட பிரதான அபிவிருத்தித் திட்டங்கள் கண்டி, மாத்தளை, குருணாகல், இரத்தினபுரி, கேகாளை ஆகிய மாவட்டங்களிலும், கமத்தொழில் அமைச்சின் நிதி ஒதுக்கீடுகளின் கீழ் அமுல் செய்யப்பட்ட பிரதான அபிவிருத்தித் திட்டங்கள் வவுனியா, யாழ்ப்பாணம், மொனறாகலை, நுவரெளியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், அநுராதபுரம், பொலநறுவை ஆகிய மாவட்டங்களிலும் அமுல் செய்யப்பட்டன,

இதற்கமைய, திறைசேரி நிதி ஒதுக்கீடுகளின் கீழ் அமுல் செய்யப்பட்ட பிரதான அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம், 29 பிரதேச செயலாளர் பிரிவுகள் உட்படுமாறு 12,000 விவசாயக் குடும்பங்களை இணைத்துக் கொண்டு, 3,750 ஹெக்டயார் நிலப்பரப்பை அபிவிருத்தி செய்வதை இலக்காகக் கொண்டு அமுல் செய்யப்பட்டது.

இவ் வருடத்தில் அமுல் செய்யப்பட்ட அனைத்து விவசாய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களூடாகவும், மஹிந்த சிந்தனை முன்னோக்கிய பார்வைக்கு ஏற்ப உள்ளூர் உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்திய வண்ணம், இயற்கை வளங்களை நிலைபேறான வகையில் முகாமை செய்வதற்கு முன்னுரிமை வழங்கி செயற்பட நடவடிக்கை எடுக்கப்பட்டது.

**அமுல் செய்யப்பட்ட பிரதான அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள்**

- **மண்வளப் பாதுகாப்பும் ஆற்றுப்பள்ளத்தாக்கு முகாமைத்துவமும்**

2012 ஆம் வருடத்திற்கான நிதி ஒதுக்கீடுகளின் கீழ் மண்ணரிப்பிற்கும் தேய்விற்கும் உட்படுகின்ற 22 பிரதேச செயலாளர் பிரிவுகள் தேர்ந்தெடுக்கப்பட்டு இந் நிகழ்ச்சித் திட்டம் அமுல் செய்யப்பட்டது. இதன் போது அதிகார சபையினால் வழங்கப்படுகின்ற அளவுகோல்களுக்கு ஏற்ப கிராம உத்தியோகத்தர் பிரிவுகளைத் தெரிவு செய்து, ஈடுபடுத்தக் கூடிய நிதி ஒதுக்கீட்டின் அளவிற்கேற்ப குறித்த கிராம உத்தியோகத்தர் பிரிவில் மண்வளப் பாதுகாப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. இதற்கமைய, 2012 ஆம் வருடத்தில் 12,000 விவசாயக் குடும்பங்களையும் 3,750 ஹெக்டயார் நிலப்பரப்பையும் இலக்காகக் கொண்டு இந் நிகழ்ச்சித் திட்டம் அமுல் செய்யப்பட்டது.

**1. சமூக பங்குபற்றுதலுடனான கிராமிய அபிவிருத்தித் திட்டமிடல்**

அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களுக்காக இலக்கு வைக்கப்படுகின்ற கிராமங்களுக்குத் தேவையான விவசாய அபிவிருத்தித் திட்டங்களை, அக் கிராம சமூகத்தின் பங்குபற்றுதலுடன் வகுப்பதை நோக்காகக் கொண்டு கிராம உத்தியோகத்தர் பிரிவு மட்டத்தில் 66 சமுக பங்களிப்புடனான கிராமப் பிரவேச **(Gemi Pivisuma)** நிகழ்ச்சித் திட்டங்கள் அமுல் செய்யப்பட்டன.

**2. சமூக செயற்படுத்தலுடனான நிகழ்ச்சித் திட்டம்**

29 பிரதேச செயலாளர் பிரிவுகளைச் சேர்ந்த 12,000 விவசாயக் குடும்பங்களை இலக்காகக் கொண்டு அமுல் செய்யப்பட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை மிகவும் வினைத்திறன் மிக்கவாறு அமுல் செய்வதற்குத் தேவையான கிராமிய பிரதிநிதித்துவத்தைப் பெற்றுக்

கொள்ளும் நோக்குடன், கிராமிய மட்டத்தில் கருத்திட்டங்களை ஒருங்கிணைக்கும் பொருட்டு 255 கிராமப்புற இளைஞர்கள் சமூக செயற்பாட்டாளர்களாக இனங் காணப்பட்டனர்.

### 3. மண்வளப் பாதுகாப்பு நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்காக விவசாய உபகரணங்களைப் பெற்றுக் கொடுத்தல்

மண்வளப் பாதுகாப்பு நடவடிக்கைகளில் விவசாயிகள் சமூகத்தை தொடர்புபடுத்திக் கொள்ளும் வகையில் ஒவ்வொரு குடும்ப அலகிற்கும் விவசாய உபகரணமாக 8,500 மண்வெட்டிகளைப் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

### 4. மண்வளப் பாதுகாப்பு வெளிக்களப் பயிற்சி நிகழ்ச்சிகள்

மண்வளப் பாதுகாப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்து அமுல் செய்யும் வகையில், களத்திலுள்ள விவசாயிகள் சமூகத்தைத் தெளிவுபடுத்தி அவர்களுக்கான பயிற்சிகளை வழங்கும் பொருட்டு இந் நிகழ்ச்சித் திட்டம் அமுல் செய்யப்பட்டது.

### 5. மண்வளப் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக ஊக்குவிப்புக் கொடுப்பனவுகளைச் செலுத்தல்

மண்வளப் பாதுகாப்பு நடவடிக்கைகளை முறையாக முன்னெடுக்கும் விவசாயிகளுக்கு ஊக்குவிப்புக் கொடுப்பனவொன்றைச் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. 2012 ஆம் வருடத்தில் கிடைக்கப் பெற்ற திறைசேரி நிதி ஒதுக்கீடுகளின் கீழ் ரூ. 7.015 மில்லியன் நிதி ஊக்குவிப்புக் கொடுப்பனவாகச் செலுத்தப்பட்டது. ஊக்குவிப்புக் கொடுப்பனவாகச் செலுத்தப்படவுள்ள எஞ்சிய தொகையை 2013 ஆம் வருத்தில் செலுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இங்கு மண்வளப் பாதுகாப்பு நடைமுறைகளைப் பின்பற்றி 402,726.9 மீற்றர் நீளமான கல் வரப்புகளும், 883,335.5 மீற்றர் நீளமான இயற்கை வரப்புகளும், 739,054.4 மீற்றர் நீளமான துண்டு வடிகால் முறைமையும், 54,505 மீற்றர் நீளமான மண் வரப்புகளும் அமைக்கப்பட்டன.

| மண்வளப் பாதுகாப்பு முறை | நீளம் (அடி) | இயற்கை வள முகாமைத்துவ நிறுவனத்தின் விலைகளின் அடிப்படையில் பெறுமதி (ரூ. மி.) | செலுத்தப்பட்ட தொகை (ரூ. மி.) | விவசாயிகளின் பங்களிப்பு |
|---|---|---|---|---|
| கல் வரப்புகள் | 402,729 | 59.6 | 24.6 | 80% |
| இயற்கை வரப்புகள் | 88,336 | 4.0 | | |
| துண்டு வடிகால் வரப்புகள் | 739,054 | 53.2 | | |
| மண் வரப்புகள் | 54,505 | 3.5 | | |
| விளிம்பு வடிகால் வரப்புகள் | 1,250 | 0.8 | | |
| **மொத்தம்** | **12,85,874** | **121.1** | | |

## 6. பாடசாலைகளை அடிப்படையாகக் கொண்ட மண்வளப் பாதுகாப்பு மாதிரிகள் நிகழ்ச்சித் திட்டம்

2012 ஆம் வருடத்தில் மண்வளப் பாதுகாப்பு நிகழ்ச்சித் திட்டம் அமுல் செய்யப்பட்ட பிரதேச செயலாளர் பிரிவுகளில் பாடசாலைகளை அடிப்படையாகக் கொண்ட மண்வளப் பாதுகாப்பு மாதிரி நிகழ்ச்சித் திட்டமும் அமுல் செய்யப்பட்டது. இந் நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் மண்வளப் பாதுகாப்பு தொடர்பில் பாடசாலை மாணவர்கள் தெளிவுபடுத்தப்பட்டதுடன், இந் நிகழ்ச்சித் திட்டம் அமுல் செய்யப்பட்ட பாடசாலைகளில் மண்வளப் பாதுகாப்பு மாதிரி அலகொன்று வீதம் அமைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

2012 ஆம் வருடத்தில் 29 பாடசாலைகளை இலக்கு வைத்து இந் நிகழ்ச்சித் திட்டம் அமுல் செய்யப்பட்டதுடன், 12 பாடசாலைகளில் மண்வளப் பாதுகாப்பு மாதிரி நிகழ்ச்சித் திட்டம் வெற்றிகரமாக அமுல் செய்யப்பட்டது. இதன் நிதி முன்னேற்றம் 0.21 மில்லியனாகும்.

- **மாதிரி விவசாயப் பண்ணை அலகு அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்**

இலங்கை ஹதபிம அதிகார சபையுடன் இணைந்து செயற்படும் விவசாயிகள் சமூகத்திற்கான பயிற்சி நிகழ்ச்சிகளை அமுல் செய்வதற்கும், வருமானங்களை ஈட்டிக் கொள்வதற்குமாக, கொத்மலையிலும் பல்லேகலேயிலும் 02 மாதிரி விவசாயப் பண்ணைகள் முன்னெடுத்துச் செல்லப்படுகின்றன.

இவ் விவசாயப் பண்ணைகளில் மண்வளப் பாதுகாப்பு மாதிரி அலகுகள், கால்நடை வளர்ப்பு, பயிர்ச் செய்கை, நாற்றுமேடை என்பன முன்னெடுத்துச் செல்லப்படுகின்றன. அத்துடன் பல்லேகெலே விவசாயப் பண்ணையுடன் இணைந்ததாக கோழிக் குஞ்சு போசாக்கு அலகொன்றும் முன்னெடுத்துச் செல்லப்படுகின்றது. ரூ. 5.68 மில்லியன் செலவில் பல்லேகெலே விவசாயப் பண்ணையின் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டதுடன், இவ் விவசாயப் பண்ணையின் 2012 ஆம் வருடத்திற்கான வருமானம் ரூ. 5.92 மில்லியனாகும். மேலும், கொத்மலை விவசாயப் பண்ணையின் அபிவிருத்திப் பணிகளுக்கும் பராமரிப்புப் பணிகளுக்குமாக 2012 ஆம் வருடத்தில் ரூ. 2.39 மில்லியன் நிதி செலவு செய்யப்பட்டதுடன், இவ் விவசாயப் பண்ணை மூலம் 2012 ஆம் வருடத்தில் பெறப்பட்ட வருமானம் ரூ. 1.82 மில்லியனாகும்.

- **வீட்டுத் தோட்ட முகாமைத்துவமும் பயிர் பல்வகைப்படுத்தலும்**

2011 ஆம் வருடத்தில் மண்வளப் பாதுகாப்பு நடவடிக்கைகள் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்ட காணிகளை இணைத்துக் கொண்டு 2012 ஆம் வருடத்தில் வீட்டுத் தோட்டச் செய்கை அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் அமுல் செய்யப்பட்டதுடன், இந் நோக்கங்களை அடையும் வகையில், விவசாயிகளின் பங்களிப்புடன் கீழ்க் காணும் செயற்பாடுகள் அமுல் செய்யப்பட்டன.

| | **செயற்பாடு** | **2012 ஆம் வருடத்தில் முன்னேற்றம்** | | | |
|---|---|---|---|---|---|
| | | **பௌதீக இலக்கு (நிகழ்ச்சித் திட்டங்கள்)** | **பௌதீக முன்னேற்றம்** | **நிதி இலக்கு (ரூ. மி.)** | **நிதி முன்னேற்றம் (ரூ. மி.)** |
| 1. | விடயம்சார் தொழில்நுட்பப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் | 50 | 68 (பங்குபற்றிய விவசாயிகள் 4,537) | 0.250 | 0.230 |
| 2. | சமூக பங்களிப்புடனான நாற்றுமேடை நிகழ்ச்சித் திட்டம் | 45 | 25 (பங்குபற்றிய விவசாயிகள் 4,537) | 0.270 | - |
| 3. | நடுகைப் பொருட்களை விநியோகித்தல் | 3,022 | 3,022 | 3.071 | 2.247 |
| 4. | ஓரளவு இல்லம்சார் கோழி வளர்ப்பு நிகழ்ச்சித் திட்டம் | 3,000 | 3,000 | 0.9 | 0.898 |

## இலங்கை ஹதபிம அதிகார சபையினால் அமுல் செய்யப்பட்ட விசேட கருத்திட்டங்கள்

### 1. இராணுவ வீரர் பங்களிப்புடனான காணி மற்றும் பயிர்ச் செய்கை அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்

கிளிநொச்சி, வவுனியா, மன்னார், அம்பாறை, பொலநறுவை ஆகிய மாவட்டங்களில் அமைந்துள்ள 30 இராணுவ முகாம்கள் உட்படுமாறு 1,000 ஏக்கர் விவசாயத்துறை அபிவிருத்தியை இலக்காகக் கொண்டு இக் கருத்திட்டம் அமுல் செய்யப்பட்டதுடன், 2012 ஆம் வருடத்தில் அடையப் பெற்ற முன்னேற்றம் வருமாறு:

| | **உப செயற்பாடு** | **2012 ஆம் வருடத்தில் முன்னேற்றம்** | | | |
|---|---|---|---|---|---|
| | | **பௌதீக இலக்கு (நிகழ்ச்சித் திட்டங்கள்)** | **பௌதீக முன்னேற்றம்** | **நிதி இலக்கு (ரூ. மி.)** | **நிதி முன்னேற்றம் (ரூ. மி.)** |
| 1. | அடிப்படை விவசாய உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி | 25 | 25 | 1.25 | 0.09 |
| 2. | விவசாய உபகரணங்களை விநியோகித்தல் | 25 | 25 | 2.75 | 1.13 |
| 3. | விவசாய இயந்திரோபகரணங்களை விநியோகித்தல் | 02 | 02 | 0.50 | 0.41 |
| 4. | குறுகியகால பயிர்ச் செய்கை நிகழ்ச்சித் திட்டம் | 300 | 150 | 0.40 | 0.46 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 5. | மத்தியகால, நிரந்தரப் பயிர்ச் செய்கை நிகழ்ச்சித் திட்டம் | 100 | 100 | 2.50 | 0.10 |
| 6. | குறுகியகால பயிர்ச் செய்கை நிகழ்ச்சித் திட்டம் | 10 | 03 | 0.25 | 0.09 |
| 7. | தொழில்நுட்பப் பயிற்சி நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்தல் | 01 | - | 0.20 | - |
| 8. | பெயர்ப் பலகைகளைத் தயாரித்தல் | - | - | 0.10 | - |
| 9. | நிருவாகச் செலவுகள் | - | - | 0.276 | 0.19 |

**2. உப உணவுப் பயிர் அபிவிருத்தித் திட்டம்**

2012 ஆம் வருடத்தில் மொனறாகலை மாவட்டத்தின் வெல்லவாய, தனமல்விலை பிரதேச செயலாளர் பிரிவுகளில் 1,000 விவசாயக் குடும்பங்களையும், 1,000 ஏக்கர் நிலத்தையும் இலக்காகக் கொண்டு இந் நிகழ்ச்சித் திட்டம் அமுல் செய்யப்பட்டதுடன், குறிப்பாக உப உணவுப் பயிர்களான நிலக்கடலை, பயறு, கவுப்பி, சோளம் முதலான பயிர்கள் செய்கை பண்ணப்பட்டன.

| | உப செயற்பாடு | 2012 ஆம் வருடத்தில் முன்னேற்றம் | | | |
|---|---|---|---|---|---|
| | | பௌதீக இலக்கு (நிகழ்ச்சித் திட்டங்கள்) | பௌதீக முன்னேற்றம் | நிதி இலக்கு (ரூ. மி.) | நிதி முன்னேற்றம் (ரூ. மி.) |
| 1. | தொழில்நுட்பப் பயிற்சி நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்தல் | 06 | 06 | 0.06 | 0.05 |
| 2. | விவசாய உபகரணங்களை விநியோகித்தல் | 1,000 | 1,006 | 0.75 | 0.73 |
| 3. | விதை மற்றும் நடுகைப் பொருட்களை விநியோகித்தல் | 1,000 | 895 | 5.96 | 3.50 |
| 4. | தொழில்நுட்பப் பயிற்சி பெற்ற தொழிலாளர்களின் சேவையைப் பெற்றுக் கொள்ளல் | 02 | 02 | 0.32 | 0.15 |
| 5. | போக்குவரத்துச் செலவுகள் | - | - | 0.04 | 0.03 |
| 6. | நிருவாகச் செலவுகள் | - | - | 0.120.10 | 0.09 |

## 3. கூட்டு விவசாயக் காணிகள் அபிவிருத்தி மாதிரிக் கிராமங்கள் திட்டம்

இலங்கை ஹதபிம அதிகார சபையினால் தற்சமயம் அமுல் செய்யப்பட்டு வரும் சகல அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களையும் ஒரே கிராமத்தின் கீழ் கொண்டு வந்து அமுல் செய்யும் வகையில், விவசாய கூட்டு மாதிரிக் கிராமமொன்று, வலப்பனை பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள மிகவும் பின்தங்கிய கிராமமான கந்தயாய கிராமத்தில் அமுல் செய்யப்பட்டுள்ளது.

| | உப செயற்பாடு | 2012 ஆம் வருடத்தில் முன்னேற்றம் | | | |
|---|---|---|---|---|---|
| | | பௌதீக இலக்கு (நிகழ்ச்சித் திட்டங்கள்) | பௌதீக முன்னேற்றம் | நிதி இலக்கு (ரூ. மி.) | நிதி முன்னேற்றம் (ரூ. மி.) |
| 1. | சமூகப் பங்களிப்புடனான கிராமப் பிரவேசம் | 02 | 02 | 0.02 | 0.02 |
| 2. | செயற்பாட்டாளர்களுக்கான பயிற்சியளித்தல் | 01 | 01 | 0.12 | 0.12 |
| 3. | மண்வளப் பாதுகாப்பு தொடர்பில் வெளிக்களப் பயிற்சி | 02 | 02 | 0.02 | 0.01 |
| 4. | விவசாயப் பண்ணைகளுக்கு வெளியே மண்வளப் பாதுகாப்பு நடவடிக்கைகள் | 500 | - | 0.05 | - |
| 5. | விவசாய உபகரணங்களை விநியோகித்தல் | 350 | 120 | 0.26 | 0.25 |
| 6. | மண்வளப் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கான ஊக்குவிப்புக் கொடுப்பனவுகள் | 300 | 205.25 | 0.90 | 0.62 |
| 7. | குறுகியகாலப் பயிர்ச் செய்கை நிகழ்ச்சித் திட்டம் | 300 | 205.25 | 0.12 | 0.12 |
| 8. | மத்தியகால மற்றும் நிரந்தரப் பயிர்ச் செய்கை நிகழ்ச்சித் திட்டம் | 300 | 205.25 | 0.35 | 0.26 |
| 9. | சேதனப் பசளை உற்பத்தி நிகழ்ச்சித் திட்டம் | 350 | 141 | 0.17 | 0.04 |
| 10. | தேனீ வளர்ப்பு நிகழ்ச்சித் திட்டம் | 100 | 100 | 0.09 | 0.08 |
| 11. | நீர் மூலங்களில் பாதுகாக்கப்பட்ட காடு வளர்ப்பு | - | - | 0.10 | 0.003 |
| 12. | தொழில்நுட்பப் பயிற்சி பெற்ற தொழிலாளர்களின் சேவையைப் பெற்றுக் கொள்ளல் | 01 | 01 | 0.20 | 0.12 |
| 13. | ஊடக நடவடிக்கைகள் | - | - | 0.02 | - |
| 14. | நிருவாகச் செலவுகள் | - | - | 0.07 | 0.05 |

## (iii) ஹெக்டர் கொப்பேகடுவை விவசாய ஆராய்ச்சி, பயிற்சி நிறுவகம்

தற்காலத்தில் விவசாயத்துறையில் எதிர்நோக்கப்படுகின்ற பிரதான சவாலாகக் காணப்படுவது யாதெனில், விவசாயத்தை தொழில் முயற்சியொன்றாக தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்வதாகும். எனவே, இதில் ஒப்பீட்டு ரீதியில் விவசாயியின் வருமானம் செலவிலும் பார்க்க அதிகரிக்கப்படுதல் வேண்டும். இதற்காக சமூக, பொருளாதாரப் பிரச்சினைகள் மீது கூடுதல் கவனம் செலுத்தப்படுவது கட்டாயமாகும். 1972 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க பாராளுமன்றச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட விவசாய ஆராய்ச்சி, பயிற்சி நிறுவகத்தைச் சேர்ந்த (1995 இல் இந் நிறுவகம் ஹெக்டர் கொப்பேகடுவை விவசாய ஆராய்ச்சி, பயிற்சி நிறுவகம் எனப் பெயரிடப்பட்டது) சமூக, பொருளாதார நிபுணர்களினால் மேற்கொள்ளப்படுகின்ற சமூக, பொருளாதார ஆராய்ச்சிகள் இது தொடர்பில் மிக முக்கிய இடம் வகிக்கின்றது. இவ் ஆராய்ச்சிகள் ஊடாக சமூக, பொருளாதாரப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குத் தேவையான புதிய அறிவு பிறப்பிக்கப்படுகின்றது.

**அட்டவணை I: பௌதீக முன்னேற்றம் - ஆராய்ச்சி**

| | ஆராய்ச்சி முன்னேற்றம் | 2011 (ரூ. மி.) | 2012 (ரூ. மி.) |
|---|---|---|---|
| 1. | முடிக்கப்பட்ட ஆய்வுகள் | 12 | 25 |
| 2. | 75% வீதம் முடிக்கப்பட்ட ஆய்வுகள் | 04 | 05 |
| 3. | 75% வீதத்திற்குக் குறைவாக முடிக்கப்பட்ட ஆய்வுகள் | - | 08 |
| | **ஆய்வுகளின் மொத்த எண்ணிக்கை** | **16** | **38** |

**அட்டவணை II: நிதி முன்னேற்றம் - ஆராய்ச்சியும் பயிற்சியும்**

| விபரம் | பெறுகைகள் | | செலவு | |
|---|---|---|---|---|
| | 2011 (ரூ. மி.) | 2012 (ரூ. மி.) | 2011 (ரூ. மி.) | 2012 (ரூ. மி.) |
| திறைசேரி ஒதுக்கீடு | 24.0 | 17.0 | 23.9 | 13.98 |
| பிற நிறுவனங்களிடமிருந்து கிடைக்கப் பெற்றவை | 3.46 | 10.65 | 3.14 | 8.93 |
| **மொத்தம்** | **27.46** | **27.65** | **26.04** | **21.91** |

**2012 ஆம் வருடத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் சிலவற்றின் கண்டுபிடிப்புகளும் சிபாரிசுகளும்**

25 ஆய்வுகள் முடிக்கப்பட்டுள்ளதுடன், தெரிவு செய்யப்பட்ட 06 ஆய்வுகளின் கண்டுபிடிப்புகளும் சிபாரிசுகளும் வருமாறு:

### 1. ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் அரசாங்கக் காணிகளின் நிருவாகமும், சேவை வழங்கலும் தொடர்பான ஆய்வு

சேவை பெறுனர்களின் ஆட்சியுடைமையின் கீழ் காணப்படுகின்ற காணிகளில் 30% வீதமான காணிகள் அத்துமீறிய காணிகளென தெரிய வந்துள்ளது. சேவை வழங்கலின் போது அரசதுறை

நிறுவனங்கள் செயற்திறனற்றவையெனவும் உத்தியோகத்தர்களின் செயற்படும் தன்மை செயற்திறனற்றவையெனவும் சேவைபெறுனர்கள் தெரிவித்துள்ளனர். தரவுத் தளமொன்றை உருவாக்குதல், இத் தரவுத் தளத்தை மாதாந்தம் இற்றைப்படுத்தல், பிரதேச மட்டத்தில் தீர்மானங்களை எடுத்து கோப்புகளை முடிப்பதற்கு யோசனை முன்வைக்கப்பட்டது.

## 2. ஒப்பந்த விவசாயிகள் ஊடாக இடம்பெறுகின்ற உள்ளூர் மரக்கறி விதை உற்பத்தித் தொழிற்பாட்டையும் அதன் தற்போதைய நிலைமையையும் ஆய்வு செய்தல்

பெரும்பாலான விவசாயிகள் சிறியளவிலான (1/4 ஏக்கர் - 1/2 ஏக்கர்) விவசாயிகளாகக் காணப்படுவதுடன், அவர்கள் முகங் கொடுக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வாக விவசாயத் திணைக்களத்தின் பணிகளை வலுப்படுத்தல், அரசாங்கத்தின் ஒப்பந்த விதை உற்பத்தி நிகழச்சித் திட்டத்திற்கு பரந்த பிரசாரமொன்றைப் பெற்றுக் கொடுத்தல், அத்தாட்சிப்படுத்தப்பட்ட விதைகளுக்காகச் செலுத்தப்படுகின்ற தொகையை அதிகரித்தல், விதை உற்பத்தியை விஸ்தரித்தல் முதலான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குச் சிபாரிசு செய்யப்பட்டுள்ளது.

## 3. அரிசி உற்பத்தி வகுத்தமைத்தல் கிராமங்கள் நிகழ்ச்சித் திட்டத்தை மதிப்பீடு செய்தல்

ஆய்வுக்குட்படுத்தப்பட்ட அரிசி உற்பத்தியாளர்களில் 47% வீதமானோர் சந்தைக்காக அரிசி உற்பத்தி செய்வதாகத் தெரிய வந்தது. தரத்தில் சிறந்த அரிசி நுகர்வை ஊக்குவிக்கும் வகையில் இத் தொழில்நுட்பத்தை விவசாய விஸ்தரிப்புச் சேவையூடாக தீவு முழுவதுக்கும் விஸ்தரித்தல், கேள்வியின் அடிப்படையில் குழுப் பிரவேசத்தினூடாக பயிற்சி நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்தல், கைத்தொழிலொன்றாக விருத்தி செய்யும் பொருட்டு தனிநபர் பிரவேசத்தினை கடைப்பிடித்தல் முதலான நடைமுறைகளைக் கையாள வேண்டுமென யோசனை முன்வைக்கப்பட்டது.

## 4. வட மாகாணத்தில் விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட வாழ்வாதாரம் மற்றும் பங்களிப்பு அனுசரணை தொடர்பிலான ஆய்வு

இந்த ஆய்வினூடாக கூடிய விளைச்சலைப் பெற்றுத் தருகின்ற விதைகளை இலவசமாகப் பெற்றுக் கொடுப்பதன் மூலம் உற்பத்தி அதிகரித்துள்ளமையும், விவசாயிகள் விதைகளின் தரம் தொடர்பில் திருப்தி கொண்டுள்ளமையும், இருந்த போதிலும், காணிகளின் உரிமை தொடர்பான பிரச்சினை காரணமாக கடன்களைப் பெற்றுக் கொள்வதில் தடை ஏற்பட்டுள்ளமையும் தெரிய வந்துள்ளது. மத்தியகால மற்றும் நீண்டகால அடிப்படையில் வாழ்வாதாரங்களை அபிவிருத்தி செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல், மக்களுக்கு வங்கி நடவடிக்கைகள் தொடர்பில் அறிவைப் பெற்றுக் கொடுத்தல், பெண்களை வீட்டுத் தலைவிகளாகக் கொண்ட இல்லங்களினதும் மூத்த மக்கள் தொகுதியினரதும் தேவைகளை இனங் கண்டு, அவர்களுக்குப் பொருத்தமான வருமானம் ஈட்டல் வாய்ப்புகளை பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் முதலான பணிகளை மேற்கொள்வதற்கு இந்த ஆய்வின் மூலம் சிபாரிசு செய்யப்பட்டுள்ளது.

## 5. இலங்கை ஹதபிம அதிகார சபையினால் அமுல் செய்யப்பட்ட மண்வளப் பாதுகாப்பு நிகழ்ச்சித் திட்டத்தை மதிப்பீடு செய்தல் தொடர்பான ஆய்வு

கருத்திட்டக் காலப்பகுதியில் மண்வளப் பாதுகாப்பு நடவடிக்கைகள் தொடர்பில் விவசாயிகளின் ஈடுபாடு உயர்ந்த மட்டத்தில் காணப்பட்ட போதிலும், கருத்திட்டக் காலப்பகுதியின் பின்னர்

விவசாயிகளின் கவனமும் ஈடுபாடும் படிப்படியாகக் குறைந்து கொண்டு செல்வது கண்டுபிடிக்கப்பட்டது. இதன் காரணமாக, மண்வளப் பாதுகாப்பு நடைமுறைகளைக் கையாள்வதற்கு விவசாயிகளிடத்தில் மாற்றமொன்றை ஏற்படுத்துவதற்கு, போதியதொரு காலப்பகுதி வரை பின்னாய்வு நடவடிக்கைகளை பிரதேச உத்தியோகத்தர்கள் ஊடாக மேற்கொள்வதற்கும், அரசாங்கத்தின் ஏனைய பயன்களைப் பெற்றுக் கொள்வதற்கு இதனை ஒரு தேவைப்பாடாக மாற்றியமைப்பதற்கும் சிபாரிசு முன்வைக்கப்பட்டுள்ளது.

## 6. மேல் மாகாணத்தில் பழ நுகர்வு தொடர்பான ஆய்வு

குடும்பமொன்றின் பழ நுகர்விற்காக, உணவுக்காகச் செய்யப்படுகின்ற மொத்தப் பணத்தில் மிகச் சொற்ப அளவே (3%) செலவு செய்யப்படுவதாகவும், ஆய்வுக்குட்படுத்தப்பட்ட நுகர்வோரில் 50% வீதமானோர் பழ நுகர்வின் பயன்கள் தொடர்பில் தெளிவைக் கொண்டுள்ளனரெனவும், பழ நுகர்வு தாழ்ந்த மட்டத்தில் காணப்படுவதற்குக் காரணம், பழங்களைப் பழுக்க வைப்பதற்குக் கையாளப்படுகின்ற முறை தொடர்பில் காணப்படுகின்ற விருப்பமின்மையே எனவும் தெரிய வந்துள்ளது. நுகர்வோர் எதிர்பார்க்கும் தரத்தில் சிறந்ததும் நல்ல சுவையும் கொண்டதுமான பழங்களைப் பெற்றுக் கொடுப்பதற்கு அரசாங்கம் கொள்கைகளை வகுக்க வேண்டுமெனவும், பழங்களை உட்கொள்வதன் மூலம் கிடைக்கின்ற போசாக்கு, தேகாரோக்கியம் முதலான பெறுமதிகள் தொடர்பிலும், நாளொன்றிற்கு குறைந்த பட்சம் உட்கொள்ள வேண்டிய பழங்கள் தொடர்பிலும் பொதுமக்களுக்கு விளக்கம் அளிக்கப்பட வேண்டுமெனவும் சிபாரிசு முன்வைக்கப்பட்டுள்ளது.

## (iv) தேசிய உணவு ஊக்குவிப்புச் சபை

2012 ஆம் வருடத்தில் தேசிய உணவு ஊக்குவிப்புச் சபையினால் பல்வேறு அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் அமுல் செய்யப்பட்டதுடன், இதற்காக கமத்தொழில் அமைச்சின் ***"நாம் நடுவோம் - நாட்டைக் கட்டியெழுப்புவோம்"*** நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்ட நிதியும், கமக்காரர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் நிதியும், நிறுவனத்தின் சுய நிதியும் ஈடுபடுத்தப்பட்டது.

**<u>அமைச்சு நிதி ஒதுக்கீடுகளின் கீழான கருத்திட்டங்கள்</u>**

### 1. உள்ளூர் உணவு வகைகளை பிரபல்யப்படுத்தும் கருத்திட்டம்

இதற்காக ரூ. 2.99 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டதுடன், ரூ. 1.23 மில்லியன் நிதி முன்னேற்றம் அடையப் பெற்றுள்ளது. இதன் கீழ் 19 நிகழ்ச்சித் திட்டங்கள் அமுல் செய்யப்பட்டதுடன், இவற்றில் பங்கு கொண்ட பயனாளிகளுக்கு சுவபோஷ மற்றும் அரிசி மாவு என்பன வழங்கப்பட்டன.

### 2. விவசாயப் பண்ணை அபிவிருத்திக் கருத்திட்டம்

- புத்தலை விவசாயப் பண்ணை அபிவிருத்தித் திட்டம்
- தனமல்விலை விவசாயப் பண்ணை அபிவிருத்தித் திட்டம்
- வட்டக்கச்சி விவசாயப் பண்ணை அபிவிருத்தித் திட்டம்

இதற்காக ரூ. 13.68 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டதுடன், இதன் நிதி முன்னேற்றம் ரூ. 8.41 மில்லியனாகும். எழுமிச்சை, பெங்கிரி, மிளகாய், பப்பாசி முதலான பயிர்களைச் செய்கை பண்ணுதல், உள்ளூர் நெற் செய்கை பண்ணுதல், பயிர்ச் செய்கை உபகரணங்களைப் பழுதுபார்த்தல், யானைகள் நுளைவதைத் தடுப்பதற்கான வேலிகளை அமைத்தல், விவசாயக் கிணறுகளை ஆழமாக்குதல் முதலான பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

**<u>கமக்காரர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் மூலம் பெறப்பட்ட நிதியை ஈடுபடுத்தி அமுல் செய்யப்பட்ட கருத்திட்டங்கள்</u>**

### 1. உணவு உற்பத்திகளைச் சேகரிப்பதற்கான நிலையங்கள்

இதற்காக ரூ. 5.0 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டதுடன், 0.59 மில்லியன் நிதி முன்னேற்றம் அடையப் பெற்றுள்ளது. இதன் கீழ் 9,523.5 கி.கி. நெல் கொள்வனவு செய்யப்பட்டது.

### 2. அரிசிமா நூடில்ஸ் தொழிற்சாலையை அமைத்தல்

இதற்காக ரூ. 8.78 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டதுடன், மாவட்ட காணி உபயோகக் குழுவின் அங்கீகாரத்தின் அடிப்படையில் இதற்கான காணி ஒதுக்கப்பட்டது.

3. **அரிசிமா நூடில்ஸ் ஊக்குவிப்புத் திட்டம் - உபகரணங்கள் கொள்வனவு**

இதற்காக ரூ. 2.5 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டதுடன், தற்சமயம் கொள்முதல் தொழிற்பாடு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

சுய நிதி ஒதுக்கீட்டின் கீழான கருத்திட்டங்கள்

| | **ஊக்குவிப்புக் கருத்திட்டம்** | **செலவு (ரூ. மி.)** | **வருமானம் (ரூ. மி.)** | **இலாபம் (ரூ. மி.)** |
|---|---|---|---|---|
| 1. | நாற்றுமேடை - நாராஹேன்பிட்டி | 6.45 | 7.9 | 1.45 |
| 2. | விவசாய உற்பத்தி விற்பனை நிலையம் - நாராஹேன்பிட்டி | 20.331 | 19.559 | -0.772 |
| 3. | விவசாய உற்பத்தி விற்பனை நிலையம் - தெஹிவளை | 58.719 | 63.619 | 4.9 |
| 4. | விலமுல்லை பான கைத்தொழிற்சாலை | 0.595 | 0.11 | -0.485 |
| 5. | அரிசிமா ஊக்குவிப்புத் திட்டம் - பெருந்தோட்டத்துறை | 15.38 | 14.65 | -0.73 |
| 6. | சுவபோஷ கருத்திட்டம் | 0.78 | 0.56 | -0.22 |
| 7. | சுவந்தில் ஸ்லோபுட் உணவகம் | 7.741 | 6.125 | -1.616 |
| | **மொத்தம்** | **109.996** | **112.523** | **2.527** |

## (v) இலங்கை தேசிய விவசாய ஆராய்ச்சி, கொள்கைப் பேரவை

| | செலவு விபரம் | தொகை (ரூ. மி.) |
|---|---|---|
| 1. | முழு மூலதன ஒதுக்கீடு | 30.0 |
| 2. | 2012.12.30 ஆம் திகதிக்கு திறைசேரியிடமிருந்தான பெறுகைகள் | 19.955 |
| 3. | 2012.12.31 ஆம் திகதிக்கு உண்மையான செலவு | 18.756 |
| 4. | வருடத்தில் நிதி முன்னேற்ற வீதம் (%) | 95.94% |

<u>2012 ஆம் வருடத்தில் நிறைவேற்றப்பட்ட பணிகள்</u>

1987 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க இலங்கை தேசிய விவசாய ஆராய்ச்சி, கொள்கைப் பேரவைச் சட்டத்தின் மூலம் உரித்தாக்கப்பட்ட பணிகளும், விவசாய ஆராய்ச்சித்துறையில் தேசிய முக்கியத்துவத்தை அடிப்படையாகக் கொண்ட பணிகளும் 2012 ஆம் வருடத்திற்காக திட்டமிடப்பட்டன. நிறைவேற்றப்பட்ட பணிகள் வருமாறு:

### 1. தேசிய விவசாய ஆராய்ச்சித் திட்டம்

மஹிந்த சிந்தனை முன்னோக்கிய பார்வையில் காட்டப்பட்டுள்ள முன்னுரிமை ஒழுங்கையும் தேசிய குழுவினால் இனங் காணப்பட்ட ஆராய்ச்சி முன்னுரிமையையும் அடிப்படையாகக் கொண்டு, 2012 ஆம் வருடத்திற்கான தேசிய விவசாய ஆராய்ச்சித் திட்டம் வகுக்கப்பட்டது. இதற்கமைய, தேசிய விவசாய ஆராய்ச்சி நிறுவனங்களில் 133 ஆராய்ச்சித் திட்டங்கள் தேசிய குழு ஊடாக மதிப்பீடு செய்யப்பட்டு, கமத்தொழில் அமைச்சிற்கும், திறைசேரிக்கும் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

### 2. விவசாய ஆராய்ச்சிகளுக்கு ஒத்துழைப்பு வழங்கும் நிகழ்ச்சித் திட்டம்

சட்டத்தினால் விதிக்கப்பட்டுள்ள பணிகளின் அடிப்படையில் தேசிய விவசாய ஆராய்ச்சி முறைமையின் ஆராய்ச்சிக் கருத்திட்டங்களுக்காக/பணிகளுக்காக பேரவை முனைப்புடனான ஒத்துழைப்பை வழங்குகின்றது. இதற்காக விவசாய ஆராய்ச்சி உதவி நிதியமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் தேசிய விவசாய ஆராய்ச்சி முறைமையினுள் அடங்குகின்ற நிறுவனங்களுக்கு விஞ்ஞான விவசாய உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

### 3. கருத்தரங்குகள், சம்மேளனங்கள், தரப்புகளுக்கிடையிலான கலந்துரையாடல்கள்

2012.12.11 ஆம் திகதி இலங்கை தேசிய விவசாய ஆராய்ச்சி, கொள்கைப் பேரவையினால், அதன் 25 ஆவது வருட பூர்த்தியை முன்னிட்டு, கடந்த 25 வருட காலப்பகுதியில் பேரவையின் பங்களிப்பு மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட்டது.

மேலும், விவசாய ஆராய்ச்சி, கொள்கைப் பேரவையின் மலர்ச் செய்கை ஆராய்ச்சி, அபிவிருத்தி தொடர்பிலான தேசிய குழுவும், தேசிய வனப்பூங்கா திணைக்களமும் இணைந்து, 2012.12.17 ஆம் திகதி பேராதனை தாவரவியல் பூங்கா கேட்போர் கூடத்தில் மலர்ச் செய்கை தொடர்பிலான 5 ஆவது தேசிய மாநாட்டை நடாத்தின.

### 4. முடிக்கப்பட்ட பிற பணிகள்

2012 பெப்ரவரி 4 தொடக்கம் 12 வரை அநுராதபுரம் ஒயாமடுவ பிரதேசத்தில் நடைபெற்ற தேசத்திற்கு மகுடம் தேசிய கண்காட்சியில் பங்குபற்றல், காட்சிக்கூடமொன்றை அமைத்தல், விவசாய ஆராய்ச்சி முன்னோடி வெளியீடுகளை வெளியிடல் முதலான பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

### (vi) அறுவடைக்குப் பிந்திய தொழில்நுட்ப நிறுவனம்

- **<u>கருத்திட்டம்:</u> பொதியிடல் இல்லத் தொழில்நுட்பத்தின் மூலம் மரக்கறி, பழங்களின் அறுவடைக்குப் பிந்திய சேதங்களைக் குறைத்தல்**

| ஒதுக்கப்பட்ட தொகை (ரூ. மி.) | நிதி முன்னேற்றம் (ரூ. மி.) | முன்னேற்ற வீதம் (%) | பௌதீக இலக்கு | பௌதீக முன்னேற்றம் |
|---|---|---|---|---|
| 1.9 | 1.42 | 4.73% | 03 மாதிரி பொதியிடல் இல்லங்களை முன்னோடிக் கருத்திட்டமாக களத்திற்கு அறிமுகம் செய்தலும் 225 பயனாளிகளுக்குப் பயிற்சியளித்தலும் | 03 மாதிரி பொதியிடல் இல்லங்களை, பிலக்பூல், நுவரெளியா, கிரிபத்கும்புர, கண்டி, எட்டவீரகொல்லேவ, மதவாச்சி, அநுராதபுரம் ஆகிய பிரதேசங்களில் 03 பயனாளிகளுக்காக அறிமுகம் செய்யப்பட்டது. இப் பிரதேசங்களைச் சேர்ந்த 269 பேருக்குப் பயிற்சியளிக்கப்பட்டது. மாதிரி பொதியிடல் வீடொன்று நிறுவனத்துள் தாபிக்கப்பட்டுள்ளது. |

- **<u>கருத்திட்டம்:</u> அறுவடைக்குப் பிந்திய தொழில்நுட்ப மாதிரிக் கிராமங்களை நிறுவுதல்**

| ஒதுக்கப்பட்ட தொகை (ரூ. மி.) | நிதி முன்னேற்றம் (ரூ. மி.) | முன்னேற்ற வீதம் (%) | பௌதீக இலக்கு | பௌதீக முன்னேற்றம் |
|---|---|---|---|---|
| 3.0 | 2.061 | 68.7% | 06 அறுவடைக்குப் பிந்திய தொழில்நுட்ப மாதிரிக் கிராமங்களை நிறுவுதல், அவர்களுக்குத் தேவையான ஈடுபாட்டுப் பொருட்களை வழங்குதல், 120 பயனாளிகளுக்கு பயிற்சியளித்தல் | 141 பயனாளிகளுக்குப் பயிற்சியளிக்கப்பட்டது. 06 அறுவடைக்குப் பிந்திய தொழில்நுட்ப மாதிரிக் கிராமங்களை, சாலிய அசோக்கபுர - குருணாகல், பிசோபண்டாரபுர - பொலநறுவை, நுவரெளியா, கோனகல - அம்பாறை, வெலிப்பிட்டிமோதர - காலி, உல்லல - மாத்தறை ஆகிய இடங்களில் நிறுவப்பட்டன. |

- <u>கருத்திட்டம்:</u> **நடுத்தர மற்றும் சிறியளவிலான அரிசிமா தயாரிக்கும் ஆலைகளின் வசதிகளை மேம்படுத்தல்**

| ஒதுக்கப்பட்ட தொகை (ரூ. மி.) | நிதி முன்னேற்றம் (ரூ. மி.) | முன்னேற்ற வீதம் (%) | பௌதீக இலக்கு | பௌதீக முன்னேற்றம் |
|---|---|---|---|---|
| 0.25 | 0.105 | 112.21% | அரிசி மா தயாரிப்பு தொடர்பில் 08 மாவட்டங்களைச் சேர்ந்த 150 பயனாளிகளுக்கு பயிற்சியளித்தலும் 25 அரிசிமா ஆலைகளை மேம்படுத்தலும். | 285 பயனாளிகளுக்குப் பயிற்சியளிக்கப்பட்டது. மேம்படுத்தப்பட்ட அரிசிமா ஆலைகளின் எண்ணிக்கை 30. |

- <u>கருத்திட்டம்:</u> **மரக்கறி, பழ விற்பனைக்காக மேம்படுத்தப்பட்ட நடமாடும் விற்பனைக் கூடங்களை அறிமுகம் செய்தலும் ஊக்குவித்தலும்**

| ஒதுக்கப்பட்ட தொகை (ரூ. மி.) | நிதி முன்னேற்றம் (ரூ. மி.) | முன்னேற்ற வீதம் (%) | பௌதீக இலக்கு | பௌதீக முன்னேற்றம் |
|---|---|---|---|---|
| 0.75 | 0.731 | 97.57% | 10 நடமாடும் விற்பனைக் கூடங்களை பயனாளிகளிடத்தில் விநியோகித்தலும், இது தொடர்பில் 120 பயனாளிகளுக்குப் பயிற்சியளித்தலும். | 10 நடமாடும் விற்பனைக் கூடங்கள் தயாரிக்கப்பட்டு முடிக்கப்பட்டன. நடமாடும் விற்பனைக் கூடங்களைப் பகிர்ந்தளிக்கும் வகையில், மாத்தறை, குருணாகல், பொலநறுவை, அம்பாறை, வவுனியா ஆகிய மாவட்டங்களிலிருந்து 10 பயனாளிகள் இனங் காணப்பட்டுள்ளனர். இது தொடர்பில் 150 பயனாளிகளுக்குப் பயிற்சியளிக்கப்பட்டது. |

- <u>கருத்திட்டம்:</u> **அரிசி மா மற்றும் ஐஸ்கிரீம் இயந்திரங்களை மாவட்ட மட்டத்தில் பகிர்ந்தளித்தல்**

| ஒதுக்கப்பட்ட தொகை (ரூ. மி.) | நிதி முன்னேற்றம் (ரூ. மி.) | முன்னேற்ற வீதம் (%) | பௌதீக இலக்கு | பௌதீக முன்னேற்றம் |
|---|---|---|---|---|
| 1.0 | 1.122 | 112.21% | 05 அரிசிமா மற்றும் ஐஸ்கிரீம் இயந்திரங்களை பயனாளிகளிடத்தில் பகிர்ந்தளித்தல் | 05 அரிசிமா மற்றும் ஐஸ்கிரீம் இயந்திரங்களை மாத்தறை, ஹம்பாந்தோட்டை, கொழும்பு மாவட்டங்களைச் சேர்ந்த பயனாளிகளிடத்தில் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | பகிர்ந்தளிப்பதற்காக தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது. |

- **<u>கருத்திட்டம்:</u> அரிசி ஆலைகளை மேம்படுத்தும் கருத்திட்டம்**

| **ஒதுக்கப்பட்ட தொகை (ரூ. மி.)** | **நிதி முன்னேற்றம் (ரூ. மி.)** | **முன்னேற்ற வீதம் (%)** | **பௌதீக இலக்கு** | **பௌதீக முன்னேற்றம்** |
|---|---|---|---|---|
| 0.09 | 0.076 | 84% | 20 அரிசி ஆலைகளை நவீனமயப்படுத்தலும் 180 பயனாளிகளுக்குப் பயிற்சியளித்தலும் | 190 பயனாளிகளுக்குப் பயிற்சியளிக்கப்பட்டன. 18 அரிசி ஆலைகள் நவீனமயப்படுத்தப்பட்டன. |

- **<u>கருத்திட்டம்:</u> கிராமப்புறப் பிரதேசங்களில் அரிசி சார்ந்த உற்பத்திகளை மேற்கொள்வதற்காக சிறு தொழில் முயற்சிகளை ஆரம்பிக்கும் கருத்திட்டம்**

| **ஒதுக்கப்பட்ட தொகை (ரூ. மி.)** | **நிதி முன்னேற்றம் (ரூ. மி.)** | **முன்னேற்ற வீதம் (%)** | **பௌதீக இலக்கு** | **பௌதீக முன்னேற்றம்** |
|---|---|---|---|---|
| 0.25 | 0.215 | 86% | 400 பயனாளிகளுக்குப் பயிற்சியளித்தல் | 869 பயனாளிகளுக்குப் பயிற்சியளிக்கப்பட்டது. |

- **<u>கருத்திட்டம்:</u> கிராம மட்டத்தில் தானிய/நறுமணச் சரக்கு விவசாய உற்பத்திகளைத் தயாரிக்கும் தொழிற்சாலைகளை நிறுவும் கருத்திட்டம்**

| **ஒதுக்கப்பட்ட தொகை (ரூ. மி.)** | **நிதி முன்னேற்றம் (ரூ. மி.)** | **முன்னேற்ற வீதம் (%)** | **பௌதீக இலக்கு** | **பௌதீக முன்னேற்றம்** |
|---|---|---|---|---|
| 0.05 | 0.046 | 92% | கிராம மட்டத்தில் தானிய/நறுமணச் சரக்கு விவசாய உற்பத்திகளைத் தயாரிப்பது தொடர்பில் 100 பயனாளிகளுக்குப் பயிற்சியளித்தல் | பயிற்சிக்காக மாத்தறை, குருணாகல் மாவட்டங்களிலிருந்து பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு 130 பயனாளிகளுக்குப் பயிற்சியளிக்கப்பட்டது. |

## (vii) தேசிய உரச் செயலகம்

### கொள்கை, தாபன ஒருங்கிணைப்பு, அனுமதிப் பத்திரப் பிரிவு

- 1988 ஆம் ஆண்டின் 68 ஆம் இலக்க உர ஒழுங்குபடுத்தற் சட்டத்தில் திருத்தங்களை மேற்கொண்டு, சட்ட வரைஞரினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள இறுதி வரைவு, கமநல சேவைகள், வனசீவராசிகள் அமைச்சின் இணக்கத்திற்காகவும், அங்கீகாரத்திற்காகவும் முன்வைக்கப்பட்டுள்ளது.
- உரத் தொழில் முயற்சிப் பணிகளை மேற்கொள்வதற்காக புதிதாக அனுமதிப் பத்திரங்களை விநியோகிக்கும் பணிகளும், பழைய அனுமதிப் பத்திரங்களைப் புதுப்பிக்கும் பணிகளும் முறையாகவும் தொடர்ச்சியாகவும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. உர இறக்குமதியின் கீழ் புதிதாக 08 அனுமதிப் பத்திங்கள் விநியோகிக்கப்பட்டு 53 பழைய அனுமதிப் பத்திரங்கள் புதுப்பிக்கப்பட்டுள்ளன. உர வகுத்தமைத்தலின் கீழ் புதிதாக 04 அனுமதிப் பத்திரங்கள் விநியோகிக்கப்பட்டு, 18 பழைய அனுமதிப் பத்திரங்கள் புதுப்பிக்கப்பட்டுள்ளன.
- அதேபோன்று உர உற்பத்தியின் கீழ் புதிதாக 02 அனுமதிப் பத்திரங்கள் விநியோகிக்கப்பட்டதுடன், 01 பழைய அனுமதிப் பத்திரம் புதுப்பிக்கப்பட்டது. உர விநியோகமும் சந்தைப்படுத்தலினதும் கீழ் புதிதாக 135 அனுமதிப் பத்திரங்கள் விநியோகிக்கப்பட்டதுடன், 19 பழைய அனுமதிப் பத்திரங்கள் புதுப்பிக்கப்பட்டுள்ளன.
- புதிய அனுமதிப் பத்திரங்கள் விநியோகத்தின் கீழ் ரூ. 305,000. வும் அனுமதிப் பத்திரங்கள் புதுப்பித்தலின் கீழ் ரூ. 1,420,000.00 வும் அரசாங்கக் கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது.
- 03 மாதங்களுக்கு ஒரு தடவை நடாத்தப்பட வேண்டிய உர ஆலோசனைக் குழுக் கூட்டங்கள் முறையே மார்ச், யூன், செப்தெம்பர், திசெம்பர் மாதங்களில் நடாத்தப்பட்டன.

### தொழில்நுட்ப, பொருளாதார மதிப்பீட்டு அலகு

2012 ஆம் வருடத்தில் இறக்குமதி செய்யப்பட்ட உர இருப்புகளுள் தரப் பகுப்பாய்வின் பின்னர் விநியோகிக்கப்பட்ட உர அளவுகள் வருமாறு:

| உர வகை | அளவு |
|---|---|
| யூரியா | 396,888.80 |
| மியூரியேற் ஒப் பொட்டாஷ் (M.O.P) | 144,676.74 |
| முக்கூட்டு சுப்பர் பொஸ்பேற் (T.S.P) | 109,708.41 |
| தனி சுப்பர் பொஸ்பேற் | - |
| அமோனியம் சல்பேற் | 74,334.05 |
| கீசரைட் | 10,517.87 |
| சின்க் சல்பேற் | 1,438.00 |
| டை அமோனியம் பொஸ்பேற் | 4,576.08 |
| கல்சியம் அமோனியம் நைற்ரேட் | 100.00 |
| எப்சம் சோல்ட் | 784.27 |

| | |
|---|---|
| பொட்டாசியம் சல்பேற் | 332.99 |
| கல்சியம் நைற்ரேட் | 337.00 |
| Seaweed (லீட்டர்) | 4,520.60 |
| Seaweed (லீட்டர்) | 10.01 |
| திரவ உரம் (லீட்டர்) | 241,221.80 |
| கலப்பு உரம் | 4,879.25 |

2012 சிறு போகத்திற்காக நெல் செய்கை பண்ணப்படுகின்ற நிலத்தின் அளவையும், உரச் சிபாரிசுகளையும் கருத்திற் கொண்டு உரத் தேவை மதிப்பீடு செய்யப்பட்டு உர இருப்புகள் விநியோகிக்கப்பட்டன. மேலும் 2012/2013 பெரும் போகத்திற்காக நெல் செய்கை பண்ணப்படுகின்ற நிலத்தின் அளவையும், உரச் சிபாரிசுகளையும் கருத்திற் கொண்டு உரத் தேவை மதிப்பீடு செய்யப்பட்டு தற்போது உர இருப்புகள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

**2012 சிறு போகம்**

| விடயம் | பாரிய நீர்ப்பாசனம் | சிறிய நீர்ப்பாசனம் | மழை நீர்ப்பாசனம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| பயிர்ச் செய்கை இலக்கு (ஹெக்டயார்) | 302,175 | 151,965 | 82,820 | 536,960 |

| விடயம் | பாரிய நீர்ப்பாசனம் | சிறிய நீர்ப்பாசனம் | மழை நீர்ப்பாசனம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| உரத் தேவை | 130,154.75 | 44,438.70 | 40,680.98 | 215,274.43 |
| உர விநியோகம் | 90,868.10 | 29,761.57 | 26,050.24 | 146,679.91 |

**2012/2013 பெரும் போகம்**

| விடயம் | பாரிய நீர்ப்பாசனம் | சிறிய நீர்ப்பாசனம் | மழை நீர்ப்பாசனம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| பயிர்ச் செய்கை இலக்கு (ஹெக்டயார்) | 336,570.00 | 207,041.00 | 209,821.00 | 753,432.00 |

| விடயம் | பாரிய நீர்ப்பாசனம் | சிறிய நீர்ப்பாசனம் | மழை நீர்ப்பாசனம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| உரத் தேவை | 166,556.23 | 57,313.73 | 50,242.33 | 274,112.29 |
| உர விநியோகம் (2012.12.31) | 143,476.35 | 46,980.35 | 40,011.89 | 230,468.59 |

- அரசாங்க விவசாயப் பண்ணைகளிலும் அரச நிறுவனங்களுக்குச் சொந்தமான வயல் காணிகளிலும் நெற் செய்கையை மேற்கொள்ளும் பொருட்டு மானிய உரம் வழங்கப்படுகின்றது.

**2012 சிறு போகம்**

| பயிர்ச் செய்கை இலக்கு (ஹெக்டயார்) | யூரியா (மெ.தொ.) | ரீ.எஸ்.பீ. (மெ.தொ.) | எம்.ஓ.பீ. (மெ.தொ.) | மொத்தம் (மெ.தொ.) |
|---|---|---|---|---|
| 1,161.10 | 229.25 | 75.70 | 65.87 | 370.82 |

**2012/2013 பெரும் போகம்**

| பயிர்ச் செய்கை இலக்கு (ஹெக்டயார்) | யூரியா (மெ.தொ.) | ரீ.எஸ்.பீ. (மெ.தொ.) | எம்.ஓ.பீ. மெ.தொ.) | மொத்தம் (மெ.தொ.) |
|---|---|---|---|---|
| 3,317.95 | 808.35 | 278.05 | 219.00 | 1,305.40 |

- **உர மானிய நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 2012.12.31 ஆம் திகதி வரை மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவு விபரம் வருமாறு:**

| விடயம் | செலுத்தப்பட்ட தொகை (ரூ.) |
|---|---|
| நெற் செய்கைக்கான உர மானியம் | 20,165,989,623.95 |
| தேயிலைக்கான உர மானியம் | 2,181,078,079.31 |
| தெங்குச் செய்கைக்கான உர மானியம் | 625,864,984.60 |
| பிற விவசாயப் பயிர்களுக்கும் பெருந் தோட்டப் பயிர்களுக்குமான உர மானியம் | 13,483,506,509.44 |
| **மொத்தம்** | **36,456,439,197.30** |

### (viii) வரையறுக்கப்பட்ட இலங்கை உரக் கம்பனி

1964 இல் ஆரம்பிக்கப்பட்ட இலங்கை உரக் கூட்டுத்தாபனம், 1992 இல் இலங்கை உரக் கம்பனி எனும் பெயரில் மீள நிறுவப்பட்டது. மஹிந்த சிந்தனை கொள்கைப் பிரகடனத்தில் கூறப்பட்டுள்ள, இலங்கை விவசாய மக்களுக்கு உர மானியம் வழங்கப்படும் எனும் கூற்றை யதார்த்தமாக்குவதில் முன்நின்று செயற்படும் முக்கிய அரச நிறுவனமான வரையறுக்கப்பட்ட இலங்கை உரக் கம்பனி அடைந்துள்ள முன்னேற்றம் வருமாறு:

1. கம்பனியின் 2011 - 2015 காலப்பகுதிக்கான இணைந்த திட்டமும், 2011 - 2013 காலப்பகுதிக்கான செயற் திட்டமும் தயாரிக்கப்பட்டு அமுல் செய்யப்பட்டு வருகின்றது.
2. கணக்காய்வு செய்யப்பட்ட கணக்கு அறிக்கைகள் உரிய நிறுவனங்களுக்குப் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளதுடன், 2012.03.31 திகதியுடன் முடிவடைந்த நிதியாண்டிற்கான வருடாந்த அறிக்கை தயாரிக்கப்பட்டு தற்சமயம் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.
3. அங்கீகரிக்கப்பட்ட 2013/2014 வருடத்திற்கான வரவு - செலவுத் திட்டம் அமுல் செய்யப்பட்டு வருகின்றது.
4. வருடாந்த கொள்முதல் திட்டம் தயாரிக்கப்பட்டு அமுல் செய்யப்பட்டது.
5. வருடாந்த கணக்காய்வுத் திட்டம் தயாரிக்கப்பட்டு அமுல் செய்யப்பட்டது.
6. கம்பனியின் பணியாட் தொகுதி கட்டமைப்பிற்கும் ஆட்சேர்ப்பு நடைமுறைக்கும் முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. அதே போன்று சகல ஆட்சேர்ப்புகளும் பதவியுயர்வுகளும் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்திற்குக் கட்டுப்பட்டு மேற்கொள்ளப்படும்.
7. 2007/2008 நிதியாண்டில் ரூ. 330.0 மில்லியன் எதிர்மறை தேறிய பொறுப்பைக் கொண்டிருந்த இலங்கை உரக் கம்பனியை, 2011/2012 நிதியாண்டாகும் போது கம்பனியின் தேறிய சொத்துக்களை ரூ. 543.0 மில்லியன் வரை விருத்தி செய்வதற்கு முடிந்தது.
8. 2011/2012 நிதியாண்டில் ரூ. 95.4 மில்லியனை வரிக்கு முந்நிய இலாபமாக ஈட்டி நிறுவன வரலாற்றில் சாதனை படைத்து வரிக்கு முந்திய இலாபத்தைக் காட்ட முடிந்தது. இதற்கு முன்னர் கம்பனியின் சாதனையாக 2010/2011 நிதியாண்டில் ஈட்டப்பட்ட ரூ. 73.9 மில்லியன் வரிக்கு முந்திய இலாபம் காணப்படுகின்றது.
9. 2009/2010 நிதியாண்டில் ரூ. 35.0 மில்லியனும், 2010/2011 நிதியாண்டில் ரூ. 43.6 மில்லியனும், 2011/2012 நிதியாண்டில் ரூ. 50.2 மில்லியனும் வருமான வரியாக அரசாங்கத்திற்குச் செலுத்தப்பட்டது.
10. முறையே 2009 ஆம் வருடத்தில் ரூ. 3.0 மில்லியனையும், 2010 ஆம் வருடத்தில் ரூ. 3.0 மில்லியனையும், 2011 ஆம் வருடத்தில் ரூ. 9. மில்லியனையும் பங்கிலாபமாகச் செலுத்த முடிந்தது.
11. ஹுனுப்பிட்டி, பொலநறுவை பிரதான களஞ்சியசாலைத் தொகுதி உட்பட தீவு முழுவதும் அமைந்துள்ள 54 களஞ்சியசாலைகளைக் கொண்ட களஞ்சிய வலையமைப்பின் கொள்ளளவு 150,000 மெற்றிக் தொன்னாகும். இதற்கமைய, தீவு முழுவதும் தாபிக்கப்பட்டுள்ள ***“லக்பொஹொர”*** வலையமைப்பின் ஊடாக 376 கமநல சேவை நிலையங்களுக்கு விநியோகிக்கப்படுகின்ற நெற் செய்கைக்கான மானிய

உரத்தை உரிய வேளைக்கு விவசாய மக்களுக்கு பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

12. நெற் செய்கைக்கான உர மானியத்தின் கீழ் 2011/2012 நிதியாண்டில் 306,691 மெற்றிக் தொன் உரம் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

13. நெற் செய்கைக்கான மானிய உர விற்பனையில் மட்டும் நின்றுவிடாது அரசாங்கம் 2011.05.06 ஆம் திகதி அறிமுகம் செய்த ஏனைய அனைத்துப் பயிர்களுக்கும் மானிய உரத்தை வழங்கும் வேலைத் திட்டத்தின் கீழ், அரசதுறையினதும் தனியார் துறையினதும் தேவைகளுக்கு ஏற்ப உரத்தைப் பெற்றுக் கொடுத்து, போட்டிமிகு சந்தையில் செயற்பட்டு சந்தையில் பெரும் பகுதியைக் கைப்பற்றுவதற்கு நிறுவனத்திற்கு முடிந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. நிறுவனத்தின் இந்த உர விற்பனை கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் 326% வீத அதிகரிப்பைக் காட்டுகின்றது. இதற்காக தீவு முழுவதும் சுமார் 750 விற்பனை முகவர்களைக் கொண்ட வலையமைப்பை நிறுவுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

14. அரசாங்கத்தின் "**திவிநெகும**" தேசிய நிகழ்ச்சித் திட்டத்திற்குச் சமாந்திரமாக நகர்ப்புற வீட்டுத் தோட்டச் செய்கையை இலக்கு வைத்து 500 கிராம் கொண்ட சிறிய உரப் பொதியொன்று ***"Mini Pack"*** எனும் பெயரில் அறிமுகம் செய்து வைக்கப்பட்டுள்ளது. தற்சமயம் இந்த ***"Mini Pack"*** உரப் பொதிகளை, சுப்பர் மார்கட் மூலமும், அரசாங்க வர்த்தகக் கூட்டுத்தாபனத்தின் காட்சியறைகள் மூலமும், அதனுடன் இணைந்த விற்பனை நிலையங்கள் மூலமும், "**லக்பொஹொர**" விற்பனை நிலையங்கள் மூலமும் கொள்வனவு செய்ய முடியும்.

15. சேவை மற்றும் நிருவாக நடவடிக்கைகள் சார்பில் **ISO-9001:2008** சர்வதேச தரச் சான்றிதழைப் பெற்றுக் கொள்வதற்கு இக் காலப்பகுதியில் கம்பனிக்கு முடிந்தமை குறிப்பிடத்தக்கது. இது அரச தொழில் முயற்சி என்ற ரீதியில் மாபெரும் வெற்றியாகும்.

16. கம்பனிக்குச் சொந்தமான ஆய்வுகூடத்தை சர்வதேச மட்டத்திலான அத்தாட்சிப்படுத்தப்பட்ட மத்திய ஆய்வுகூடமொன்றாக மாற்றியமைக்கும் பணிகள் தற்சமயம் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், இதற்காக **ISO/ICE/17025:2005** சர்வதேச தரச் சான்றிதழ் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. அதே போன்று இலங்கைக் கட்டளைகள் சபை உரம் தொடர்பான பரிசோதனைகளை மேற்கொள்ளக் கூடிய இலங்கையிலுள்ள மூன்று நிறுவனங்களுள் வருவதற்கான சந்தர்ப்பத்தை கம்பனி பெற்றுள்ளது. **(SLSI, ITI, CFC).**

17. கம்பனியில் பணியாற்றும் ஊழியர்களின் வினைத்திறனை விருத்தி செய்வதற்காக ஐம்பெரும் எண்ணக்கரு உள்ளிட்ட உற்பத்தி விளைவுப் பெருக்க எண்ணக்கருக்களை முதன்மையாகக் கொண்ட நிகழ்ச்சித் திட்டங்கள் நிறுவனத்தின் ஒவ்வொரு பிரிவும் உட்படுமாறு அமுல் செய்யப்பட்டுள்ளது. 2011 உற்பத்தி விளைவுப் பெருக்க விருது விழாவின் போது பாரிய அளவிலான உற்பத்தித் துறைக்குரிய விருதை கம்பனி தட்டிக் கொண்டது.

18. பொலநறுவை பிராந்திய களஞ்சியசாலைத் தொகுதியில் நீண்ட காலமாக பயன்படுத்தப்படாதிருந்த 04 கட்டிடங்கள், ஆகக் குறைந்த செலவில் ஊழியர்களின் பங்களிப்புடன் மறுசீரமைப்புச் செய்யப்பட்டு, 04 விடுமுறை விடுதிகளாக மாற்றப்பட்டன. இந்த முற்றுமுழுதான 04 விடுமுறை விடுதிகளையும், நிறுவனத்தைச் சேர்ந்த ஊழியர்களுக்கு சலுகை விலைக்கும், வெளி நபர்களுக்கு சந்தைக் கட்டணங்களின் அடிப்படையிலும் ஒதுக்கிக் கொள்வதற்கான வசதிகள் செய்யப்பட்டுள்ளன. இது நிறுவனத்திற்கு மேலதிக வருமானத்தை ஈட்டித் தரும் வழியாக அமைந்துள்ளது.

19. பசுமை உற்பத்தித் திறன் எண்ணக்கருவின் அடிப்படையில் ஹுனுப்பிட்டிய அலுவலக வளவில் அமைந்துள்ள லக்பொஹொர விவசாயப் பண்ணை அனைத்துப் பிரிவுகளையும் உள்ளடக்கிய சேதனப் பசளை மட்டும் பயன்படுத்தப்படுகின்ற மாதிரி விவசாயப் பண்ணையாக அபிவிருத்தி செய்யப்பட்டு முன்னெடுத்துச் செல்லப்படுகின்றது.

20. வலுச்சக்தி நுகர்வை குறைத்து அதனூடாக வலுச்சக்தியைப் பேணிப் பாதுகாப்பதற்கான முறையொன்று வகுக்கப்பட்டு அமுல் செய்யப்படுகின்றது.

21. விற்பனை ஊக்குவிப்பு நடவடிக்கைகளுக்காக பல்வேறு துறைகள் ஊடாகவும் இயங்குகின்ற இலங்கை உரக் கம்பனி சமூக சேவையாக, தேசிய கமக்காரர் வாரத்திற்குச் சமாந்திரமாக, ***“லக்பொஹொர சைக்கிள் சவாரி”*** வருடாந்தம் நடாத்தப்படுவதுடன், விவசாய மக்களின் பிள்ளைகளுள் 5 ஆம் ஆண்டில் கல்வி கற்கும் பிள்ளைகளை இலக்காகக் கொண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்கு ஆயத்தமாகும் வகையில் மாதிரி வினாப் பத்திரங்களையுடைய புலமைப் பரிசில் பயிற்சிப் புத்தகமொன்றும் வெளியிடப்பட்டது.

22. நிறுவனமிடமிருந்த அனைத்து பயன்படுத்தப்படாத பொருட்களும், உரிய நடைமுறைக்கு ஏற்ப பொறுப்பு நீக்கம் செய்யப்பட்டன.

## (ix) வரையறுக்கப்பட்ட கொழும்பு கொமர்ஷல் உரக் கம்பனி

**<u>பணிகள்:</u>**

- தீவின் நெற் செய்கைக்குத் தேவையான உரத் தேவையில் 35% வீதத்தை இறக்குமதி செய்து தீவு முழுவதும் அமைந்துள்ள கமநல சேவை நிலையங்களூடாக உர மானியத் திட்டத்தின் கீழ் சலுகை விலையில் விவசாய மக்களுக்கு தங்கு தடையின்றி உரிய வேளைக்கு விநியோகித்தல்.
- ஏனைய பயிர்ச் செய்கைகளுக்குத் தேவையான அனைத்துவித கலக்கப்பட்ட மற்றும் கலக்கப்படாத உர இருப்புகளை கமநல சேவை நிலையங்களூடாகவும் தீவு முழுவதும் பரந்து விரிந்து காணப்படுகின்ற விற்பனை முகவர்களூடாகவும் மானிய விலையில் விவசாய மக்களுக்கு தங்கு தடையின்றி விநியோகித்தல்.
- உரப் பாவனையின் போது விவசாய மக்களுக்கு எழுகின்ற பிரச்சினைகள் தொடர்பில் உடனடியாகச் செயற்பட்டு அவை தொடர்பில் தேவையான ஆலோசனைகளைப் பெற்றுக் கொடுத்தல்.

### 2012 ஆம் வருடத்தில் முன்னெடுக்கப்பட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள்

**1. 2012 தேசத்திற்கு மகுடம் தேசிய அபிவிருத்திக் கண்காட்சிக்குச் சமாந்திரமாக உரக் களஞ்சியசாலையொன்றை அமைத்தல்**

2012 தேசத்திற்கு மகுடம் தேசிய அபிவிருத்திக் கண்காட்சிக்குச் சமாந்திரமாக, அநுராதபுரம் மாவட்டத்தின் மிஹிந்தலை சீப்புக்குளம் கிராமத்தில் ............ சதுர அடிகளைக் கொண்ட சுமார் 2,500 மெற்றிக் தொன் கொள்ளளவுடைய களஞ்சியசாலையொன்று ரூ. 13.5 மில்லியன் செலவில் அமைக்கப்பட்டதுடன், ஏப்பிறல் 09 ஆம் திகதி இக் களஞ்சியசாலை திறந்து வைக்கப்பட்டது.

**2. நிருவாகக் கட்டிடத்தை அமைத்தல்**

நிறுவனத்தின் நிருவாக நடவடிக்கைகளை உரிய முறையில் மேற்கொள்வதற்கான நிருவாகக் கட்டிடமொன்றிற்கான கடும் தேவை, இந் நிறுவனம் 1994 இல் தனியார் மயப்படுத்தப்பட்டதன் பின்னரும், மீண்டும் 1996 இல் அரசுக்கு சுவீகரிக்கப்பட்டதன் பின்னரும் காணப்பட்டதுடன், இதற்குத் தீர்வாக ரூ. 44.0 மில்லியன் செலவில் 10,000 சதுர அடிகளைக் கொண்ட இரண்டு மாடி நிருவாகக் கட்டிடத்தின் நிர்மாணப் பணிகள் 2012 ஆம் வருடத்தில் ஆரம்பிக்கப்பட்டதுடன், 2013 ஏப்பிறல் மாதமாகும் போது இந் நிருவாகக் கட்டிடத்தின் நிர்மாணப் பணிகள் பூர்த்தியடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது. இதற்குத் தேவையான நிதி நிறுவனத்தின் வர்த்தக நடவடிக்கைகள் மூலம் ஈட்டப்பட்டது.

**3. உரக் களஞ்சியசாலையொன்றை அமைத்தல்**

உரத் தேவையில் சுமார் 35% வீதத்தை கமநல சேவை நிலையங்களுக்கு விநியோகிக்கும் நடவடிக்கையின் போது நிறுவனத்தின் வசமுள்ள களஞ்சியசாலை வசதிகள் போதாதிருப்பதானது, நிறுவனம் தற்சமயம் முகங் கொடுத்துள்ள பிரதான சவாலாகக் காணப்படுகின்றது. இதற்குத் தீர்வாக ரூ. 61.0 மில்லியன் செலவு மதிப்பீட்டில் 22,000 சதுர அடிகளைக் கொண்ட 8,000 மெற்றிக் தொன் கொள்ளளவுடைய புதிய களஞ்சியசாலையொன்றை, ஹுனுப்பிட்டி பிரதான களஞ்சியசாலைத் தொகுதி அமைந்துள்ள வளவை அண்டியதாக அமைக்கும் பொருட்டு தற்சமயம் நிலம் செப்பனிடப்பட்டுள்ளது. இக் கட்டிடத்தின் நிர்மாணப் பணிகளுக்காக கேள்விப் பத்திரங்கள் கோரப்பட்டுள்ளதுடன், இதற்கான நிதி கொழும்பு கொமர்ஷல் உரக் கம்பனியால் ஈட்டப்பட்ட வருமானத்தைக் கொண்டு திரட்டப்பட்ட நிதியமாக இருக்கின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது.

**மானிய உர விநியோகம் - 2012.12.31 ஆம் திகதிக்கு முன்னேற்றம்**

| மாவட்டம் | உரவகை (மெ.தொ.) | | | மொத்தம் (மெ.தொ.) | புரள்வு வருமானம் (ரூ.) |
|---|---|---|---|---|---|
| | யூரியா | ரீ.எஸ்.பீ. | எம்.ஓ.பீ. | | |
| கொழும்பு | 222.45 | 99.05 | 180.40 | 501.90 | 3,151,932.00 |
| கம்பஹா | 1036.05 | 477.40 | 470.80 | 1984.25 | 12,461,090.00 |
| களுத்துறை | 933.00 | 484.35 | 795.05 | 2212.40 | 13,893,872.00 |
| கண்டி | 365.15 | 171.80 | 140.45 | 677.40 | 4,254,072.00 |
| மாத்தளை | 1922.85 | 612.85 | 508.90 | 3044.60 | 19,120,088.00 |
| நுவரெளியா | 243.15 | 117.60 | 119.65 | 480.40 | 3,016,912.00 |
| காலி | 700.30 | 327.05 | 589.80 | 1617.15 | 10,155,702.00 |
| மாத்தறை | 1344.35 | 568.60 | 857.55 | 2770.50 | 17,398,740.00 |
| ஹம்பாந்தோட்டை | 5619.40 | 1885.20 | 1583.15 | 9087.75 | 57,071,070.00 |
| குருணாகல் | 8522.00 | 2678.70 | 2337.65 | 13538.35 | 85,020,838.00 |
| புத்தளம் | 2247.50 | 708.90 | 612.65 | 3569.05 | 22,413,634.00 |
| இரத்தினபுரி | 1460.20 | 487.80 | 489.45 | 2437.45 | 15,307,186.00 |
| கேகாளை | 189.95 | 84.55 | 88.55 | 363.05 | 2,279,954.00 |
| பதுளை | 2967.20 | 1128.60 | 913.80 | 5009.60 | 31,460,288.00 |
| மொனறாகலை | 4161.90 | 1327.75 | 1122.05 | 6611.70 | 41,521,476.00 |
| அநுராதபுரம் | 14121.20 | 4649.35 | 3838.45 | 22609.00 | 141,984,520.00 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பொலநறுவை | 6395.30 | 2111.80 | 1782.20 | 10289.30 | 64,616,804.00 |
| மட்டக்களப்பு | 3097.70 | 1080.45 | 834.25 | 5012.40 | 31,477,872.00 |
| அம்பாறை | 14062.70 | 4644.00 | 3698.90 | 22405.60 | 140,707,168.00 |
| திருகோணமலை | 4808.40 | 1566.05 | 1199.60 | 7574.05 | 47,565,034.00 |
| வவுனியா | 1750.00 | 562.50 | 418.75 | 2731.25 | 17,152,250.00 |
| முல்லைத்தீவு | 1285.20 | 412.35 | 364.70 | 2062.25 | 12,950,930.00 |
| மன்னார் | 2493.05 | 773.65 | 693.00 | 3959.70 | 24,866,916.00 |
| கிளிநொச்சி | 1883.75 | 512.00 | 461.50 | 2857.25 | 17,943,530.00 |
| **மொத்தம்** | **81,832.75** | **27,472.35** | **24,101.25** | **133,406.35** | **837,791,878.00** |

## 07. நிதி அறிக்கை

### 7.1. அமைச்சின் நிதி முன்னேற்றம் - 2012.12.31 வரை

தலைப்பு - 118 - நிகழ்ச்சித் திட்டம் 01 செயற்பாட்டு நிகழ்ச்சித் திட்டம் - அமைச்சர் அலுவலகம்

| விபரம் | 2012 மதிப்பீடு (ரூ. மி.) | திருத்தப்பட்ட மதிப்பீடு (ரூ. மி.) | மொத்தச் செலவு (ரூ. மி.) | வீதம் (%) |
|---|---|---|---|---|
| **மீண்டெழும் செலவு** | **30.15** | **32.264** | **31.458** | **98** |
| தனிநபர் வேதனாதிகள் | 10.5 | 11.075 | 10.669 | 96 |
| பிரயாணச் செலவுகள் | 2.5 | 5.324 | 5.284 | 99 |
| வழங்கல்கள் | 6.25 | 6.75 | 6.577 | 97 |
| பராமரிப்புச் செலவுகள் | 5.5 | 5.9 | 5.89 | 100 |
| சேவை | 5.4 | 3.215 | 3.036 | 94 |
| **மூலதனச் செலவு** | **7.9** | **7.8** | **7.050** | **90** |
| மூலதனச் சொத்துக்களை புனரமைத்தலும் மேம்படுத்தலும் | 7.2 | 6.739 | 6.237 | 93 |
| மூலதனச் சொத்துக்களை எடுத்துக் கொள்ளல் | 0.7 | 1.061 | 0.812 | 77 |
| **முழுக் கருத்திட்டங்களினதும் செலவு** | **38.050** | **40.064** | **38.508** | **96** |

தலைப்பு - 118 - நிகழ்ச்சித் திட்டம் 01 - செயற்பாட்டு நிகழ்ச்சித் திட்டம்

கருத்திட்டம் 02 - தாபன நிருவாகச் சேவைகள்

| விபரம் | 2012 மதிப்பீடு (ரூ. மி.) | திருத்தப்பட்ட மதிப்பீடு (ரூ. மி.) | மொத்தச் செலவு (ரூ. மி.) | வீதம் (%) |
|---|---|---|---|---|
| **மீண்டெழும் செலவு** | **88.390** | **87.193** | **85.225** | **98** |
| தனிநபர் வேதனாதிகள் | 49.0 | 47.8 | 46.067 | 96 |
| பிரயாணச் செலவுகள் | 1.35 | 1.425 | 1.418 | 100 |
| வழங்கல்கள் | 6.64 | 7.54 | 7.45 | 99 |
| பராமரிப்புச் செலவுகள் | 8.0 | 8.57 | 8.556 | 100 |
| சேவை | 22.2 | 20.144 | 20.066 | 100 |
| மாற்றல்கள் | 1.2 | 1.714 | 1.666 | 97 |
| நட்டங்களும் பதிவழித்தலும் | | 0.514 | 0.514 | 100 |
| **மூலதனச் செலவு** | **12.8** | **12.35** | **11.711** | **92** |
| மூலதனச் சொத்துக்களை புனரமைத்தலும் மேம்படுத்தலும் | 7.85 | 6.698 | 6.683 | 100 |
| மூலதனச் சொத்துக்களை எடுத்துக் கொள்ளல் | 3.95 | 5.050 | 4.241 | 84 |
| திறன் விருத்தி | 1.0 | 1.0 | 0.787 | 79 |
| **முழுக் கருத்திட்டங்களினதும் செலவு** | **101.19** | **99.941** | **96.937** | **97** |

**தலைப்பு - 118 - நிகழ்ச்சித் திட்டம் 02 - அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்**

**கருத்திட்டம் 03 - கமத்தொழில் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்**

| விபரம் | 2012 மதிப்பீடு (ரூ. மி.) | திருத்தப்பட்ட மதிப்பீடு (ரூ. மி.) | மொத்தச் செலவு (ரூ. மி.) | வீதம் (%) |
|---|---|---|---|---|
| **மீண்டெழும் செலவு** | **77.29** | **75.073** | **73.087** | **97** |
| தனிநபர் வேதனாதிகள் | 24.95 | 25.535 | 24.010 | 94 |
| பிரயாணச் செலவுகள் | 2.35 | 3.674 | 3.595 | 98 |
| வழங்கல்கள் | 3.53 | 3.374 | 3.225 | 96 |
| பராமரிப்புச் செலவுகள் | 2.26 | 2.26 | 2.25 | 100 |
| சேவை | 14.2 | 11.33 | 11.313 | 100 |
| மாற்றல்கள் | 30.0 | 28.9 | 28.691 | 99 |
| **மூலதனச் செலவு** | **2058.947** | **1881.841** | **1536.591** | **82** |
| மூலதனச் சொத்துக்களை புனரமைத்தலும் மேம்படுத்தலும் | 0.95 | 2.15 | 2.101 | 98 |
| மூலதனச் சொத்துக்களை எடுத்துக் கொள்ளல் | 1.05 | 1.05 | 1.048 | 100 |
| திறன் விருத்தி | 0.1 | 0.1 | 0.04375 | 44 |
| ஏனைய மூலதனச் செலவுகள் | 2056.847 | 1878.5 | 1533.39 | 82 |
| விளைச்சல் முன்னறிவிப்பு நிகழ்ச்சித் திட்டம் | 4.0 | 0.3 | 2.126 | 71 |
| மண்வளப் பாதுகாப்பு நிகழ்ச்சித் திட்டம் | 20 | 12.414 | 9.427 | 76 |
| நுண் நீர்ப்பாசனமும் மழைநீர் முகாமைத்துவமும் நிகழ்ச்சித் திட்டம் | 20 | 7.586 | 6.16 | 81 |
| “நாம் நடுவோம் - நாட்டைக் கட்டியெழுப்புவோம்” விசேட நிகழ்ச்சித் திட்டம் | 460 | 403.18 | 313.11 | 68.1 |
| சேதனப் பசளை உற்பத்தி, ஊக்குவிப்பு நிகழ்ச்சித் திட்டம் | 125 | 100 | 92.74 | 93 |
| (2 KR) ஜப்பான் எதிர்மறை நிதியின் கீழ் அரசாங்க விதை உற்பத்திப் பண்ணைகளை அவிருத்தி செய்தல் (முருங்கன், பரந்தன்) | 84.847 | 72.752 | 52.599 | 72.29 |
| உலர்வலய ஜீவனோபாய ஒத்துழைத்தல் நிகழ்ச்சித் திட்டம் (IFAD ) | 613 | 573 | 530.391 | 92.56 |
| உணவு உற்பத்திக்கான ஜப்பான் கொடை (2 KR) | 585 | 493.70 | 430.466 | 87.19 |
| தேசிய விவசாய ஆராய்ச்சித் திட்டம்(NARP) | 20 | 10 | 5.056 | 50.56 |
| பெரிய வெங்காய விதை உற்பத்தி நிகழ்ச்சித் திட்டம் | 25 | 25 | 7.472 | 30 |
| தேசத்திற்கு மகுடம் நிகழ்ச்சித் திட்டம் | 60 | 60 | 38.315 | 64 |
| மன்னார் மாவட்டத்தில் இடம்பெயர்ந்த மக்களின் உணவுப் பாதுகாப்பை | 40 | 60.14 | 44.594 | 76 |

| | | | | |
|---|---|---|---|---|
| ஏற்படுத்தல் | | | | |
| அரிசி ஏற்றுமதி வலய நிகழ்ச்சித் திட்டம் | | 0.94 | 0.94 | 100 |
| **முழுக் கருத்திட்டங்களினதும் செலவு** | **2136.237** | **1956.915** | **1609.679** | **82** |

**<u>நிகழ்ச்சித் திட்டம் - 02 அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்</u>**

**<u>கருத்திட்டம் 5 கமத்தொழில்/ கமநல அபிவிருத்தி நிறுவனங்களும் கம்பனிகளும்</u>**

| விபரம் | 2012 மதிப்பீடு (ரூ. மி.) | திருத்தப்பட்ட மதிப்பீடு (ரூ. மி.) | மொத்தச் செலவு (ரூ. மி.) | வீதம் (%) |
|---|---|---|---|---|
| **மீண்டெழும் செலவு** | **235** | **230.3** | **218.307** | **95** |
| நிதி மாற்றல்களும் மானியங்களும் | | | | |
| ஹெக்டர் கொப்பேகடுவை விவசாய ஆராய்ச்சி, பயிற்சி நிறுவகம் | 115 | 112.7 | 108.487 | 96 |
| இலங்கை ஹதபிம அதிகார சபை | 36 | 35.28 | 34.352 | 97 |
| அறுவடைக்குப் பிந்திய தொழில்நுட்ப நிறுவனம் | 50 | 49 | 46.601 | 95 |
| விவசாய ஆராய்ச்சி, கொள்கைப் பேரவை | 22 | 21.56 | 18.462 | 86 |
| தேசிய உணவு ஊக்குவிப்புச் சபை | 12 | 11.76 | 10.403 | 88 |
| **மூலதனச் செலவு** | **120** | **109.2** | **55.212** | **51** |
| அரசாங்க நிறுவனங்களுக்கான மாற்றல்கள் | | | | |
| ஹெக்டர் கொப்பேகடுவை விவசாய ஆராய்ச்சி, பயிற்சி நிறுவகம் | 10 | 9.1 | 5.261 | 58 |
| இலங்கை ஹதபிம அதிகார சபை | 70 | 63.7 | 29.996 | 47 |
| விவசாய ஆராய்ச்சி, கொள்கைப் பேரவை | 30 | 27.3 | 19.955 | 73 |
| தேசிய உணவு ஊக்குவிப்புச் சபை | 10 | 9.1 | - | 0 |
| **முழுக் கருத்திட்டங்களினதும் செலவு** | **355** | **339.5** | **273.520** | **81** |

### 7.2 அமைச்சின் உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகள்

அமைச்சின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு முறையாகத் தாபிக்கப்பட்டு முன்னெடுத்துச் செல்லப்படுவது 2011 யூன் மாதம் 01 ஆம் திகதியிலிருந்தாகும்.

- **கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களை நடாத்தல்**

  இலக்கு 04, முன்னேற்றம் 04.

**கணக்காய்வு விசாரணைகளும், விசேட புலனாய்வுகளும் - 2012 ஆம் வருடத்தில் முன்னேற்றம்**

| | நிறுவனம் | | இலக்கு | 2012 ஆம் வருடத்தில் அனுப்ப ப் பட்ட கணக்காய்வு விளக்கங்கள்/விசாரணை அறிக்கைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1. | **கமத்தொழில் அமைச்சு** | 1. | வாகனங்களைப் பழுதுபார்த்தல் தொடர்பான விசாரணை | 11 |
| | | 2. | பொருட் பட்டியல் ஏடு மற்றும் நிலையான சொத்துக்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு விசாரணை | |
| | | 3. | குளிரூட்டி மற்றும் போட்டோப் பிரதி இயந்திரங்களை சேவை பண்ணுதல் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு விசாரணை | |
| | | 4. | குழும வாகனங்களின் ஓட்டக் குறிப்புகளைப் புலனாய்வு செய்தல் | |
| | | 5. | குழும வாகனங்களின் எரிபொருள் நுகர்வு தொடர்பில் புலனாய்வு செய்தல் | |
| | | 6. | வாகன பழுதுபார்ப்பு தொடர்பில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகளின் அடிப்படையில் ஆரம்ப விசாரணை மேற்கொள்ளல் | |
| | | 7. | வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுகளைப் பரீட்சித்தல் | |
| | | 8. | கமக்காரர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் மூலம் விவசாயக் கிணறுகளை அமைத்தல் தொடர்பிலான கணக்காய்வு விசாரணை | |
| | | 9. | மின்சாரப் பட்டில்களைப் பரீட்சித்தல் | |
| 2. | **தேசிய உணவு ஊக்குவிப்புச் சபை** | 1. | விற்பனை நிலையங்கள் தொடர்பா கணக்காய்வு விசாரணை | 05 |
| | | 2. | சுவந்தில் ஸ்லோபுட் உணவகத்திற்காக கொள்வனவு செய்யப்பட்ட உபகரணங்கள் | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | தொடர்பிலான கணக்காய்வு விசாரணை | |
| | | 3. | சுவபோஷ உப உணவுக் கருத்திட்டம் தொடர்பிலான கணக்காய்வு விசாரணை | |
| | | 4. | நாராஹேன்பிட்டி கிரிமண்டல மாவத்தை, இல. 55/2 இல் அமைந்துள்ள உத்தியோகபூர்வ இல்லம் தொடர்பிலான கணக்காய்வு விசாரணை | |
| 3. | **இலங்கை விவசாய ஆராய்ச்சி, கொள்கைப் பேரவை** | 1. | உள்ளகக் கணக்காய்வுப் பரிசோதனை | 01 |
| 4. | **உலர் வலய ஜீவனோபாய பங்குபற்றல், ஒத்துழைத்தல் நிகழ்ச்சித் திட்டம்** | 1. | உள்ளகக் கணக்காய்வுப் பரிசோதனை (குருணாகல், மொனறாகலை, அநுராதபுரம்) | 02 |
| | | 2. | விசேட பொருட்கள் மதிப்பீடு (பதுளை, மொனறாகலை, அநுராதபுரம், குருணாகல்) | |
| 5. | **விவசாயத் திணைக்களம்** | 1. | அநுராதபுரம் விவசாயக் கல்லூரி அதிபரின் நிருவாகம் தொடர்பில் ஜனாதிபதி செயலகத்தினால் அனுப்பப்பட்ட கடிதம் தொடர்பிலான விசேட புலனாய்வு | 08 |
| | | 2. | கிராந்துருக்கோட்டே விவசாய ஆராய்ச்சி நிலையம் தொடர்பான விசேட புலனாய்வு | |
| | | 3. | அம்பலாந்தோட்டை நெல் ஆராய்ச்சி நிறுவனம் தொடர்பிலான விசேட புலனாய்வு | |
| | | 4. | இறக்குமதி அனுமதிப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளும் போது ஏற்படுகின்ற தாமதங்கள் தொடர்பிலான விசேட புலனாய்வு | |
| | | 5. | செடிகள் உயிர்ஊன்ம வள நிலையத்தின் நடவடிக்கைகள் தொடர்பிலான விசேட புலனாய்வு | |
| | | 6. | சேதனப் பசளை கருத்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ள ஆய்வுகூட உபகரணங்களின் பயன்பாடு | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | தொடர்பில் போம்புவல, ஹொரணை ஆராய்ச்சி நிலையங்களில் மேற்கொள்ளப்பட்ட விசேட புலனாய்வு | |
| | | 7. | சீதாஎளிய விதை உருளைக்கிழங்கு உற்பத்திப் பண்ணை தொடர்பிலான விசேட புலனாய்வு | |
| | | 8. | பண்டாரகமை தோட்டயியல் விவசாயப் பண்ணை தொடர்பிலான விசேட புலனாய்வு | |
| 6. | **அறுவடைக்குப் பிந்திய தொழில்நுட்ப நிறுவனம்** | 1. | அநுராதபுரம் அலுவலகத்தில் மேற்கொள்ளப்பட்ட உள்ளகக் கணக்காய்வு விசாரணை | 02 |
| | | 2. | நுவரெளியா அலுவலகத்தில் மேற்கொள்ளப்பட்ட உள்ளகக் கணக்காய்வு விசாரணை | |
| 7. | **இலங்கை ஹதபிம அதிகார சபை** | 1. | உள்ளகக் கணக்காய்வு விசாரணை | 01 |
| 8. | **ஹெக்டர் கொப்பேகடுவை விவசாய ஆராய்ச்சி, பயிற்சி நிறுவகம்** | 1. | விசேட கணக்காய்வு விசாரணை | 01 |